Office of the Registrar of Books & Newspapers,
26 APR 1953
RECEIVED.

வாரப் பதிப்புவிலை சதம் 10

சுதந்திரன்
ESUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

புத்தகம் 8 பன்மத ஹே சித்திரை மீ 4ஏ [17-4-55] ஞாயிற்றுக்கிழமை ஷஃபான பிறை 23 இதழ் 46

USHA உஷா

கை மெஷின் ரூ. 225-00.
டிரெடல் ரூ. 315-00.
போல்டிங் ரூ. 340-00.

சோல் ஏஜண்ட்: G H. REIMOO.
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 6060.

பிரஜைகளாகப் பதிவு செய்யாதவர்களுக்கு பேரிடி விழும்!

நாடற்றோருக்கு வேலை கொடுப்பதை சட்ட விரோதமாக்க சிபார்சு

புதுடில்லி ஒப்பந்தத்தை கிழித்தெறிய குழு வகுத்து வரும் சதித்திட்டம்

(நமது நிருபர்)

சமீபத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் கைச்சாத்தாகிய டில்லி ஒப்பந்தத்தை கிழித்து வீசிவிடக் கோரி டட்லி கோஷ்டியினர் பிரதமரிடம் சமர்ப்பித்த வேண்டுகோளை சில வாரங்களுக்கு முன் சுதந்திரனில் பிரசுரித்திருந்தோம்.

இப்போது இன்னுமோர் திடுக்கிடும் செய்தி நமக்குக் கிடைத்துள்ளது. இலங்கையர்களாகவோ, இந்தியர்களாகவோ இது காலவரை பதிவு செய்யாதவர்களை நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு உத்தியோகபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் கமிட்டி திட்டமிட்டு வருவதாக இந்த செய்தி மூலம் தெரியவருகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறையில் அமுல் செய்வதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உபகமிட்டி ஒரு சதித்திட்டத்தை உருவாக்கியுள்ளது. இலங்கையர்களாகவோ இந்தியர்களாகவோ இது காலவரை பதிவு செய்யாத நாடற்றவர்களை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கப்படாது என்று இந்தக் கமிட்டி அரசாங்கத்திடம் சிபார்சு செய்திருக்கிறது.

இலங்கை பிரஜைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் எதுவும் இந்த ரகத்தைச் சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்படாதுஎன்று உபகமிட்டி மேலும் கூறியிருக்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கிழித்தெறியுமாறு பாராளுமன்ற அரசாங்கக் கட்சியின் ஒரு பகுதியினர் ஆரம்பித்த இயக்கம் வலுவடைந்துள்ளதாகவும், இந்தப் பகுதியினரின் நிர்ப்பந்தம் அதிகரித்து வருவதாகவும் தெரிகிறது. நிலைமையைச் சமாளிப்பதற்கு உபகமிட்டியின் மேற்படி சிபார்சுகளை அரசாங்கம் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளும் என்றும் நம்பப்படுகிறது. ஆட்சிப் பொறுப்பு வகிக்கும் ஆளும் கட்சித் தலைவர்களின் உத்தரவின் பேரிலேயே இந்த சிபார்சுகளை உபகமிட்டி முன்வைத்திருக்கலாம் என்றும் சில வட்டாரங்களில் யூகிக்கப்படுகிறது.

உபகமிட்டியின் இந்த சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதென்றால் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒழித்துக் கட்டப்படுகிறது என்று அர்த்தம்.

இதைத் தொடர்ந்து நாடற்றவர்களை வேலைக்கமர்த்துவதை சட்டவிரோதமாக்கும் சட்டத்தை அரசாங்கம் இயற்றும் என்று அந்தரங்கமாக நம்பப்படுகிறது.

முன்பு ஒரு தடவை இந்த சட்டத்தை கொண்டுவர அரசாக்கம்முனைந்ததுநேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்போது இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையை எதிர்த்து நாட்டிலே உள்ள நல்லெண்ணம் கொண்டவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதைத் தொடர்ந்து முற்றிய நெருக்கடியால் தான் மீண்டும் இரண்டாந்தடவையாக புதுடில்லி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. (9-ம் பக்கம் பார்க்க)

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மறமறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலங்கடத்தாமல்



உடனே வாங்கிச் சாப்பிடுங்கள் — ரிச்லெட்ஸ் பிளட் பியூரிபயர்

கேட்லாக் இனாம்!

வெஸ்டன் ஏஜென்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885

பதிவுபிரஜைகள் சிலரின் பிரஜா உரிமை

அவசியம் ஏற்பட்டால் ரத்து செய்ய அரசாங்கம் ஆலோசனை

(நமது நிருபர்)

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டிருக்கும் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்கள் ஒரு சிலரின் பிரஜா உரிமையை பறிமுதல் செய்துவிட அரசாங்கம் ஆலோசித்து வருவதாக ஒரு வதந்தி சுதந்திரனுக்கு எட்டியிருக்கிறது.

அரசாங்கத்திற்கு விரோதமாக காரியம் பார்ப்பவர்கள் என்று கருதப்படும் பதிவுப் பிரஜைகள் ஒரு சிலரின் உரிமையை ரத்துச் செய்து அவர்களை நாடு கடத்தி விட அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் இப்படி பிரஜா உரிமை ரத்துச் செய்யப்பட விருப்பவர்களுள் எதிர்க்கட்சியிலுள்ள பிரதிநிதிகளின் மனைவிகளும், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்களுள் ஒரு சிலரும் அடங்கியிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

சுமார் ஏழு பிரமுகர்களின் பெயர்கள் இந்தப் பிரஜாபிதாவில் இடம் பெற்றிருக்கின்றனவென்றும், இவர்களுடைய பிரஜா உரிமை எந்த சமயத்திலும் ரத்து செய்யப்படலாம் என்றும் தெரியவருகிறது

தமிழரசுக் கட்சி மகாநாடு பற்றி இளைஞரிடையே பெரும் ஆர்வம்

சைக்கிள் பவனியிலும், "புதையல் வேட்டை"ப் போட்டியிலும் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொள்வர்

புதிய தலைவர் திரு. ஸி. வன்னியசிங்கம் கட்சிப் பொறுப்பை ஏற்பார்

திருகோணமலை ஏப் 14—

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூன்றுவது தேசிய மகாநாட்டையொட்டி திருகோணமலையில் மிகுந்த உற்சாகமும் எழுச்சியும் காணப்படுகின்றன. பிரமாதமான ஏற்பாடுகளுடன் திட்டமிடப்பட்டிருக்கும் இம்மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் இனப்பற்றும் மொழிப்பற்றும்கொண்ட தமிழ்-முஸ்லிம் இளைஞர்கள் பேரார்வம் காட்டி வருகின்றனர். இம்மகாநாடு ஏப்ரல் 15, 16, 17ந் திகதிகளில் திருகோணமலையிலும் குச்சவெளியிலும் நடைபெறும்.

மகாநாட்டு நிகழ்ச்சிகளை விட இரண்டு அம்சங்கள் இளைஞரிடையே பெரும் கவர்ச்சியை ஏற்படுத்துவனவாய் அமைந்திருக்கின்றன. ஒன்று திருகோணமலையிலிருந்து குச்சவெளிக்கு செல்லும் சைக்கிள் பவனி. மற்றொன்று இந்த சைக்கிள் பவனியில் கலந்துகொள்ளும் வாலிபரிடையே ஏற்படுத்தப்பட்டிருக்கும் "புதையல் வேட்டை" என்னும் புது முறையான ஒரு போட்டி. இதாவது குச்சவெளியிலிருந்து திரும்பி வரும்போது குறிப்பிட்ட சில பொருட்களைக் கண்டெடுப்பது, சில விவரங்களைச் சேகரிப்பது ஆகியவற்றைக்கொண்ட ஒரு போட்டி. இந்தப்போட்டியில் சுமார் 24 கேள்விகள் இடம் பெற்றிருக்கின்றன. அதிகப்படியான புள்ளிகள் எடுக்கும் பத்துப் பேர் பரிசுகள் பெறுவார்கள்.

மகாநாடு ஏப்ரல் 15ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அர்ச். அந்தோனியார் பாடசாலையில் ஆரம்பமாகிறது. நிர்வாக சபை அங்கத்தவர்களை மட்டும்கொண்ட ஆலோசனைக் கூட்டம் அப்போது நடைபெறும். அடுத்தநாள், அதாவது ஏப்ரல் 16ந் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு அமைத இடத்தில் பொதுச் சபை கூடுகிறது. உத்தியோகஸ்தர் தெரிவும், தீர்மானங்கள்மீது விவாதமும் நடைபெறும். அன்று பிற்பகல் 1 மணிக்கு பெருந்தெரு

(12-ம் பக்கம் பார்க்க)

கல்கி

ஆசிரியர் 'சோமு' அவர்கள் எழுதும்

ரவிசந்திரிகா

புதிய தொடர் கதை

17-ந் திகதி கல்கி இதழில் ஆரம்பமாகிறது

சோல் ஏஜண்ட்:

வெஸ்டன் நியூஸ் ஏஜன்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தபின் மனிதன் சிவலோகம்-வைகுண்டம் போகிறானா?

கண்ணுக்குத் தெரியாத ஆத்மாவை பற்றி ஆராய்வது வேலை மினக்கேடு

மாண்டோரின் ஆத்மசாந்திக்காக அகிலமெங்கும் கையாளப்படும் அனுச்சார முறைகள்

உயிரோடிருப்பவன் உந்தி கொதிக்கும்போது மரித்தவனுக்காக கோடி பொன் கொட்டி சமாதியா?

செத்த ஆத்மாவுக்கு அறு சுவை உணவு படைக்கும் பகுத்தறிவற்ற விகாரங்கள்

செத்த பின்பு மனிதன் என்ன ஆகிறான்? அவனது சுந்தரமான உடலை தீ தின்றுவிடுகின்றது. ஆனால்...இதுவரை அவனை ஆட்டிப்படைத்த அந்த "ஆத்மா"?...கண் முன்னர் தெரியும் வேறு பல பிரச்னைகள் இருக்கும் போது பகுத்தறிவுவாதிக்கு கண்ணுக்குத் தெரியாத அதைப் பற்றி யெல்லாம் ஏன் வீண் ஆராய்ச்சி?— என்று அதட்டிக் கேட்கிறார் டாக்டர் பராஞ்சிபை. "மரணத்திற்குப் பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கிறதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயம்" இன்னும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாத அந்த சாவுப் பிரச்னையைப் பற்றி, ஆராய்ச்சிக் கருவிகளும் உலைக் கூடமும் இல்லாத நாம் ஏன் குழப்பிக்கொள்ள வேண்டும்?—டாக்டர் பராஞ்சிபை எழுப்பும் கேள்வி இதுதான்!

பூவுலக வாழ்க்கைக்கும், விண்ணுலக வாழ்க்கைக்கும் மத்தியில் ஏற்படும் மரணம் எனும் ஏதோ ஓர் வித நிகழ்ச்சியைப் பற்றிய கொள்கைகள்தான் மதத்தைப் பிரபலமாகப் போற்றும் மதவாதிகளின் மூல பலம் என்றுகூறலாம்.

உயிரின் ஆதியையும் அந்தத்தையும் அறியவேண்டுமென்ற அவாவானது எக்காலத்தும் ஒரே தன்மையில் இருத்தல்கவனித்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், ஏதோ ஒரு காலத்திலாவது ஒரு பரம அணுவை, தாங்களாகவே சிருஷ்டித்தல் கூடும்: ஆனால் அதற்கு அறிவைப் புகட்டி பலவித மேலறிவுப் பிராணிகளாகத் தோற்றுவிக்க அவர்களால் முடியாது; முடியவும் முடியாது; முடியப் போவதும் இல்லை? "ஜடம்" என்ற அசேதனப் பொருளிலே "ஆத்மா"வெனும் சத் பொருள் ஒன்று அதற்கு அன்னியமாக இருக்கின்றதா இல்லையா என்பதைப் பற்றி நாம் இங்கு ஆராயப்புகவில்லை; எனினும் ஜடப் பொருள் இன்றேல் உயிரின் பலவித பரிணமிப்பை எவ்விதத்திலும் அறிந்து கொள்ளமுடியாது என்பது மாத்திரம் உண்மை. சரீர சாஸ்திர விற்பன்னர்களும், அறிவின் பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறு வகையான சேர்க்கையினாலேதான் ஏற்படுகின்றதெனக் கூறுகின்றனர். இதனால் ஜடபதார்த்தங்களின் மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெறிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தனது வாளினில் உயிர் அல்லது ஆத்மாவைப் பற்றிப் பிரமாதமாக எண்ணுமல், அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகின்றதோ அவ்விதமே எங்குமுள்ளதாக நினைக்க வேண்டியதோடு, தன் அறிவு அவ்வப்போது எதெதை உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் நடத்தல் வேண்டும், மரணத்திற்குப் பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்தாட்சிகளை ஆத்மவாதிகள் எத்தனையோ சோதனைகளால் விளக்க முற்பட்டும், அவற்றை அறிஞர் ஏற்றுக் கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்தபோதிலும் நிருமாணித்துக் காட்ட முடியாத-விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத் தெளியப்படாத—ஏதோ ஓர் யுகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும், மனப்பான்மைக்கும், பயத்திற்கும் தக்கபடியாக சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப்பற்றிய விஷயத்தை முடிவுகட்டுதல் அறிவுடமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப்பற்றிய பீதியைப் பலவித மதங்கள், அவ்வவற்றின் பல்வகையான மௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமான எத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கிவருகின்றன. நரகலோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் சித்ரவதைகளென்ன? இறந்த பின்னும் இவ்வுலகில் உள்ள ஆசாபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைவதென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல்களென்ன? சித்ரகுப்த எமதூத வேதனைகளென்ன? இன்னும் இவை போன்ற எண்ணற்ற ஆபாச சித்தாந்தங்களே இப்போது மனித சமூகத்தைக் கணக்கற்ற கஷ்டங்களால் நெக்கு விட்டு நைந்துருகும்படியான பழக்கவழக்கங்களில் ஈடுபடுத்திப் பரிதவிக்கச் செய்து வருகின்றன.

உயிரிழந்த சரீரத்தைப் பலமதத்தினர் பற்பலவிதங்களில் தகனம் செய்து வந்தபோதிலும், எல்லா மதத்தினரும் மாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளை சரிவரச் செய்தாலொழிய, அவர்களது ஆத்மா சாந்தமடையாதென்பதை ஒருங்கே ஒத்துக்கொண்டு அவ்வாறே நடந்து வருகின்றனர். மனிதன் இறந்த பின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்கின்றது என்ற கொள்கையினாலேதான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கிளம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க எத்தனையோ கோடி பொன் சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டும் கோபுரங்களிலும் வீணுகச் செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும் சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க ஏராளமான பண விரயம் ஆவதோடு, அவ்வித மயானங்களால் மக்களின் ஆரோக்கியத்திற்கே கெடுதியும் ஏற்படுகின்றது. முகமதிய நாடுகளில் பிணங்களின்மேல் எத்தனையோ பெரிய சிங்கார மான கோரிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன? அவைகள் மிகத் தேர்ந்த சிற்ப வேலைத் திறனைக் காண்பிப்பதாயினும், எத்தனை கோடி மக்களின் இரத்தத்தின் சத்தை வீணுக்கியிருக்கின்றன வென்பது கவனிக்கத்தக்கதாகும். ஈஜிப்ட் தேசத்திலுள்ள சமாதிகள், கோபுரங்கள் முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமைகளின் நெற்றிக் கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்க வேண்டும்? ஈமச் சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக் கிரியாதிகள் நடத்துவதாலும் எத்தனை இந்தியக் குடும்பங்கள் குடிக்கக் கஞ்சியில்லாமல் அலைகின்றன? செத்தவர்களால் ஏற்படும் சகியாத் துயரத்தைவிட மாதிகளுக்காகத் [illegible]

டாக்டர் பராஞ்சிபை

டுப் பின் உயிருள்ள அளவும் மீளாத் துன்பத்திலழுந்தும் துயரம் பெரிதாகத் தோன்துகின்றது. ஹிந்துக்கள் செய்யும் கருமாதிச் சடங்குகளை நேரில் காணுதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித்துக் கூறின் அது சிறிதும் நம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீ மூட்டுவதற்கு முன், அதன் ஆத்மா கஷ்டமின்றிப் பிரிந்துபோக வேண்டிய வசதிகள் முதலில் செய்யப்படுகின்றன. ஆத்மசாந்திக்காக வாய்க்கரிசி சமைத்துப் படைக்கப்படுகின்றன. தவிர "கோடி வஸ்திரம்" என்பதாக நல்ல வஸ்திரமாவது இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக் கட்டப்படுகின்றது. மீண்ட ஆத்மாவிற்குப் பாலமுதமளிக்கப் பசுக்களை கோதானமாகக் கொடுக்கப்படுகின்றது. ஆதியில் "சகமனம்" என்ற பெயரால் இறந்த கணவனுடைனே அவனது உயிருள்ள மனைவியையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுகமளிக்குமாறு ஒருங்கே வைத்துக் கொளுத்தப்பட்டுச் சித்திரவதையும் செய்யப்பட்டது! தற்காலத்தில் ஆண் மக்களனைவரும் மீசையை எடுத்துவிட வேண்டும்! மனைவியர் தலை மொட்டையடிக்கப்பட வேண்டும்! அவ்வாறு செய்வதற்குக் காரணம் அவனது மனைவிமார் அழகைக் குறைத்துக் கற்புக்கு பங்கம் வராமற் காப்பதென்று; இரண்டாவதாக அவனது ஆத்மா சிரமமின்றியில் சுவர்க்கலோகம் சேர்வதற்கு ஒரு மயிர்ஏணி ஏற்படுத்துவதற்கும் ஆம்!

அந்த ஜீவாத்மா சில நாட்கள்வரையிலும் பூமியில் சஞ்சரித்த முக்கியமான இடங்களுக்கு வந்து செல்கிறதாம்; அதன்நிமித்தம் பலவித படைப்புகள் போட்டு அதன் சாந்திக்காக பூஜை செய்ய வேண்டுமாம்? கருமாதி, வருஷாந்திர பூஜா காலங்களில் படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைப்பிடிச் காதத்தை காகம் சாப்பிட காகம், சாதம் எடுக்கத் தவறினால் அந்த ஜீவன் தன்னால் அனுபவிக்கக் கொடுத்து வைக்காத ஏதோ ஒன்றை நினைத்துத் துக்கசாகரத்தில் ஆழ்ந்து கிடப்பதாகவும் கருதப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷை என்னவென உத்தேசித்து அதனை நிறைவேற்றுவதாக நிருமாணித்த படி அநேக மணி நேரம் கர்த்துச் சலிப்பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின் தர்ப்பைப் புல்லை முடிச்சுப் போட்டுக் காகமாகப் பாவனை செய்து அந்தச் சாதத்தைத் தொட்டாகிலும் தங்கள் மூடமனதைத் தேற்றுவார்கள். அவ்வித சாஸ்திரப் பிரயாச்சித்தம் செய்தபோதிலும் அவர்களது கோழை மனம் மாண்டவரின் ஜீவன் சாந்தமடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படியெப்படி வருமோவென, அந்தோ? ஏங்கிப் பரிதவிக்கும்.

கருமாதி கைங்கரியங்கள், உயிரிழந்த நாள்முதல் பன்னிரண்டு நாட்கள்வரை ஒவ்வொன்றாக நடைபெறும் முதல்வருஷாந்திர நாளன்று மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும்; அன்றையதினம் சுற்றத்தாரனைவருக்கும். மேலும் ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும் மகனனவன் இவ்விதவருஷாந்திரகிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறுது நடத்தவேண்டும். அந்தக் குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் இவ்வித திதி நாட்களில் அவர்களது கால்நடைகள் ஒன்றாலும் வேலை செய்யக் கூடாது; ஏனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப் பிராணிகள் ஏதாவதொன்றில் புனர்ஜனனமெடுத்திருக்கக் கூடுமன்றே!

இவ்விதமௌடீகப் புராணக் கொள்கைகள் ஹிந்து மக்களிடத்தே மாத்திரம் தான் காணப்படுகின்றனவென்று நினைக்க வேண்டாம். அவைகள் மனிதசமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் ஒவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறுவிதமாகக் கையாளப்படுகின்றன. 'பேய்ஸ்டன்' என்ற இங்கிலாந்தின் கடற்கரையிலிருந்த ஒரு ஊரில் வசித்துவந்த-சாவகலாசாலையில் பட்டம் பெற்ற ஓர் மாது, தனது தாயின் சமாதிக்குத் தூபமிட்டு, அன்னம் படைத்த விஷயமாக நேர்ந்த ஒரு விவகாரம் நீதிமன்றம்வரை வந்த விஷயம் மிக்க ஆச்சரியமாகவே நமகுப் புலப்படுகின்றது. சமாதியை அழிப்பதும், பிணத்தை அடக்கம் செய்யும் விஷயத்தில் பிறர் தலையிடுவதும் மிக்க துவேஷத்தை மூட்டுவதாக எல்லா ஜனசமூகங்களாலும் கருதிப் போற்றப்படுகின்றது. சென்ற ஜெர்மனி யுத்தத்தில், உயிரிழந்த மக்களின் உடலினின்றும் கொழுப்பை ஜெர்மனியர் சேகரித்தனரீ என்பதாக யாரோ கட்டிவிட்டதாலே ஏற்பட்ட எதிர்ப்பே அவர்களின் அழிவிற்குப் பிரபல காரணமாக இருந்தது.

மாண்ட மக்களின் ஆத்மாக்களுக்காக மனிதர் மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நன்மைக்காக உபயோகிப்பார்களெனில் ஜனசமூகம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும் அவர் பிறர்பால் எத்தன்மையில் பிரயோஜனகரமாகப் பிரதிபலிக்கின்றதென்பதிலேயே வேரூன்றி நிலைபெறுகின்றன. ஒவ்வொருவரும் பகுத்தறிவுச் சுடரைக் கொளுத்தி அதன் வெளிச்சத்தில் மரணத்தைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமாயின் அதனைப் பற்றி மௌடீக நோக்கங்களெல்லாம் சூரியன் முன் பனிப்படைகளைபோல் பறந்தோடும்; அன்றியும் மதப் பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப்பற்றிய பயப் பேய் மாய்ந்து, மாந்தர் மரணத்தைத் திரணமாகப் பாவித்து, ஆனந்த வாழ்வெய்துவர் என்பது திண்ணம். மாண்டவனுக்குக் கோடித் துணியையும், அறுவகையுண்டியையும் படைத்துப் புதைப்பதைக் காட்டிலும், அவைகளை மக்களுக்குக் கொடுப்பது பலவகையிலும் சிறந்ததாகும். சிற்ப வேலைப்பாடுகளமைந்த மசூதிகளையும், ஸ்தூபிகளையும் இவ்வுலக இன்பங்களை என்றும் வேண்டாத மாண்ட பிரேதங்களின் மேலமைத்து அழகு பார்ப்பதைவிட, ஏழைகளுக்கு உதவும்படி சத்திரம், சாவடிகளைக்கட்டுவித்தல் மிகவும் தகுதியான செய்கையாகும்.

இதனால் ஓர் பகுத்தறிவுவாதி என்பவன் மேலான இலட்சியங்களில்லாதவனென்று எண்ணவேண்டாம். அவனது இலட்சியங்களெல்லாம் நமது கண்முன் உயிருடன் நடமாடும் மக்களை மேலோங்கச் செய்வதிலேயே செலுத்தப்படுகின்றன.

—'முரசொலி'

தமாஷ் செய்து கைதியானார்!

தன் வாசகர்களை "ஏப்ரல் முட்டாள்களாக்க" நினைத்த லாகூர் தினசரி ஒன்றின் ஆசிரியர் கம்பி எண்ணநேரிட்டது!

இடதுசாரி "சுதந்திர பாகிஸ்தான்" கட்சித் தலைவர் இப்திகாருதீன் கைது செய்யப்பட்டதாக "ஜமீன்தார்" பத்திரிகை ஆசிரியர் மவுலானா அக்தர் அலி தம் பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரித்தார். தம் வாசகர்களிடம் ஏப்ரல் தமாஷ் செய்வதற்காக. ஆனால் மறுநாள் காலையில் போலீஸார்வந்து அவரைக் கைது செய்தனர்.

1000 பவுனுக்கு ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுத்தபின் ஆசிரியர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிகம்பனும் மில்டனும் வாழவேண்டுமானால்

வையகத்தில் சாந்தி நிலவவேண்டும்

கடற் கோளாறு கண்டு கதறிய தமிழ் இதயங்கள் இன்று உலகக் கலையின் அழிவு கண்டும் உறங்குவதா?

வாழ்வுக்காக பிச்சை ஏந்த முடியாது, ஒன்று பட்டுப் போராடுவதே உய்யும் வழி

இதில் கலைஞர்களின்-எழுத்தாளர்களின் பொறுப்பு மகத்தானது

சமாதானப் போராளிகளின் பேரியக்கம் நாளுக்கு நாள் விரிந்து வியாபித்துக் கொண்டிருக்கிறது. இதுவரை சமாதானத்தின் உடனடித் தேவைபற்றி உணராதவர்கள்கூட சமாதானத்திற்கான ஒப்பரிய இயக்கத்திலே முன்னேறித் தாவிக் கொண்டிருக்கிறார். மனிதவர்க்கத்தின் பெரும்பகுதி சமாதான வேண்டுகோள்களில் கையெழுத்திட்டு தனது சமாதான பூர்வமான அபிலாஷையை பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கிறது. சமாதானத்திற்கான இந்த மகத்தான போராட்டத்திலே தொழிலாளிகள், விவசாயிகள், புத்திஜீவிகள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், வித்தகர்கள், கலை நுணுக்க வல்லுனர்கள், இலகிய கர்த்தாக்கள் மட்டுமல்ல தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், ஜீவகாருண்ய வள்ளல்கள், மதப்போதகர்கள், மொத்தத்தில் மனித சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும் அணிவகுத்து நிற்கிறது.

இன்று சமாதானத்திற்காக நடத்தக்கூடிய இயக்கத்தைப்போன்ற பிரமாண்டமான இயக்கத்தை, கோடானுகோடி மக்களை ஒரு கொடிக்கீழ் ஒன்றுதிரட்டி நிறுத்திய இயக்கத்தை சரித்திரம் இதுவரை கண்டது—கேட்டதுகிடையாது. மனிதவர்க்கத்தின் இந்த ராட்சச விழிப்பு மனித குலத்தின் கூட்டுக் கொலையிலும்—சர்வசம்ஹாரத்திலும் கொண்டு சென்றுவிடக்கூடிய யுத்த அபாயத்தை தடுத்தி நிறுத்தி வந்துள்ளது—வருகிறது என்பது ஸ்பட்டம்.

இன்று யுத்தத்திற்கான தயாரிப்புகள் செய்துகொண்டிருப்பவர்கள்- பத்தாயிரம் மைல்களுக்கப்பாலே சென்று "தம் தாய்நாட்டை பாதுகாக்க" படைத்தளம் நிறுவி வருபவர்கள், பயங்கரக் கொலைக் கருவிகளான அணுக்குண்டையும்—ஐலக்குண்டையும் தடைசெய்ய தொடர்ந்து மறுப்பவர்கள், உலக நெருக்கடிகளை பேச்சுவார்த்தைகள் மூலம், பரஸ்பர நலன் அடிப்படையில் தீர்க்கும் புத்தி பூர்வமான கொள்கையை ஏற்க ஒப்பாதவர்கள், இன்றும்கூட கலோனியல் ஆட்சி அமைப்பை பாதுகாத்துப்பேணுபவர்கள் மக்கள் மத்தியிலிருந்து—உலகத்தின் நல்லெண்ணம் பட்டைத்த மக்கள் குலம் அத்தனையிலிருந்தும் தனிமைப்பட்டு—ஒதுக்கப்பட்டுள்ளார்கள்.

சமாதானத்தைப் பாதுகாத்து வையகம் பூராவும் எழுந்த இந்த மனிதவர்க்கத்தின் விழிப்பே கொரிய யுத்தத்தை உலக யுத்தமாக வியாபிக்கும் ஆபத்திலிருந்து அவனியைக் காத்தது. இந்தோசீன தலையீட்டுப் போரை அகிலப் பூகம்பமாக்கும் அபாயத்தை தவிர்த்தது. பார்மோஸாவிலே மூன்றுவது உலக கொலைக்களரிக்கு கொள்ளி மூட்டும் கொலைகாரக் கைங்கர்யத்தை நிறுத்தியது.

உலக மக்களின்—சமாதான சக்திகளின் இந்த பிரமிக்கத்தக்க சாதனைகள்—வெற்றிகள் இன்று உலகத்திலேயே ஒரு புதிய திருப்பத்தை, மங்களகரமான வளர்ச்சியை உரம்பாய்ச்சி திருஷ்டித்துள்ளன. இந்த இயக்கத்திலே உலகம்கண்ட ஒப்பரிய மேதாவிகள்—கலைஞர்களான பப்லா நெரூடா, சார்லிசப்ளின், பிக்காஸோ, வார்வப்பாஸ்ட், ஜோலியோ கியூரி. பெர்னல், போல் ரோப்ஸன், பெல்டன் மொனிக்கா, இலியா எஹரன்பர்க், கிச்லு, சுத்தானந்த பாரதி கோமோஜோ, ஹரிந்தரநாத் சட்டோபாத்தியாய போன்றவர்கள் மட்டுமல்ல பெரும்பெரும் நாடுகளின் ஆட்சிகளே சமாதான பேரணியில் அணிவகுத்து நிற்கின்றன. அதோடு சமாதானக் கோளம் நாளுக்கு—நாள், நாளிக்கு—நாளி, வியாபித்து விஸ்தீரமடைந்து வருகிறது.

இந்த சமாதான விஸ்தீரணத்திலே அசோகக் கொடி ஏந்திய பாரதமணித் திருநாடு, பர்மா, இந்தோனேஷியா போன்ற நாடுகள் முன்னணியில் நிற்கின்றன. இவற்றிற்கு வாழும் விடிவெள்ளியாக நேரு—சௌவின் ஐம்பெருங் கோட்பாடுகள் அமைந்துள்ளன. இந்த பஞ்சசீல — சகஜீவனக் கொள்கையின் அடிப்படையிலேதான்—ஆசியாவிலே நிரந்தர சமாதானத்தையும்—நாடுகளின் சுயாதீனத்தையும் நிலைநாட்ட—பெற்றெடுத்துத்தர சரியானவழி வகை வகுத்தது திருமதி ராமேஷ்வரி நேரு தலைமையில் டில்லியில் கூடிய ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் மகாநாடு. அதேபோல விழிப்புப்பெற்ற ஆசியாவின்—ஆசிய மக்கள் சக்திகளின் கூட்டுப் பிரகடனமாக பாண்டுங்கில் கூடும் ஆசிய ஆபிரிக்க மகாநாடு திகழ்கிறது. இவை எல்லாம், சமாதான சக்திகள் உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் வியாபித்துவிட்டன வென்பதையும், அகில மக்களின் பெரும் பகுதி, ஆட்சிகளின் பெருவாரிப் பகுதிகள் சமாதானத்தின் பக்கத்தில் நிற்கின்றன என்பதையுமே ஸ்தூலமாக எடுத்துக்காட்டுகின்றன. வேறு வார்த்தையில் மனிதனின் சிந்தனை அத்தனையும், மனிதர்களின் செயல்கள்—நடவடிக்கைகள், ஏன் மனித குலத்தின்—வாழ்வின் ஒவ்வொரு அசைவும்—சலனமும் சமாதானத்திற்காகவும், சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகவுமே செயல்படுகிறது என்பதையே நிகழ்ந்து வரும் சரித்திரபரமான ஒவ்வொரு நிகழ்ச்சியும்—சம்பவமும் நிரூபித்து வருகின்றன.

ஆனால் உலகம் பூராவும் இந்த இயக்கம் பெருமடிப்படையில வியாபித்துவிட்டது என்பது உலக யுத்த ஆபத்தை பரிபூரணமாக பூண்டறுத்துவிட்டது என்பதல்ல. அதற்கு மாறுக இந்த நிலை தொடர்ந்து—பயங்கரமான அளவுக்கு நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. கொரியாப் பிரச்னை பூரணமாக தீர்க்கப்படவில்லை. இந்தோசீனத்திலிருந்து அன்னிய ஆதிக்கம் முற்றுக ஒழிந்துவிடவில்லை. ஜெர்மனி ஆயுதபாணியாக்கப்படுவது ஐரோப்பாவின் தலைமாட்டிலே கொள்ளி மூட்டிவிட்டுள்ளது. மலாயா, மற்றும் ஆபிரிக்க பிரதேசங்களில் தேசிய சுயாதீன இயக்கங்கள்மீது தொடர்ந்து நரவேட்டை முடுக்கப்படுவதும் ஏகாதிபத்திய ஆட்சி ஆதிக்கங்களை பாதுகாக்க சாம்ராஜ்யங்கள் முனைவதும் யுத்த ஆபத்தை மேலும் உக்கிரமாக்கியுள்ளது. அணுக்குண்டு—ஐலக்குண்டு போன்ற மனிதவர்க்கத்தை சர்வநிர்மூலமாக்கக்கூடிய உயர்ந்த—தலைசிறந்த ஆயுதங்கள் இன்னும் தடை செய்யப்படவில்லை. பஞ்சசீலக் கொள்கைகளை இன்னும் அவனியில் சகல நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. அன்னிய நாடுகள் மற்ற நாடுகளின் உள்நாட்டு விஷயங்களில் தலையிடும் நிலை இன்னும் தொலைந்தாகிவிடவில்லை. எனவே யுத்த ஆபத்து முன்பென்றையும் போலவே இன்றும் நீடிக்கிறது, நிஷ்டூரமாக நிற்கிறது.

எனவேதான் மனிதவர்க்கம் கூட்டு சம்ஹாரத்திலிருந்து காக்கப்பட வேண்டுமானால், மனித இனம் பரம்பரைபரம்பரையாக சிருஷ்டித்து—கட்டி வளர்த்த கலாச்சாரங்கள், பண்பாடுகள், இலக்கியப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் உலக யுத்தம் என்றென்றைக்குமாக நிறுத்தப்பட வேண்டும்.

ஞானி பிரேம்ஜி

இந்த நிலையில், மனித ஜாதி வாழ்வதா—மாள்வதா என்பதும், மனிதனது கலை கலாச்சாரங்கள் செழிப்பதா—செத்தொழிவதா என்பதும்நிர்ணயமாகவேண்டிய இந்த நிலையில், ஒவ்வொரு மனிதனதும் குறிப்பாக ஒவ்வொரு எழுத்தாளன்—கலைஞனதும் கடமை, பொறுப்பு என்ன?

யுத்த எதிர்ப்பு இயக்கம் உலகரீதியில் வளர்ந்து வருகிறது. அதன் அணியிலை இன்னும் திரளாதுள்ள லட்சோபலட்ச மக்களை அதன் போர்ப்பரணியின்பின் திரட்டுவதும், ஒன்று திரண்ட அஜாத மனித சக்தியின் பலம்கொண்டு யுத்த வெறிச் சக்திகளை நிறுத்துவதும்தான் இன்று மனிதகுலம் உய்ய—வாழ உள்ள ஒரே வழி. இந்த மகத்தான கைங்கரியத்தில் மற்றெல்லா மக்கள் பகுதிகளுக்கும் மேலாக கலைஞனின்—கவிஞனின் பங்கு பெரிதுண்டு.

உலகக் கலையின்—இலக்கியத்தின் ஒப்பரிய பொன் பொக்கிஷங்கள் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றன என்றால் அதற்கு காரணம் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது. வாழ்வின் மீது மனிதன் கொண்டுள்ள ஆசையும் அவாவும் வாழும் மட்டும், மனித உணர்ச்சிகளின் பாங்கான பரிணமங்களான கலைகள் நிச்சயமாக வாழும். கலை—இலக்கியம் மனிதனின் ஆசாபாசத்தை பிரதிபலிக்கிறது. வாழ்வின்மீது—அதன் லட்சோபலட்சக்கணக்கான இன்ப நெகிழ்ச்சிகளின்மீதுதான் கலை மலர்கிறது—மணி மகுடம் சூட்டுகிறது. கலை மனித வாழ்க்கையின் உயிரோட்டத்தில், புதுமை நிர்மாணிக்கத் துடிக்கும் அவனின் பொன்னான ஆசைகளில், நல்வாழ்வுக்காகவும்—உயர்வையகத்திற்காகவும் அவன் நடத்தும் போற்றற்குரிய போராட்டங்களில் தேசிய இனங்களின் பண்பாட்டுச் செழிப்பு—மனித உணர்ச்சிகளின் ஆழ—உயர்ந்த—தலைசிறந்த மலர்ச்சி இவற்றில்தான் ஊற்றெடுக்கிறது—உயிர் எடுக்கிறது. இங்குதான் கலைஞனின் ஆக்க சக்தியும் சிந்தனையும் முழுப் பொலிவுடனும் பூத்துக் குலுங்குகின்றன.

மனித வாழ்வின் ஒவ்வொரு சலனத்திலும்—நெகிழ்ச்சித் துடிப்பிலும் அபார சக்தி வகிக்கும் இத்தகைய கலை வளர வேண்டுமானால்—வாழ வேண்டுமானால் அது பாதுகாக்கப்பட வேண்டும். லெமூரியா கண்டம் என்று சரித்திராசிரியர்கள் கூறும் தமிழகம் பல கடற்கோளாறுகளுக்கு இலக்காகியது—இரையாகியது. முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த—கலை வளர்த்த தமிழ் நாட்டிலே இன்று கடைச் சங்கத்தின் சில அடிச்சுவடிகளையே பார்க்கிறோம். முதல் சங்கம் இடைச் சங்க காலத்து இலக்கியங்கள் எங்கே என்று தமிழன் இதயமெல்லாம் குமுறுகிறது. கடற்கோளாறு கேட்டு இரத்தக் கண்ணீர் கொட்டுகிறது. இதேபோலத்தான் பபிலோன சாம்ராஜ்யத்தில், எகிப்திய எழுச்சி நிலையில், ரோமன் புகழ் பாரெட்டுத்திக்கும் பரவிய வேளையில், அதேபோல சீனத்தின் பொன் சகாப்தத்தில்—பாரதத்தின் கலை வளர் வேளையில் சிருஷ்டிக்கப்பட்ட இலக்கியங்கள், கலைப் பொக்கிஷங்கள் எல்லாம் அப்படியே காப்பாற்றப்பட்டுள்ளனவா? நாடுகளுக்கும் நாடுகளுக்குமிடையில் நடந்த யுத்தங்கள்—சாம்ராஜ்யங்கள் மண்ணில் புரண்டதும்—புழுதியில் சாய்ந்ததும் அது போன்ற மற்றும் நிகழ்ச்சிகளும் எத்தனை எத்தனை ஆயிரம் இலக்கியங்களுக்கு அழிவு தந்திருக்கும். இரண்டாவது உலக யுத்தத்தில் பாரிஸின் பாங்கான சிற்பங்களும்—இத்தாலியின் வனப்புமிக்க ஓவியங்களும், லண்டனின் லளிதமான கலை நுணுக்கங்களும், வாஷிங்டனின் வானமெட்டும் கோபுரங்களும், மாஸ்கோவின் மாண்பான கலைக் கூடங்களும் சர்வநாசமாகவில்லையா?

எனவேதான் ஒரு கடற்கோளாறு கண்டு கொதிக்கும் நாம், சண்டைகளில் சர்வநாசமான கலைப் படைப்புகள் கண்டு கண்ணீர்விட்டுக் கதறும் நாம் இன்று மனிதவர்க்கத்தின் இலக்கியம்—கலை அத்தனையையும் சர்வசம்ஹாரம் செய்ய முண்டும் யுத்தம் கண்டு கதறியல்ல—கர்ஜித்து எழ கடமைப்பட்டுள்ளோம். ஏனென்றால் நாம் கலையை நேசிக்கிறோம்—வாழ்வை நேசிக்கிறோம். அதுமட்டுமல்ல கலையை சிருஷ்டிக்கிறோம், வாழ்வையும் சிருஷ்டிக்கிறோம். நமது சிருஷ்டிகள் வாழ வேண்டும் என்று நாம் இயல்பாகவே ஆசைப்படுகிறோம்.

எனவேதான் நாடுகளுக்கிடையில் சமாதானம் என்ற எண்ணம் எழுத்தாளர்களின் இதயங்களிலே உரம்பாய்ச்சி நிற்கிறது. கலாச்சாரம் நிலைநிற்க—முன்னேறி வளர சமாதானம் கண்டிப்பான அவசியம், நீக்க முடியாத நியதி. நிரந்தர சமாதானமே மக்களின், இனங்களினதும்—நாடுகளினதும் ஆக்கப் படைப்புக்கு உத்தரவாதம்—உத்வேகம் தருகிறது. இது மறுக்க முடியாத—மழுப்ப முடியாத அப்பட்டமான உண்மை. எனவேதான் யுத்தக் கொதியர்களின் கையாளாகாத அத்தனை பேரும் சமாதானத்தின் அவசியத்தை உணர்கிறார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

பெண்களுக்கு ஓர் மகா சஞ்சீவி

கர்ப்பத்தைத் தடுக்கும் ஆறுவித நோய்களையும் அகற்றி, சூதக வயிற்று வலி, வாய்வு, தலைவலி, மயக்கம், ஏப்பம், படபடப்பு, திரேகம் பூரித்தல், குத்தல், உழைவு, சோம்பல், ஆயாசம், பல வீனம், உஷ்ணம், விலக்கம் மிகுதியாகப் போகுதல், கொஞ்சம் கண்டு மறைதல் போன்ற சகல வியாதிகளையும் போக்கவல்லது

கெர்ப்பக்கோள் நிவாரணி

சிறியது—ரூ. 3-75.

பெரிய புட்டி விலை ரூ. 7-00

வி.பி.பி. செலவு வேறு.

சென்ற் மேரி வைத்யசாலை,

201, செட்டியார் தெரு, கொழும்பு.

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

194 A, தட்டா தெரு,
கொழும்பு-12.

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 14.



பிரவேசக் கட்டணம்சதம் 50



பிரவேசக் கட்டணம் சதம் 50



மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ. 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்.

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....சே.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

போட்டி விதிகள் 12-ம் பக்கத்தில் பார்க்கவும்

ரொக்கப் பரிசு ரூ. 1,000-00

முதலாவது பரிசு ரூ. 600-00

இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 18-5-55 பி. ப. 5 மணி

சரியான விடை 22-5-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசுபெற்றோர் விபரம் 29-5-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 5-6-55ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. விதியை இதனால் வெல்லலாம் என்று எண்ணுபவர்களும் இருக்கிறார்கள்.
3. அழகும் இளமையும் உடையவனுதலால் முருகனுக்கு இப்படியும் ஒரு பெயருண்டு.
5. வெய்யில் காலத்தில் இது அதிகம் செலவாகும்.
6. கருணை அல்லது கிருபை
8. இதை வீசித்தான் யமன் உயிரைக் கவர்கிறான் என்பார்கள் புராணிகர்கள்
9. பல இது செய்யக்கூடிய வயல்களுக்கு அதிகாரிக்கியுண்டு
10. மிருகங்களுள் யானைக்கு இந்த சக்தி அதிகம் என்பார்கள்
12. கஞ்சா புகைப்பதை இது அடிப்பது என்றும் சொல்வதுண்டு
13. தனல் நெருப்பின் பண்பு இது.
15. உரிமை
16. யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலில் நடைபெற்று வந்த இந்த கொடிய செயலை அறிவாளிகள் நிறுத்திவிட்டார்கள்
18. இது எப்போதும் அநித்தியமானது என்பர் வேதாந்திகள்
19. காரணம்
20. .....கறியைப் புசிக்க ஆரோக்கியத்தில் அக்கறையுள்ளவர்கள் விரும்பமாட்டார்கள்
21. மழை
22. நாகம் இதைக் கேட்டால் நடுங்குமாம்!
24. விக்ரமாதித்தன் கதையில் வரும் இது பல அற்புதமான கதைகளைச் சொல்லியிருக்கிறது
26. தனிமையான இடங்களில் இருப்பவர்கள்..... யிலிருக்கும் வீட்டாரோடு நல்லுறவைப் பாதுகாக்க வேண்டும்
27. இது முறிந்த படகு திசைபிடித்துப் போக முடியுமா?

மேலிருந்து கீழ்

1. மதங்கள் தோன்றிய காலம்முதல் இது நடைபெற்று வந்தும் உலகம் என்னவோ கோணல் வழிகளில்தான் செல்லுகிறது
2. தேசத்திற்காக இது புரிபவர்களைச் சிறந்த தேசபக்தர்கள் என்று அழைக்கிறோம்
3. காரிருளைக்..... மிருட்டு என்று சொல்வதுண்டு
4. இது உடையவன் சிற்பம், சித்திரம், இசை, நடனம் போன்றவற்றை நன்றாக அனுபவிப்பான்
5. இது புரிவதில் கயவன் கைதேர்ந்தவனாயிருப்பான்
7. தாளம் தலை கெட்டுக் கிடக்கிறது
8. கசப்பானதாயிருந்தும் இதன் காயைப் பலர் விரும்பி உண்கிறார்கள்
11. ஒன்றின் பன்மை
13. மலையாள தேசத்து நடனம்
14. இது பசித்தாலும் புல்லைத் தின்னுமா?
16. வெளி வேஷம்
17. இது வேதனை தரும் என்பது பழமொழி
18. நூறுகொண்டது ரூபாய்
19. உயரப்போவதற்கு இது பயன்படும்
20. கீழே விழுந்தால் சுலபமாய் நொறுங்கிவிடும்
22. பெண்களின் இதைப் புலவர்கள் எப்படியெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள்
23. இவர் மரித்து உயிர்த்த புனித தினத்தை ஈஸ்டர் பெருநாள் என்று கொண்டாடுகிறார்கள்
24. பாய் முடையப் பயன்படுகிறது
25. மாயவித்தைக்காரர்

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 14

சுதந்திரன் காரியாலயம்

194, ஏ, கட்டா தெரு கொழும்பு 12

சுடச்சுட

★ ஆலயப் பூஜையில் திரு டட்லி சேனநாயகா.

—செய்தி

'சிவ பூஜையில் கரடி' நுழைந்தமாதிரி, இவராவது பூஜைக்குபோறதாவது? இதுவும் ஒரு கரடி-தான்.

★ கோமாயணத்தின் மூலம் எம். ஆர். ராதா பணம் பறிக்கிறார்.

'யாரோ ஒருவர்'

நல்ல மரம் ஐயா இது; பணம் பழுத்த பணமாய் இருக்குமே.

★ 'மனிதனைக் கொல்லும் மது சாரத்தின் விற்பனவுக்குத் தடை. உள்நாட்டு மந்திரி கொண்டுவரவிருக்கும் புதிய சட்டம்.

—செய்தி

ஏன், மக்களையே கொல்லும் 'பொய்' பிரசாரத்திற்கு தடைவிதிக்கக் கூடாது?

★ வேலை நிறுத்தத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும். எதிர்கட்சித் தலைவர் வற்புறுத்தல்.

—செய்தி

ஏதுயேது, அரசாங்கம் தலையைவிட்ட பின்னர் தலை போன முண்டத்திற்கு ஒரு 'தலை' வராய் இருக்கலாமென்ற எண்ணமோ?

★ ஷர்ட்டுகள் இறக்கு மதி தடைசெய்யப்படலாம்.

—செய்தி

அத்துடன் 'பிரசியர்' களையும் தடைசெய்ய வேண்டும்.

★ 'பாலுக்கு அதிக விலை கொடுங்கள்' உடபலாத்த கூட்டுறவு பால் பண்ணைச் சங்கத்தின் கோரிக்கை.

தண்ணீருக்கும் சேர்த்துத் தானே?

★ கொழும்பில் மீண்டும் தண்ணீர் தட்டுப்பாடு.

—செய்தி

அதுதானே கேட்டேன், தண்ணீர் ஏன் தட்டுப்பாடு ஆகிறது என்று, பார்த்தால் 'பாலில் வார்த்த நீரைப் போல்' ஆகிவிடுகிறது.

★ ரெயில்வேக்கு சுக்கிரதசை நாளொன்றுக்கு 16,000 ரூபா வருமானம்; 'பஸ் ஸ்ட்ரைக்' பண்ணினதும், ரயிலுக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

★ தூக்குத்தண்டனையை ரத்துசெய்து விடவேண்டுமென ஒரு மசோதாபாராளுமன்றத்தில் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

—செய்தி

யமதர்ம ராஜனுக்கு ஒரே கொண்டாட்டம்தான். லஞ்சம் வாங்காத ஒரு நற்குணம் அவனிடம் உண்டு. அவன் நினைத்த நேரமெல்லாம் உயிரை வாங்கும் உரிமை கிடைத்துவிட்டதல்லவா. கொலைகாரப் பசங்கள் அவனை ஏமாற்றிவிட முடியாது.

★ ஒலிவரும், ஜோனும் நீரில் மூழ்கி மரணம். ஒரு சூலில் பிறந்த மூவரில் இருவர் அகஸ்மாத்தாக நீர்க் குழிக்குள் விழுந்து மரண மடைந்தார்கள்.

—குளியாப்பிட்டி செய்தி

சிரிக்கத்தான் தோன்றுகிறது. ஆனால் இந்த குழந்தைகளின் அகால மரணத்தை நினைந்து உள்ளம் உருகுகிறது. கவர்னர் ஜெனரலும் பிரதம மந்திரியும் தங்கள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்வதற்கும் பிரயத்தனப் படுகின்றனர்.

★ வெளியேறுதவர்கள் நாடுகடத்தப்படலாம். குடியேற்ற வெளிற்றச் சட்டத் திருத்தத்தின்படி அதிகாரம்.

—செய்தி

நாடுகடத்தப் படாதவர்கள் வெளியேறலாம் என்று கூட சொல்லலாம்.

—'சிறில்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. அகமட், நற்பிட்டிமுனை

கே: முஸ்லிம்மக்கள் வியாபாரத்தில் முன்னேறியதுபோல் கல்வியிலும் முன்னேறுமைக்குக் காரணம் என்ன?

ப: அறிவுக் கருவியாக கல்வி விளங்கியகாலம்போய் இன்று அது பிழைப்புக் கருவியாகிவிட்டது. பிழைப்புக்கு வேறு வழியைக் கண்டு பிடித்துவிட்டதால் கல்வியைக் கற்றுக் கஷ்டப்பட வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை.

ஃ

மா. இராசா, சுளிபுரம்

கே: இந்திரனும் சந்திரனும் வானத்தில் வசிக்கின்றார்களாம். நாமும் அப்படி வசிக்க முடியாதா?

ப: ஏன் முடியாது கற்பனை யென்ற அற்புத விமானம் கைவரப்பெற்ற கவிஞர்கள் நானிலத்தில் வசிப்பதுபோல வானத்திலும் இறக்கை கட்டிப் பறப்பார்களே.

கே: சுவாமிக்குப் பூசாரி தீபத்தைக் காட்டுவதன் பொருள் என்ன?

ப: ''படையலைத் தொட்டால் பதைபதைக்கச் சுட்டு விடுவேன்'' என்பது பொருளாயிருக்கலாம்.

ஃ

செல்வி ஏ. எச். எல். யாசமீன், புத்தளம்

கே: சினிமாவுக்குப் போகும் பெண்கள் எந்தக் கட்டத்தை அதிகம் ரசிக்கிறார்கள்?

ப: கதாநாயகி அணிந்து வரும் பங்களூர் சேலையில் காணப்படும் அசோகமாலாக் கட்டத்தை.

ஃ

வி. இரத்தினம், பதுளை

கே: ஈழத்தின் சிறந்த நடிகர்கள் யார்?

ப: ஆர். ஜீ. சேனநாயகா, கந்தையா வைத்தியநாதன், வி. குமாரசாமி.

கே: தற்போது நமதுநாட்டில் நடக்கும் பிரச்னைபற்றி உமக்கு ஏதாவது தெரியுமா?

ப: ஏதென்றும் அறியேன் பராபரமே?

ஃ

வே. கனேஷ், கந்தளாய்

கே: ஆலயங்கள் எல்லாம் பாடசாலைகளாகவும் ஐயர்கள் எல்லாம் ஆசிரியர்களாகவும் ஆகிவிட்டால்.....?

ப: போதனை பாஷை தமிழா சமஸ்கிருதமா என்ற பிரச்னை எழும். அப்புறம் கடவுள் ஒரு சுமிஷன் நியமித்துத்தான் பிரச்னையைத் தீர்க்கவேண்டியிருக்கும்.

ஃ

மு. எஸ். அக்பர், திருகோணமலை

கே: இராவணனுடைய இலங்கைக்கும் கொத்தலாவலையின் இலங்கைக்கும் வித்தியாசம் என்ன?

ப: இராவணன் சீதையை வலிந்துகொண்டுவந்து இலங்கையில் சிறைவைத்தான். இப்போது வலியவரும் சீதைகளை கொத்தலாவலை குடியேற்றச் சட்டத்தின்கீழ் சிறையிலடைக்கிறார். இதுதான் வித்தியாசம்.

ஃ

ஏ. எம். ஏ. லத்திப், பெரியகிண்ணியா

கே: நான் ஒரு வானசாஸ்திரியாக விரும்புகிறேன். முடியுமா?

ப: முடியும். முதலில் சூரியனை வெறுங்கண்ணால் பார்க்கப் பழகிக் கொள்ளும்.

ஃ

அ. இராமசாமி, மாத்தளை

காதலின் இலக்கணம் யாது?

ப: குசுடுதுபுறு என்று ஆரம்பித்து ஞயண நமன என்று இன்பம் பொழிந்து யரல வழள என்று வழவழத்து கசடதபற என்று பறந்துபோகும்.

ஃ

மு. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு

கே: தேனினுமினியது எது?

ப: யேசுவின் நாமம் என்பர் கிறிஸ்தவர்கள். செந்தமிழ் நாடு என்ற பேச்சு என்பர் பாரதிப் பித்தர்கள். என் நண்பர் சாராய நாதனைக் கேட்டால் தேனினுமினியது நுவரேலிய பியர் (Beer) என்கிறார்.

ஃ

வீ. கணேசமூர்த்தி, கல்லடி உப்போடை

கே: எவரும் எத்தனிக்க முடியாத அரிய முயற்சியுண்டெனில் அது யாது?

ப: அதுதானப்பா ''சிந்தையை யடக்கின்ற திறமரிது'' என்றார் தாயுமானார்.

ஃ

ச. முத்துலிங்கம், கல்முனை

கே: விபசாரம் என்றால் என்ன?

ப: தன் பொருளைவிடத் தன்னையே பொதுவுடமையாகப் பாவிக்கும் ஒரு பரந்த ஆசாரம்.

எஸ். ஏ. டபிள்யு, கொழும்பு

கே: சுதந்திரன் பத்திரிகையின் முக்கியமான கொள்கை என்ன?

ப: தமிழ் மக்களைத் தமிழ் மக்களாக வாழச் செய்வது.

ஃ

ஏ. இராஜகுலேஸ், வெள்ளவத்தை

கே: முழுமந்திரிக்கும் அரைமந்திரிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: நிறைகுடத்திற்கும் குறைக்குடத்திற்கும் உள்ள வித்தியாசந்தான்.

ஃ

செ. வல்லிபுரம், நல்லூர்

கே: இரவு ஏன் இருளாக இருக்கிறது?

ப: பகல் வெளிச்சமாக இருப்பதால்.

கே: ஒரு பெண் எதை விரும்பமாட்டாள்?

ப: தன் கணவன் இன்னொருத்திக்கும் கணவன் என்பதை.

ஃ

பூ. நேசமணி, யாழ்ப்பாணம்

கே: மதுவில் மயங்கியவனுக்கும் மாதுவில் மயங்கியவனுக்கும் வித்தியாசமென்ன?

ப: மதுவில் மயங்கியவன் தலையைமட்டும் இழக்கிறான்; மாதுவில் மயங்கியவன் உடலையும் இழக்கிறான்.

ஃ

மு. கந்தவனம், வதிரி

கே: கடவுளைப் பற்றி உமது நம்பிக்கை எதுவோ?

ப: கடவுள் இருக்கிறார் என்பதை நான் நம்புகிறேன். ஆனால் அவர் ஒரு லஞ்சம் வாங்கும் பொலீஸ்காரராக இருக்க முடியாது என்றும் நம்புகிறேன்.

பரிசு ரூபா

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனால் கேள்விகள் போஸ்ட்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்த கேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

இனம் விமோசனம்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமை, என்பதை மக்கள் உணரவேண்டும். இதை அவர்கள் உணரத் தவறினால் அது பிரதிநிதிகளுக்கு நஷ்டமாகாது. மக்களுக்குத்தான் நஷ்டம்; இனத்திற்குத்தான் நஷ்டம். அதனால் இனத்தின் நீண்டகால இலட்சியத்திற்கும் குறிக்கோளுக்கும்தான் பழுதைத் தேடித்தருவதாகும்.

நாம் இங்கே எடுத்துக் கூறிய விவரங்களைத் திருகோணமலையில் கூடும் தமிழரசுக் கட்சியின் மூன்றாவது மகாநாடு மக்களுக்குவிளக்கி அவர்தம் மனதில் இவ்வுண்மைகளைப் பதிய வைப்பதில் வெற்றி காணுமானால் இனத்தின் விமோசனத்திற்கு அது பெருமளவில் வித்திட்டுவிட்டது என்று பூரணமாக நம்பலாம்.

அறிமுகப்படுத்துகிறோம்

புரட்சி வெறி கொண்ட 'புரட்சி மோகன்' ஜீவா

—கீரன்

கலைஞர் 14:



''சிறுகதை எழுதுவதென் பது குப்பை மேட்டுக் கீரையைப் பிடுங்கிக் கறி சமைப்பதல்ல' என்று கூறும் 26 வயது நிரம்பாத புரட்சி வெறிபிடித்த இந்த இளம் எழுத்தாளரை, வாராத தலையோடு யாழ்ப்பாண நகரத் தெருக்களிலே காணத் தவறியவாகளும், கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டமேடைகளிலே இவர் முழக்கத்தைக் கேட்கத் தவறியிருக்க மாட்டார்கள். 'புரட்சி மோகன்' என்ற புனை பெயரில் சில ஆண்டுகள் எழுதி, எழுத்துலகில் இடம்பெற்ற இவர் கார்க்கி, அப்பாஸ், சிகோ, புதுமைப் பித்தன், விந்தன், கண்டேகர், ரகுநாதன் ஆகிய புத்துலகச் சிற்பிகளின் எழுத்தோவியங்களைப் படித்து படித்து அவர்களின் உழியிலேயே தமக்கென ஓர் தனிப்பாணி வகுத்து இலட்சியப் போக்கில் எழுதிவருகிறார். இவரை எழுத்துலகில் ஊக்கியவர் தற்போது யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவராக விளங்கும் திரு எம். கார்த்திகேசனுகும்.

நடுத்தர உயரம்; ஒல்லியான உடற்கட்டு, பொது நிறம், ஒழுங்கற்ற பல்வரிசை அரும்பிய மீசை தேசிய உடையோடு எந்நேரமும் காட்சியளிக்கும் ஜீவா யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். முழுப் பெயர் ஜீவானந்தன், தந்தையார் யோசேப்; தாயார்; மேரியம்மா; யாழ்ப்பாணம் சென்ற் மேரிஸ் கல்லூரியில் படித்தவர். மேடைப் பேச்சிலும் ஆற்றல் மிக்கவர், சென்ற 9 ஆண்டுகளாக வீரகேசரி, சுதந்திரன், தேசாபிமானி ஆகிய இதழ்களில் இவரது எழுத்து வன்மைகள் இடையிடையே மிளிர்கின்றன. 'உழைக்காத பணம் வேண்டாம் ஐயா' என்று கூறி 50 சதத்தை திருப்பிக்கொடுக்கும் 'ரிக்ஷாக்காரன் 'வர்க்கம், வர்க்கம் என்கிறீர்களே, இது தானய்யா வர்க்கம்' என்று முடியும் 'அவர்களும் இவர்களும்' ஜீவாவின் அரிய ஒப்பற்ற சிருட்டிகளாகும். சரளமான சாதாரண நடையில், காண்டேகர் பாணியில் இவர் கதை கூறும் முறையே ஒரு அலாதியான போக்காகும்.

இவருக்குப் பிடித்தவை: தேசாபிமானி, ஜனசக்தி, மஞ்சரி, சமரன், மேடைப் பேச்சாளன், தேனீர், சாக்லெட், குழந்தைகள், பன்னிப்பு, சிகரெட், விந்தன்,

அழகுப் போட்டியா? அவமானப் போட்டியா?

செந்தமிழ்ச் செல்வியரே! சேய்கள் பல பெற்று
நந்தாக் கிளை வளர்க்கும் நற்றாயீர்! நீர் புகல்வீர்:
தங்கமணி மார்பைத் தண் கதலி வெண்துடையை
பொங்கும் மறைவிடத்தைப் புனிதமாம் நாற்குணத்தைச்
சந்திக்குப் பவனிவிட்டு சந்தைச் சரக்காக்கி
அந்த நாள் விலைகூறி அழகரசி யெனத் தேர்ந்தால்
சிந்தை மகிழ்வீரோ? சிறகு கட்டிப் பறப்பீரோ?
புந்தி கெட்ட மூடர்களின் புலால்வேட்கைப் போட்டிக்குப்
பந்தலொன்று சோடித்துப் பவளமணிக் கட்டிலிலே
உந்தமிலோர் பெண்ணினைவைத்து ஊர்ச்சனத்தைக்கூட்டிவிட்டு
''கண்கொள்ளாக் காட்சியைப்பார்! கட்டழகு ராணியைப் பார்!
பெண்ணின் உடலழகைப் பிய்த்துப் பார் பேயுலகே!
வந்து பார்! உற்றுப் பார்! வனப்புடலைச் சுற்றிப் பார்!
பட்டிதழை எட்டிப்பார்..... பளிங்கு விழி வெட்டுப்பார்.....
மொட்டுமுலைக் கட்டழகை முழுபிதுங்கு மட்டும் பார்.....
கட்டித்தேன் பொந்தைப் பார்...கார்குழலின் பந்தைப் பார்...
நேரே பார்.....ஊடே பார்.....நெஞ்சகத்தின் நடுவேபார்.....
வார், சதையைத் தாங்காமல் வாய்விட்டு நெறுநெறுக்கும்
பேரழகைப் பார்'' என்று பேசுகின்ற வேளையிலே
வெடியாதோ நும்நெஞ்சு, வெட்கி உயிர் துடியாதோ,
ஓடியாதோ தமிழ்ப்பண்பு.....ஓடாதா பெண் மானம்?
முடியாது, முடியாது; முன்னோர்கள் கோலிவைத்த
பெண்ணினத்தின் பண்பைப் பிணந்தின்ன வையாதீர்!
கண்ணவிந்து போகும்; கடல் விரிந்து உமைவிழுங்கும்
பெண்குலமே! எம்மைப் பெற்றெடுத்த தாய்மாரே!!
எண்சாணுடம்பின் இறைச்சியிலே துடிதுடித்துக்
கண்ணை மயக்குங் காந்தியெலாம் உம் ஆண்மாக்—
காற்றுப் பறந்தால் கருகிவிடும், தீய்ந்துவிடும்
நேற்றைய மேல் நாட்டவர்தம் கருத்தில் நிலைகுலையேல்!

-வி. கி. இராசதுரை

இவர்கள் உல்லாசமான சவாரியின் சுகத்தை

நியூ ஹட்ஸன்

அல்லது

ஸன்பீம்

சைக்கிள்களினால் அனுபவிக்கிறார்கள்

★ நியூ ஹட்ஸன் 22 அங்குலம் ரோட்ஸ்டார் கியர் கேஸ், லகேஜ்கரியர், ஸ்டாண்ட் & டெரீ ஆசனத்துடன் விலை ரூ. 205-00

★ ஸன்பீம் (ஆண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

★ ஸன்பீம் (பெண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

சிறுவர் சிறுமிகளின் சைக்கிள்களும் கிடைக்கும்.

லயிஸ் பிரவுண் அன்கோ. லிமிட்.,
மக்லம் ரோட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்

43. அன்பின் வெற்றி

நான்கு நாட் சென்ற பின்னர் காலை ஒன்பது மணியளவில் நாதன் வீட்டிற்கு வரும்போது இன்னும் ஒரு புது மனிதனும் அவருடன் வந்தார்.

''எத்தனை வைத்தியர்களை அழைத்துவந்து காட்டுகின்றீர்கள்? இவரும் ஒரு புது வைத்தியரோ?'' எனச் சந்திரமதி நாதனைக் கேட்டார்.

''வைத்தியரும் இல்லை, கியித்தியரும் இல்லை'' என நாதன் சொல்லிவிட்டுச் சந்திரமணியை அழைத்துக் கொண்டு வந்தார்.

''சந்திரமதியின் பெயர் பிறந்த திகதி எல்லாவற்றையும் இவருக்குச் சொல்லுங்கள்'' என நாதன் சந்திரமணிக்குச் சொன்னார்.

''இவர் யார் இது?'' எனச் சந்திரமதி கேட்டார்.

''அது யாராக விருந்தாலும் உங்களுக்கென்ன? நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்'' என நாதன் குறுநகையுடன் சொன்னார்.

'இல்லைச் சொல்லுங்கள்' என சந்திரமதி மன்றாடினார்.

''இவர் ஒரு மணப்'' பதிவுகாரர்.

'என்னால் முடியாது'

'என்ன முடியாது?'

'நீங்கள் கேட்பதை என்னால் செய்ய முடியாது. உங்களுடைய நன்மையை முன்னிட்டுச் சொல்லுகின்றேன். வேண்டாம்'

'நன்மையாவது தின்மையாவது'

'என்னுடைய செல்வத்தை அபகரிப்பதற்காகவே நீங்கள் இப்படிச் சூழ்ச்சி செய்கின்றீர்கள்' எனச் சந்திரமதி கடுகடுத்தார்.

'இதனைக் கேட்டதும் நாதன் திடுக்கிட்டார். இவர்களுடைய பிணக்கைக் கேட்டதும் 'விருப்பமில்லாத இருவர்களுடைய திருமணத்திற்கு வேண்டிய பதிவுஒழுங்கைச்செய்யச் சட்டம் இடம் தராது' எனத் திருமணப் பதிவுக்காரர் தாழ்மையாகவும் கடுமையாகவும் சொன்னார்.

'இதனைக் கேட்டதும் சந்திரமதி அழத்தொடங்கினார். 'யார் சொன்னதுவிருப்பமில்லையென்று?' என அழுதழுது சொன்னார்.

'நீங்கள் பேசியதிலிருந்து தெரிகின்றது' என மணப் பதிவுகாரர் சொன்னார். அவரின் நிலை பெரிய சங்கடமாக விருந்தது. அவர் மிகவும் பொறுமையானவர். எனவே சந்திரமணியைப் பார்த்து 'நீங்கள் பெண்ணின் தாயோ? அல்லது ஆணின் தாயோ? இப்படியான குழப்பங்கள் எங்களுக்குத் தெரியும். பல இடங்களுக்குஞ் சென்ற எனக்கு இது புதிதல்ல' என்றார்.

'சந்திரமணி அழுதழுது பேசினார். 'நான் சொல்வதை அமைதியாகக் கேளுங்கள். இப்பெண் என் மகள். இந்த ஆண் என்னுடைய வளர்ப்புப் பிள்ளை. இருவரும் ஒருவரையொருவர் எல்லை கடந்து காதலிக்கின்றனர். திடீரென இப்பெண்ணுக்குக் கசநோய் வந்துவிட்டது. ஆதலினால் இவரை வேறு இடத்தில் மணஞ்செய்யும்படி பெண் பிடிவாதஞ் செய்கின்றார். இவரையே மணப்பதாக அவர் பிடிவாதஞ் செய்கின்றார். நான் என்ன செய்ய?' எனச் சொல்லிச் சந்திரமணி அழுதார்.

'நீங்கள் இவரை நேசிக்கின்றீரோ?' எனமணப்பதிவுகாரர் சந்திரமதியைக் கேட்டார்.

'ஓம்' எனச் சந்திரமதி தலையசைத்தார்.

'பின்னர் ஏன்இப்பொழுது 'என்னுடைய செல்வத்திற்காக என்னைத் திருமணஞ் செய்யும்படி சூழ்ச்சி செய்கின்றீர்கள்?' என உங்களுடைய காதலர்மீது குற்றம் சாட்டினீர்கள்?' என அந்த மணப்பதிவுகாரர் மிகவும் தாழ்மையாகக் கேட்டார் சந்திரமதியை.

'மன்னிக்கவேண்டும். என்னை மணஞ்செய்ய வேண்டுமென அவர் பிடிவாதம் பிடிக்கின்றார். சொன்னலும் கேளாராம். நான் வருத்தக்காரியாகிவிட்டேன். என்னால் இவருக்கு என்ன பயன். அவருடைய வாழ்வைக் கெடுக்கப்படாது. இப்படிச் சொன்னல்தான் அந்த எண்ணத்தைக் கைவிடுவார்' என சந்திரமதி சொன்னார்.

'அப்படியானல் உங்களுக்கு ஒரு யோசனை சொல்கின்றேன். உங்களுடைய வருத்தம் மாறும்வரையும் திருமணப் பதிவைப் பின்போட்டால் என்ன?' என அந்த மணப்பதிவுகாரர் ஒரு தந்தை பேசுவது போலப் பேசினார்.

'அப்படிச் செய்தால் நல்லது' எனச் சந்திரமணி சொன்னார். நாதன் எதையோ சொல்ல முடியாமல் விக்கினார். 'நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?' என மணப்பதிவுகாரர் நாதனைக் கேட்டார்.

'நீங்கள் சொல்லுவதும் சரி. ஆனல் எதிர்பாராத விதமாக நோய் கடுமைப் பண்ணினல் சந்திரமதி இறந்தால் நான் என்ன செய்வது. அவர் உயிரோடிருக்கவேண்டும். தப்பவேண்டும் என நான் கடவுளை வணங்குகின்றேன். இருந்தும் ஏதும் நடந்தால் என்ன செய்வது. இவரை என் மனைவி என்ற இடத்தில் வைக்காவிட்டால் என் உயிர் அமைதியடையாது. அதற்காகத்தான் நான் பிடிவாதஞ் செய்கின்றேன்' என்றார் நாதன்.

அதனைக் கேட்டதும்மணப் பதிவுகாரர் தனது நாடியை தடவினர். 'இந்த இளைஞர் சொல்வதிலும் உண்மை இருக்கின்றது. கடவுள்இருக்கின்றார் மேலே. அவர் இருப்பதை நம்பிக்கொண்டு எல்லாவற்றையுஞ் செய்யுங்கள். உள்ளன் புள்ளவர்களிடம் கடவுள் உண்மையாகவிருக்கின்றார். உங்களுடைய காதலனை மகிழச் செய்வதே உங்கள் கடமை. நான் என்னுடைய அனுபவத்திற்கேற்றபடி சொல்கின்றேன். இனி உங்கள் விருப்பம்'' எனக் கடவுள்போல அந்தக் கிழவர் பேசினார்.

''நான் இறந்தால் வேறொருவரை மணஞ் செய்வதாக அவரிடம் உறுதிமொழி வாங்கித் தாருங்கள் அப்பொழுது நான் ஓம் என்பேன்'' எனச் சந்திரமதி அந்தக் கிழவருக்குச் சொன்னார்.

''நீங்கள் இறக்குந் தறுவாயில் இருக்கும்போது பேச வேண்டிய அலுவல் அது. இறக்க முன்னர் அப்படி உறுதி செய்கின்றேன். இப் பொழுது வேண்டாம். வருத்தம் கடுமை என்றதும் என்னைக் கேட்க வேண்டிய கேள்வி இது'' என நாதன் சொன்னார்.

''சரி சரி இனி மூவரும் நான் சொன்னபடி செய்யுங்கள். கடந்த நாற்பது ஆண்டுகளாக நான் மணப் பதிவு வேலை செய்து வருகின்றேன். இதுபோன்ற உண்மைக்காத லரை ஒன்று சேர்த்து வைத்து [illegible] பெறுமோ [illegible] ஓடி கிடைக்கவில்லை. உங்களுடைய காதலனின் அன்பும் அதற்குமேலாகக் கடவுளின் அருளும் இருக்கும்போது உங்களுக்கொன்றும் நடவாது பிள்ளை. ஓம் எனச் சொல்லுங்கள். உத்தியோக முறையில் நான் கேட்கவில்லை. உண்மைக் காதலின் பெயரால் என்னுடைய கிழட்டு உள்ளத்திலிருந்து உங்களைக் கேட்கின்றேன். மறுக்க வேண்டாம்'' என அக்கிழவர் சந்திரமதியை வேண்டிக்கொண்டார். அதன் பின்னர் திருமணப் பதிவும் நிறைவேறியது.

''மருந்திலும் பார்க்க மணப் பதிவுதான் கூடிய பலனைச் சந்திரமதிக்கு அளித்ததுபோலும். மூன்று மாத காலத்திற்குள் வருத்தம் முற்றிலும் மாறிவிட்டது. ஆனல் ஒரு ஆண்டு காலம் தள்ளியே திருமணத்தை நடத்த வேண்டும் என வைத்தியர்கள் ஆலோசனை சொல்லவே திருமணமும் பின் போட்டு வைக்கப்பட்டது. ''இப்பொழுது உள்ள நிலையைப் பார்த்தால் எத்தனை ஆண்டுக்கென்றாலும் பின் போட்டு வைக்கலாம் திருமணத்தை'' என நாதன் நகைப்புடன் சொன்னார்.

''சந்திரமணியும் சந்திரமதியும் வற்புறுத்தவே கரும்பு ஆலையும் தோட்டமும் ஐம்பது இலட்சம் ரூபாவிற்கு விற்றார்கள். தங்கையாவினுடைய ஏனைய வியாபார நிலையங்களும் பத்து இலட்சம் ரூபாவிற்கு விற்கப்பட்டன. காசை என்ன செய்வது என்பதிலும் தொல்லை ஏற்பட்டது. பொருளைக் கைபற்ற சந்திரமதியின் சின்னையா, பெரியய்யா மாமன் மாமி எனப் பலர் முன்வந்தனர். ஆனல் சந்திரமதியும் சந்திரமணியும் தங்களையும் காசையும் நாதனிடம் ஒப்படைத்தார்கள். அதுமட்டுமில்லாமல் காசில் மூன்றிலொரு பங்கை நாதனுடைய பெயரில் வங்கியில் முதலீடு செய்தார்கள். இது தம்பிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ''நாங்கள்இறந்தால் எங்களுடைய காசிற்கா எங்களுடைய இனத்தவர்கள் சண்டை செய்து வாதாடுவார்கள். உங்களுக்கு நாங்கள் தர வேண்டும் என்ற அன்பினலே தருகின்றோம் ஏற்க வேண்டும்'' எனச் சந்திரமதியும் சந்திரமணியும் நாதனைக் கேட்டனர். மறுக்க முடியாமற் போகவே ''வேண்டுமானல் என்னுடைய பெயரில் வங்கியிற் போட்டு வையுங்கள். அதில் ஒரு காசும் நான் தொடமாட்டேன்'' என நாதன் சொன்னார்.

''ஒரு பிள்ளை பிறந்தால் உங்களுக்குக் காசு யார் தரப் போகின்றார்கள்'' எனச் சந்திரமணி சொல்லி இன்பக் கனவு கண்டார்.

44 வாழ்க்கைச் சிறை

அம்மா மீண்டும் வெற்றிலைத் தட்டை எடுத்து வைத்துப் பாக்குப் போட்டுக்கொண்டு மேலும் [illegible] மறைந்தது. சந்திரமதி பழமைபோல உடல் நலத்தைப் பெற்றார். திருமணமும் நடந்தது. சந்திரமதியும், தம்பியும் குடியும் குடித்தனமாக இன்புற்றிருந்தனர். முழுமதிபோலக் கமலம் என்ற ஒரு பெண்ணைச் சந்திரமதி பெற்றெடுத்தார். அதற்குமேல் ஆண்டவன் அவர்களைப் பிரித்தெடுத்தார். விதியின் விளையாடல் அது. அன்றெழுதியதை யாரால் அழித்தெழுத முடியும். நெஞ்சடைப்பினல் சந்திரமதி இறந்தார். கெட்ட காலத்திலும் நல்ல காலம் உண்டு. தம்பிக்கென நான் சொன்னது நினைவிருக்கின்றதோ? மறுமணம் நாதன் செய்யவேண்டும் என்பதைப்பற்றி பேசு முன்னரே சந்திரமதியின் உயிர் பிரிந்துவிட்டது.

''தம்பியைப் பிடித்த கெட்டகாலம் அத்துடன் நிற்கவில்லை. கமலம் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து எட்டு ஆண்டுகளை எட்டிப்பிடித்தாள். அப் பிள்ளையை வளர்ப்பதையே தங்கள் மட்டில்லா இன்பமெனச் சந்திரமணியும் நாதனும் கருதிவந்தனர். கமலம் தன்னுடைய தந்தையைப்போல புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பும், தாயைப் போன்ற குணமும் அழகும் உள்ள பிள்ளையாக இருந்தாள். திடீரெனக் கமலாவிற்கு வருத்தம் வந்தது. சந்திரமதியை இழந்த பயம் இருந்தபடியால்மிகவும்கவனமாக மருந்துசெய்வித்தனர். பிள்ளை தப்பியது. ஆனல் அதனைப் பிடித்த கொடிய சிறுபிள்ளை வாதநோய் அதன் முதுகையும் காலையும் வளைத்து மடக்கி, முதுகு நரம்பையும் வளைத்து மடக்கிவிட்டது. குறைந்தது மூன்று ஆண்டுகள் என்றாலும் இடைவிடாது வைத்தியர்களின் கவனத்திலிருந்தால் எவ்விதமான முடக்கும் இல்லாமற் பிள்ளை சுகமடையும் என அங்குள்ள வைத்தியர்கள் சொன்னார்கள். இங்கிலாந்தில் உள்ள வைத்தியர்களைப் போன்ற திறமையுள்ள வைத்தியர்கள் இங்கில்லை. எனவே சந்திரமதியையும் கமலத்தையும் இங்கிலாந்தில் இருக்கச் செய்தார் நாதன். இருந்தாற்போலத் தாய்நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற அவா நாதனுக்கு உண்டாகியது. எனவே ஒருவிதமான துணையும் இல்லாமல் நாதன் இங்கே வந்து பேராசிரியத் தொழிலில் அமர்ந்தார். இப்படியாக உளமுடைந்து தம்பி இருக்கும்போதுதான் நாங்களும் உதவி கேட்டு வந்தோம். பழம் நழுவிப் பாலில் விழுந்தது எனக் கருதி தம்பி எங்களை வரவேற்றார். எங்களுக்கு மாத்திரம் தம்பி உதவி செய்யவில்லை. இனத்தவர்களான படியால் எங்களுக்கு உதவி செய்வது மட்டுமல்லாமல் எங்களுடன் அன்பாக இருக்கின்றார். தங்கையாவினதும் சந்திரமணியினதும் உயிரைத் திருப்தி செய்வதற்காக ஏழை மாணவர்கள் பலருக்கும் அறநிலையங்கள் பலவற்றிற்கும் தாராளமாக பொருளுதவி செய்கின்றார். எம்மைப் போன்ற வறியவர்களின் அறிவு வளர்ச்சிக்கு அவர் செய்யும் உதவி இம்மட்டன்று.

''நாங்கள் சுற்றுப்பிரயாணஞ் செய்யும்போதுதான் ''கமலத்திற்கு நல்ல சுகம். உடனே வரவும்'' எனத் தந்தி இங்கிலாந்திலிருந்து வந்தது. அதையிட்டு தம்பி பட்ட மகிழ்ச்சிக்கு கங்கு கரையில்லை. வருகின்ற கிழமை இங்கிலாந்திற்குச் சென்று மாமியையும் மகளையும் அழைத்து வருவதாக இருந்தார். அதற்கிடையில் இறப்பிலிருந்து அருந்தப் பாகத் தப்பினர்.

''கமலத்தைத் தமிழ்ப் பண்பாட்டுடனும் சிறந்த பழக்கவழக்கத்துடனும் வளர்க்கின்ற பொறுப்பை எங்கள் இருவரிடமும் ஒப்படைத்தார் தம்பி. ஏனெனில் சந்திரமணியின் உடல் நலம் இப்பொழுது நல்லாக இல்லை. கமலத்தை வளர்க்கும் பொறுப்பை எங்களை ஏற்கும்படி மன்றாடினர். நாங்கள் தனக்கு கடமைப்பட்டவர்கள் என்பதை எள்ளளவேனும் காட்டவில்லை. தனக்கு நாங்கள் ஏதோ உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதுவல்லவோ பெருந்தன்மை.

''இப்பொழுது அவர் பேசுவதைக் கேட்கவே இரக்கமாக இருக்கின்றது. வாழ்நாள் முழுவதும் மறியலில் இருப்பவன், மறியல் அறையில் இருந்துவிடுவதுபோல நானும் இந்த உடலில் இருந்து வாடுகின்றேன். எப்பொழுதுதான் விடுதலை கிடைக்குமோ? என்னுடைய கமலம் இரண்டு மூன்று பிள்ளைகள் பெற்றெடுத்தால் நான் மகிழ்ச்சியுடன் இறப்பேன். என்ன இந்த எண்ணம் கைகூடுமோ நல்ல மாமி?'' என என்னைக் கேட்டார்.

''கட்டாயம் கைகூடும்'' என நான் சொன்னேன்.

இதைச் சொல்லி முடித்ததும் அம்மா பெருமூச் செறிந்தார்.

''இந்தக் கதை எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும் அம்மா?'' என நான் கேட்டேன்.

''என்னுடைய பிள்ளை தங்கமான பிள்ளை. கள்ளம் கபடமற்ற பிள்ளை. வேலையில்லாமற் சும்மா இருக்கின்றபோது சொல்லும் உன்னிலும் நிறைந்த அன்பு கொண்டிருக்கின்றார். உனக்கு மறைக்கவேண்டும் என மறைக்கவில்லை. வாழுகின்ற பிள்ளைக்கு இந்தப் படுபாவியின் உக்கியுழுத்த வாழ்வைச் சொல்லிக் கலங்க வைக்கப்படாது எனச் சொல்லாமல் விட்டார்'' எனச் சொல்லி அம்மா அழுதார்.

நாதன்மீது நான்கொண்ட பிழையான எண்ணமும், நான்செய்த கொடுந்தொழிலும் என்னை வாட்டத் தொடங்கின. நான் விக்கி விக்கி அழுதேன். நாதனுடைய துக்ககரமான வாழ்வைக் கேட்டு நான் அழுகின்றேன் என அம்மா நினைந்து ''இனி என்ன பிள்ளை செய்யலாம். எல்லாம் நன்மைக்கென எண்ணியிருப்போம். தம்பியுடைய வாழ்வைப் பூத்துக் குலுங்கச் செய்யும்படி கடவுளைக் கைதொழுவோம்'' என என்னைத் தேற்றினர்.

என் கண்ணீர்த் துளிகள் ஊடாக நாதன் பெரிய ஒரு ஏணியைக் கட்டி எழுப்பி அதிற் குமாரசாமியையும் என்னையும் ஏற்றி விடுகின்ற படம் என் கண்முன் விழுந்தது.

—முற்றும்

(யாவும் கற்பனை)
(எல்லா உரிமையும் ஆசிரியர்க்கே.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபவேட்டை கொண்ட சமுதாய அமைப்பு

பாட்டாளியைமட்டுமல்லபணக்காரனையுமேவாட்டுகிறது

ஒருபுறம் பட்டினி-மறுபுறம் பணவெறியால் ஏற்படும் பீதியும் பேராசையும்

வாழ்வில் அமைதிகான உண்மை உழைப்பும் உழைப்புக்குத் தக்க ஊதியமுமே வழி முறை

'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' யென்பதல்ல 'பொருளிலார் இவ்வுலகிலில்லை' என்ற நிலை வேண்டும்

மு. த. லோறன்ஸ்

அதோ தெரிகிறதே..... அந்த இரண்டடுக்கு மாடிவீட்டைப் பார்த்தீர்களா? அந்தப் பெரிய ''பங்களா''விலே மொத்தம் இருபத்தி மூன்று அறைகள் இருக்கின்றன. ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதியுள்ள தளபாடங்கள் அந்த வீட்டை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இருபத்தி மூன்று அறைகளையும், ஒரு பெரிய ''ஹாலை''யும் கொண்ட அந்த ''பங்களா'' விலே மொத்தம் ஐந்து ஜீவன்களே வாழுகின்றன! அந்த ''பங்களா''வின் எஜமானரும், அவருடைய மனைவியும், மூன்று வேலைக்காரர்களும்தான் இந்த ஐந்து ஜீவன்கள். அந்தக் கிழட்டுத் தம்பதிகளுக்குக் குழந்தைகள் இல்லை! அவர் செல்வத்துடனும் செருக்குடனும் வாழ்வதால் உறவினரும் அவர்களை அணுகுவதில்லை.

அந்த ''பங்களா''வின் எஜமானர், ஒரு வருஷத்தில் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் மாடிக்குப் போனதே கிடையாது. யாராவது பணக்கார நண்பர்கள் வந்தால், அவர்களை அழைத்துச் சென்று, மாடியிலேயுள்ள கதவுகளின் கண்ணாடி வேலைகள், நாகரீகத்தில் பிறந்த தளபாடங்கள் முதலியவைகளைக் காட்டிப் பூரிப்படைவார். சில அறைகள் பல மாதங்களாகத் திறக்கப்படுவதேயில்லை! பட்டணத்திலேயே மிகவும் பெரிய ''பங்களா'' இப்படிப் பயனற்றுக் கிடப்பதை அந்த எஜமானர் சிந்திக்கின்றாரா? அவரிடம் பொருள் இருக்கிறது; செல்வம் இருக்கிறது; வேண்டியவைகள் எல்லாமே இருக்கின்றன. ஆனாலும் என்ன பயன்?

கிடைத்த செல்வத்தை அவருடைய வாழ்க்கைக்குப் பயன்படுத்த முடிந்ததா? அவரால் முடியவில்லை. தேடற்கரிய செல்வத்தைச் சேர்த்தும் அவரால் அமைதி பெற முடியவில்லை!

''பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்று வள்ளுவர் அழகாகப் பாடினார். உண்மைதான். அதற்கும் விதிவிலக்கு இருக்கத்தான் செய்கிறது. உதாரணமாக நாம் மேலேகண்ட செல்வரிடம் வேண்டிய அளவு பொருள் இருக்கின்றது. ஆனால் மகிழ்ச்சி, இன்பம், சந்தோஷம், அமைதி, கருணை, ஆனந்தம், அன்பு நிரம்பிய உலகை அவர் கண்டாரா? வேண்டிய அளவிற்குப் பொருளிருந்தும், வாழத்தெரியாத வகையினால், அவரால் அமைதி நிரம்பிய உலகத்தை, இன்பம் நிரம்பிய உலகத்தை, துன்பமற்ற உலகத்தைக் காண முடியவில்லை. இதுதான் வாழத் தெரியாத குறை! இருப்பதைக் கொண்டு பயனடையத் தெரியாத குறை!! வைக்கோலில் படுத்துக்கொண்டு விழித்திருக்கும் நாயின் நிலை!!!

அந்தப் பணக்காரர் நல்ல வழிகளில் பொருளீட்டியிருக்கலாம். தமக்குப் போதுமான அளவிற்கு ஒரு சிறு வீட்டை அழகாகக் கட்டியிருக்கலாம். தேவைகளைக் கவனித்து அமைதியாக வாழ்ந்திருக்கலாம். தேடிய செல்வத்தை நல்ல முறையில் விதைத்திருக்கலாம். புகழுடன், புனிதமான வாழ்க்கையும் வாழ்ந்து வெற்றியும் பெற்றிருக்கலாம்.

செல்வத்தைக் குறுக்கான வழிகளில் தேட அவரால் முடிந்தது. ஆனால் அதே செல்வத்தைக் கொண்டு சகல இன்பங்களையும் கவலையற்று அனுபவிக்க முடிந்ததா? கவலையற்று அமைதியாக வாழமுடிந்ததா? கண்ணியமாக, அன்பாக ஆட்களுடன் பழக முடிந்ததா? இனம், சனம், உற்றார், உறவினர் முதலியவர்களுடன் அன்பாகப் பழக முடிந்ததா? உண்மையான தொண்டினால் பலர் உள்ளங்களில் உறைந்து ஒளிவீச முடிந்ததா? இல்லை, அமைதிதான் அவருக்குக் கிட்டியதா?

ஒன்றுமேயில்லை! அவரிடம் செல்வம் இருக்கிறது. ஆனால் எல்லோருக்கும் - துணையாக இருக்கும் 'உலகம்' அவரை அணுகவில்லை! அந்த 'உலகத்தை' அடைந்து இன்பமாக வாழ முடியவில்லை!!

நம்முடைய சமூகத்திலே இப்படிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வதால் உலகிற்கு உண்மையில் எதுவித நன்மையுமேயில்லை. அதே போலவேதான் இந்தப் பணக்காரராலும் வாழ முடியவில்லை. பணமில்லார்க்கு இல்லாத 'உலகம்' பணம் படைத்த அவருக்கும் இல்லையே!!

ஆனால் அவருடைய 'பங்களா' வுக்கருகில் ஒரு சிறிய வீடு இருக்கின்றது. அங்கே ''இந்நாட்டின் மன்னன்'' ஒருவன் வாழுகிறான். அவனுடைய வீட்டைப் போலவே அவனுடைய இதயமும் சுத்தமாக இருக்கின்றது. அவனுடைய அறையிலே உலக விடுதலைக்காகப் போராடிய, உயிர்துறந்த தியாகிகளின் படங்களெல்லாம் இருக்கின்றன. அந்த அறையின் ஒரு மூலையிலே ''பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற நிலைமை அழிந்து பொருளில்லாதார் இவ்வுலகில் இல்லை என்ற நிலைமை வளர வேண்டும்'' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்ட பலகை யொன்றும் மாட்டப் பட்டிருக்கிறது. அந்த வீட்டிலே உண்மையாக வாழ்கின்றவன் யார்?

அவன் ஒரு இளைஞன். படித்துப் பட்டம்பெற்று விட்டு ஆசிரியத் தொழில் பார்க்கிறான். அவன் படிப்பிக்கும் பாடசாலையே ஒரு கலைக்கோயிலைப்போல இருக்கிறது. ''இது சாதாரண பாடசாலையல்ல, இந்த ஆசிரியன் வந்ததும் இது கலைக் கோயிலாகவே மாறிவிட்டது'' என்று பலர் பேசிக் கொள்கிறார்கள். காலைமுதல் மாலைவரையில் ஓயாது பாடசாலையில் உழைக்கின்றான். ''நம்முடைய நாட்டிலேயுள்ள பாடசாலைகளெல்லாம் சீர்கெட்டு, நமதுவருங்கால சமுதாயம் பெலனற்றவர்களைக் கொள்ளவேண்டியிருப்பதற்குக் காரணம், ஆசிரியர்களில் பெரும்பாலானோர் உயர்வுக்காக உழைக்காமல் உணவுக்காக உழைப்

(11-ம் பக்கம் பார்க்க)

மனிதனின் இச்சைகளை அடக்கிவாழ

பழக்கமும் பக்குவமும் தருகிறது நோன்பு முறை

பசியின் கொடுமையை பாரார்க்கு அறிவுறுத்தி பட்டினி என்ற நிலையைத் தொலைப்பதே அதன் தார்ப்பரியம்

மௌலவி ரூஹுல்-ஹக்

மனிதமனம் பேராசைமிக்கது. பலதரப்பட்ட தேவைகளையுடையது. அதன் ஆசைக்கு எல்லைகிடையாது. அதன் பேரவா சோர்வது அரிது. குறித்த வரம்பில் நின்றுவிடும் தன்மைத்தல்ல. இவ்வாசைகளை விட்டுத் தடுக்கப்பட்டால் அதற்குக் கோபம் வந்துவிடுகிறது. எத்தனை சுகங்களைப் பெற்றாலும் மென்மேலும் தேடியலையுமேயன்றி திருப்தியும், நிம்மதியும் பெறாது. இத்தகைய மனதைக் கட்டுப்படுத்துவான் வேண்டியே மதங்கள் பலவகையான வணக்கமுறைகளை அனுட்டிக்கும்படி மனிதனை ஏவுகின்றன. இவ்வகையில் முஸ்லிம்கள் ஏவப்பட்டுள்ள ஒரு வணக்கமே றம்ழான் மாதத்தில் நோன்பிருத்தல்.

நோன்பு இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளுள் ஒன்று. வல்லெனை வழிபடும் வகைகளிற் சிறந்தவோர் முறை. உள்ளங்களில் அன்பெனும் ஜோதி நின்றிலங்குவான் வேண்டி இறைவன் இன்னுன்பைக் கடமையாக்கியுள்ளான். மனிதன் தன் ஆசைகளில் நிராசைகாணும் பொழுது உண்டாகும் துயரத்தையும், கோபத்தையும் அடக்கிப் பொறுமையை மேற்கொள்ள அவனைப் பயிற்றுவிக்கிறது. மனை இச்சைகளில் மயங்கிவிடாது காப்பாற்றுகிறது.

பிணி, பிரயாணம் போன்ற காரணமிருந்தாலேயன்றி, ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் ''றம்ழான்'' மாதம் நோன்பிருப்பது கடமையாகும். ''விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள்மீது கடமையாக்கப் பட்டிருந்ததுபோல் உங்கள்மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டு விட்டது. (அது) நீங்கள் இறைவனை அஞ்சியொழுகவேயாகும். குறிப்பிட்ட சில நாட்கள்தான் (இந்த நோன்பு) எனவே உங்களில் எவரேனும் நோயாளியாகவோ, பிரயாணத்திலோ இருப்பின் வேறு நாட்களில் (அதை) நிறைவேற்றுதலுண்டு'' என்கின்றது திருக்குர்ஆன்.

வருடத்தில் பதினொரு மாதங்களை உண்டும், பருகியும் கழிக்கிறோம். காலை, மாலையென்ற கட்டுப்பாடில்லை. குறித்த நேரமுமில்லை. அப்பால் ஒரு மாத காலம் மனதைக் கட்டுப்படுத்தி விடுகிறோம். வைகறை முதல் சூரியாஸ்தமனம்வரை உண்ணுதே: பருகாதே; சொந்த மனையிலும் கூட உடலின்பம் அனுபவியாதே! எனக் கட்டளை விதித்து விடுகிறோம். எனவே இந்த நோன்பு மனதையடக்கப் பழக ஒப்பற்றதொரு முறையாக விருக்கிறது. 'அன்னமொடுங்கினால் ஐந்து மொடுங்கு'' மென்பது மூதுரையல்லவா!

தன் சொந்த மனைவியையும் தன் நேரான வழியில் ஈட்டிய உண்டியையும்தள்ளி வைக்கப் பக்குவமடைந்தவன், தனக்கு எவ்வகைத்தும் உரிமையற்ற பிறபெண்ணையும், பிறர் உரிமைப்பொருளையும் ஒருபொழுதும் எடுப்[illegible]

நோன்பின் உண்மைத் தாற்பரியத்தை யுணர்ந்து நோன்பிருந்தால் அதனால் கிடைக்கும் அனுகூலங்கள் அனந்தம். அறுசுவையுண்டிகளை அனுதினமும் உண்டு, மாடமாளிகையில், பஞ்சணைமீது படுத்துறங்கும் மாமன்னரும் உண்ண உணவின்றித் துயருறும் ஏழையின் பசியின் ருசியை உணரவைக்கிறது நோன்பு. தன் பொக்கிஷத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து அவ்வேழைக்கும் கொடுக்கும்படி அவன் மனதை மாற்றிவிடுகிறது. எனவே ஏழை தனவந்தனை வெறுப்பதை விடுத்து விருப்பங் கொள்கிறான்.

நம்மிற் சிலர் இந்த நோன்பின் உட்கருத்தையுணராது, நோன்பென்று கூறிக்கொண்டு வீண் வம்பு வளர்ப்பதிலும், புறம்பேசல், பழி சொல்லல் போன்ற தீய அறுவடைகளிலும் தங்கள் நாவுகளைத் தாராளமாக அவிழ்த்து விடுகின்றனர். இது நபிகள் திலகம் (ஸல்) அவர்களால் பெரிதும் கண்டிக்கப்பட்ட ஓர் செய்கையாகும். ''தூஷணத்தையும் துர்ச்[illegible]

விட்டிருப்பதில் இறைவனுக்கு எதுவித தேவையும் கிடையாது'' எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

ஒரு தருணத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எத்தனையோ நோன்பிருப்போர்கள் உள்ளனர். அவர்களுக்குப் பசித்திருந்ததும், தாகித்திருந்ததுமன்றி வேறு ஒரு பிரயோஜனமும் இல்லை'' என்பதாக. இதையுணராதார் சிலர் நோன்பு நோற்றுக்கொண்டு நாள் முழுதும் பிறர் மானத்தைக் கிழிப்பதில் ஈடுபடுகின்றனர். நாவைச் சீர்படுத்தி, மனதைத் தூய்மைப்படுத்தி, நல்லொழுக்கத்தையூட்டா நோன்பென்ன நோன்பு!

இன்னும் சிலருக்குநோன்பு காலத்தில் எடுத்ததற்கெல்லாம் திடீர் திடீரெனக் கோபம் வந்துவிடும். முகத்தில் எள்ளும், கொள்ளும், பொரியும். உண்மையாக நோன்பிருப்பவர்க்கு இது அடுக்காது. இரக்கசிந்தை, பொறுமை, அன்பு வார்த்தை ஆகிய நற்குணங்கள் அவரில் காணப்படவேண்டும். 'யான் ஓர் வணக்கத்திலீடுபட்டுள்ளேன். ஆகவே யான் துற்குணங்களுக்கு என்னில் இடமளித்தல் கூடாது' என்பதை சதா மனதிற்கொள்ளவேண்டும். ''நோன்பு ஓர் கார்மானம். உங்களில் நோன்பு நோற்பவன் மடையனுகவோ தூஷணம் பேசுவோனுகவோ இருக்கவேண்டாம். யாரேனும் தன்னைத் தூஷிக்கவோ, தன்னுடன் சண்டையிடவோ வந்தால் 'யான் நோன்பிருக்கிறேன்' என்று சொல்லவேண்டும்'' என நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். அப்படிக் கோபிப்பவர்கள் ''அஹ்னப்பின் கைஸ்'' என்னும் பெரியார் கூறியதைக் கவனிப்பது நலம்.

ஒருநாள் ஒரு மனிதர் இப் பெரியாரையணுகி இந்தத் தள்ளாத வயதில் நோன்பிருக்கிறீர்களே! உங்கள் உடல் நலம் இன்னும்கெட்டு பலயீனமடைந்து விடுவீர்களே!'' என்றார். அதற்கு அப்பெரியார் ''நான் இந்த நோன்பை ஓர் நீண்ட பிரயாணத்திற்காகத் தயார் செய்துகொண்டிருக்கிறேன். இறைவனை வணங்குவதில் சற்று கஷ்டத்தைச் சகிப்பது அவனுடைய தண்டனையைச் சகிப்பதைவிட மிக மிக இலகுவானதே!'' எனக் கூறினார்.

மற்றுமொரு சாரார் நோன்பு மாதம் வந்துவிட்டதே; நோன்பிருக்க வேண்டுமே என பலவகையான இனிய பதார்த்தங்களையும், நல்ல உணவுகளையும் நிறையச் சேகரித்து வைத்துக் கொள்கின்றனர். நோன்பு நாட்களில் பகலில் உண்ணுது, பருகாது இருந்துவிட்டு இரவு வந்ததும் வட்டியும் முதலுமாக சேர்த்து உண்டுவிட்டு, மூச்சுவிடவும் முடியாது, கும்பகர்ணனுடன் போட்டி போடுகின்றனர். செமியாக்குணம் போன்ற வயிற்றுக் கோளாறுகளை வலிய வரவழைத்துக் கொள்கின்றனர். நோன்பு ஓர் அர்த்தமற்ற சம்பிரதாயம் என்ற தவருன எண்ணத்திலேயே இக்கெடுதியும் உண்டாகின்றது. இப்படிச் செய்வோர்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

SUTANTHIRAN

1955 ஏப்ரல் மாதம் 17ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

திருகோணமலை மகாநாடு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூன்றாவது தேசிய மகாநாடு இம்மாதம் 15, 16, 17ந் திகதிகளில் புராதனப் பிரசித்தியும், சரித்திரப் பெருமையும் வாய்ந்த திருகோணமலையில் கூடுகிறது. புதிய தலைவர் திரு ஸி. வன்னியசிங்கம் இம்மகாநாட்டிலிருந்து கட்சியின் தலைமைப் பதவியைக் கையேற்கின்றார். தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பேசும் இனத்திற்கும் இந்த நாட்டில் பல்வேறு வகையான ஆபத்துக்கள் சூழ்ந்துவரும் இந்த நேரத்தில் திருகோணமலை மகாநாடு பிரச்னைகளைத் தக்க தீர்க்காலோசனையுடன் ஆராய்ந்து சிறந்த செயல் திட்டங்களை வகுக்கும் என்று நம்புகிறோம்.

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களிடையே, இலங்கை ஜனநாயக காங்கிரஸிற்கு அடுத்தபடியாக, சிறந்த முறையில் நிறைந்த கட்டுப்பாட்டுடன் இயங்கிவரும் அரசியல் கட்சி உண்டென்றால் அது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றுதான். இந்த வகையில் தமிழ் அரசுக் கட்சியின் உயர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். ஆயினும் இக்கட்சி இன்னும் எவ்வளவோ வளர்ச்சியும் செல்வாக்கும் அடையவேண்டியிருக்கிறது. இதை எப்படிச் சாதிக்கலாம் என்பதை திருகோணமலை மகாநாடு ஆராயவேண்டும்.

ஒரு அரசியல் கட்சி மக்கள் கட்சியாக மலர்வதற்கு கட்சியினர் இரண்டு துறைகளில் ஊக்கம் செலுத்த வேண்டும். ஒன்று: பிரசாரம்; மற்றொன்று: கிளர்ச்சி. அதாவது எந்த விஷயங்களைப்பற்றி பிரசாரம் செய்யப்படுகிறதோ அந்த விஷயங்களை அடிப்படையாகக்கொண்டு கிளர்ச்சி இயக்கங்களின்மூலம் கொள்கைகளை ஸ்திரப்படுத்தல் வேண்டும், கிளர்ச்சிகளைத் தோற்றுவித்து நடத்துவதனால் இயக்கம் பலம்பெறும். பெருந்திரளான இளைஞர்கள் இயக்கத்தில் சேர்ந்துகொள்வார்கள். கிளர்ச்சி இயக்கங்களின்மூலம் கட்சிக் கொள்கைகளுக்கு பிரசாரமும், ஆதரவும் பெருகும், மக்களிடையே கொள்கைகள் பரந்து செல்வாக்கடையும்.

மகாத்மா காந்தியினுடைய தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திரப் போராட்டத்தை எடுத்துக்கொண்டால், அப்போது மேடைப் பிரசங்கங்கள், மகாநாடுகள் போன்ற பிரசாரத்தில் மட்டும் காங்கிரஸ் கட்டுப்பட்டுக்கிடக்கவில்லை என்பது தெரியவரும். பல கிளர்ச்சித் திட்டங்களை வகுத்து அவற்றை நடத்துவதன்மூலம் மக்களிடையே செல்வாக்கையும் விழிப்பையும் ஏற்படுத்தினர் காந்தியடிகள். உதாரணத்திற்கு அன்னிய துணிப் பகிஷ்காரத்தையும், உப்பு சத்தியாக்கிரகத்தையும் கூறலாம். ஒரு செம்பு கடல் நீரை அள்ளி கரையில் வைத்து உப்புக் காய்ச்சுவதனால் பீரங்கிப் பலமும், துப்பாக்கிப் பலமும் பெற்று விளங்கிய பிரிட்டிஷார் துடைநடுக்கங்கண்டு சுயராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு ஓட்டம்பிடிப்பார்கள் என்பதல்ல காந்திஜீயின் திட்டம். எதிர்ப்புக் கிளர்ச்சிகளை நடத்துவதன்மூலம் உறங்கிக்கிடக்கும் நாட்டைத் தட்டியெழுப்பி மக்கள் அனைவரையும் செயல் வீரர்களாக மாற்றியமைக்கலாம் என்பதை அவர் கண்டார். இந்த மாதிரியான செயல் கிளர்ச்சிகளில் தமிழ் அரசுக் கட்சியும் திட்டம் வகுத்து ஈடுபடுமானால் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் இனத்தை தக்க வேகத்தில் தட்டியெழுப்பி கட்சியையும் கட்டியெழுப்பிவிடலாம். இன்னோரன்ன கிளர்ச்சிகளில் எடுத்த எடுப்பிலேயே வெற்றி கிடைக்கவேண்டும் என்பது நோக்கமாயிருக்கக்கூடாது. தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டாலும் பாதகமில்லை. ஒவ்வொரு தோல்வியும் எதிர்காலத்தில் நிர்மாணிக்கப்படப்போகின்ற வெற்றி மாளிகையின் வச்சிரத் தூணாக அமையும் என்பது திண்ணம். ஆனால் கிளர்ச்சிகளில் ஈடுபட முன்பு சாத்வீக அடிப்படையில், அஹிம்சா ரீதியில் உறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் போராடக்கூடிய ஒரு இளைஞர் படையையும் பெண்கள் படையையும் அமைத்துக்கொள்வது நல்லது.

சாத்வீக முறையில் தமிழ் அரசுக் கட்சியினர் செய்யக்கூடிய கிளர்ச்சிகள் எத்தனையோ உள்ளன. தேர்தல் வரட்டும் அதுவரை சும்மா இருப்போம் என்று அவர்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இப்போதே திட்டமிட்டு ஆங்காங்கு கிளர்ச்சிகளை நடத்தக்கூடிய ஒரு கிளர்ச்சிக்குழுவை(Agitation Committee) ஏற்படுத்துவது மிகவும் நன்று.

இன்னொரு விஷயத்தில் தமிழ் அரசுக் கட்சியினர் கவனம் செலுத்தவேண்டும். அதாவது ஒரு அரசியல் இயக்கத்தின் அலைகள் பட்டணங்களிலும் நகரங்களிலும் மட்டும் அடிபட்டால் போதா. கிராமங்களிலும் குக்கிராமங்களிலும் அவை சென்று மோதவேண்டும். அப்போதுதான் ஒரு இயக்கம் பொதுமக்கள் இயக்கமாகவும், தேசிய இயக்கமாகவும் பரிணமிக்கும். இந்த வகையில் இம்முறை திருகோணமலை மகாநாட்டின் ஒரு பகுதியை குச்சவெளி என்னும் கிராமத்திற்கு கொண்டு சென்றிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இது மட்டும் போதாது. ஒவ்வொரு ஊரையும் கிராமத்தையும் கட்சியின் கிளைகள் மூலம் வலையிட்டுவிடவேண்டும். கிளைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு உழைப்பதற்காகவும் ஒரு கிளை நிர்மாணக் குழுவை அமைப்பது சாலச்சிறந்தது.

ஏனைய அம்சங்களோடு நாம் இங்கே சுட்டிக்காட்டியுள்ளவற்றையும் திருகோணமலை மகாநாடு ஆலோசனைக்கெடுத்துக்கொண்டு நல்ல முடிவுகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

இனம் விமோசனமடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

ஒரு இனத்தின் விமோசனம் அல்லது நல்வாழ்வு அந்த இனம் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் எந்த வழியைக் கடைப்பிடிக்கிறது என்பதில் தான் தங்கியிருக்கிறது சரியான வழியைக் கடைப்பிடித்தால் உயர்ச்சியும் தவறான வழியை மேற்கொண்டால் வீழ்ச்சியும் ஏற்படும். அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் தமக்கென ஒரு ராஜபாட்டையை வகுத்துக் கொள்ளாத எந்த இனமும் சுயேச்சையாக, சுதந்திரமாக வாழமுடியாது. ஒரு இனம் இன்னொரு இனத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு அதன் மூலம் தனக்கு விடிவு ஏற்படும், நல்வாழ்வு பிறக்கும் என்று சுயதிருப்தியோடு வாழ முற்படுமேயானால் அதைப்போன்ற பைத்தியக்காரத்தனம்வேறு எதுவுமே இல்லை. ஏனென்றால் அந்த மற்றொரு இனம் எப்போதும் தன் வாழ்விலும், தன்னலத்திலும் கண்ணும் கருத்துமாய் இருக்குமே தவிர பிற இனத்திற்காக ஒருபோதும் இரங்காது, உழைக்காது, பாடுபடாது.

இந்த உண்மையை உலக சரித்திரங்களும், ஆங்காங்கே நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களும் நமக்கு நன்கு வலியுறுத்திக் காட்டுகின்றன. எந்த இனம் தனது உரிமைகளை அடைவதற்காக தலை நிமிர்ந்துநின்று தன்னை அடக்கி ஆளுபவர்களை எதிர்த்து போர் புரிந்திருக்கிறதோ அந்த இனம் சுகத்தையும் சுபீட்சத்தையும் அடைந்திருக்கிறது. எந்த இனம் குட்டக் குட்டக் குனிந்து கொடுத்திருக்கிறதோ அந்த இனம் மீளா அடிமைத் தனத்தில் மண்டி உருக்குலைந்திருக்கிறது. சரித்திரத்தின் ஏட்டைப் புரட்டினால் இதற்கு எண்ணற்ற உதாரணங்களைக் காணலாம். இப்படியான உதாரணங்களிலிருந்து ஒரு இனம் தனக்கு விமோசனத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமானால் அது என்னென்ன செய்ய வேண்டும் என்பதை நாம் நிர்ணயிக்கக் கூடியதாக இருக்கிறது. அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

முதலில் ஒரு இனம், தான் என்ன இலக்கை அடைய வேண்டும் என்பதை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி ஆராய்ந்து தீர்மானித்துக் கொள்ளவேண்டும் கொள்கையும் குறிக்கோளும் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்வது பயன்தராது. காலம் வரட்டும் கொள்கையைத் தீர்மானிப்போம் என்று எண்ணிக்கொண்டு குருட்டாம் போக்கில் போய்க்கொண்டிருப்பது, வெள்ளம் வரட்டும் அணை கட்டலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் புத்தி சாலித்தனமாகவே முடியும்.

இரண்டாவதாக, அப்படிக் கொள்ளப்படும் இலக்கின், இலட்சியத்தின் தன்மைகளையும் சாதக பாதகமான பெறுபேறுகளையும் மக்கள் யாவரும் நன்கு விரிவாய் விளங்கிக் கொள்ளும்படி செய்யவேண்டும். மக்களிடையே தெளிந்த விளக்கம் ஏற்படாதவரை எந்தக் காரியத்திற்கும் ஆதரவும் பலமும் கிட்டாது.

மூன்றாவதாக, மேற்கொள்ளப்படும் இலக்கு புனிதமானதா, நேர்மை நியாயத்துக்குட்பட்டதா என்பதை ஆய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். குறிக்கோள் நேர்மையானதாகவும் தர்ம நியாயத்துள் கட்டுப்பட்டதாகவும் அமையாவிட்டால் ஆரம்பத்தில் எவ்வளவு வலிமையுடையதாயினும் [illegible] பட்ட போதிலும் இறுதியில் அது தோல்வியையே தேடித் தரும். இதற்கு எத்தனையோ சான்றுகளைக் காட்டலாம்.

ஹிட்லர் ஐரோப்பா அனைத்தையும் கட்டியாள வேண்டும் என்று பேராசைப்பட்டார். இலக்கு தவறானதாக இருந்ததனால் அவர் வெற்றி காண முடியவில்லை. நெப்போலியனும் ஹிட்லரைப்போலவே அங்கலாய்த்தான். ஆரம்பத்தில் அவன் ஒரு சிறிது வெற்றியைக் கண்டானெனினும் முடிவில் அவன் கண்டதும் படுதோல்விதான்.

ருஷிய மக்களுடைய குறிக்கோளும், இந்திய மக்களுடைய குறிக்கோளும் புனிதமானதாகவும் நேர்மையானதாகவும் இருந்ததனால் அவர்கள் முறையே கொடிய ஜார் ஆட்சியையும், பலம் வாய்ந்த பிரிட்டிஷ் ஆட்சியையும் முறியடித்து சுதந்திரக் கொடி நாட்டினார்கள்.

நான்காவதாக இலக்கையும் கொள்கையையும் முன்னிறுத்தி அவற்றை அடைவதற்கு மக்களை இட்டுச் செல்ல ஏற்ற அரசியல் இயக்கங்கள், கட்சிகள் அமைய வேண்டும். அதாவது இலக்கையும் இலட்சியத்தையும் சுற்றி கட்சி வளர வேண்டும். கட்சியைச் சார்ந்து மக்கள் வளர்ச்சியுற வேண்டும். அரசியல் கட்சி சிறந்தமுறையில் வளர்ச்சியடைவதற்கு இரண்டு அம்சங்கள் அவசியம். நேர்மையும், கொள்கையில் உறுதிப்பாடும், தன்னலமற்ற தன்மையும் வாய்ந்த தலைவர்கள் வேண்டும். அடுத்ததாக தலைவர்களும், மக்களும், ஒழுங்கு, ஒழுக்கம், கட்சி அமைப்புக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் சீலம் ஆகிய நற்பண்புகள்வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். மக்களை ஏமாந்த சோணகிரிகளாக மதிக்கும் தலைவர்களும். தனிப்பட்ட தலைவரை தண்டனிட்டு வீர வணக்கம் புரியும் மந்தைகளான மக்கள் கூட்டமும் இடம்பெறலாகாது. தலைவர்கள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதிநிதிகளாகவும், கட்சி பொதுமக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் ஸ்தாபனமாகவும் விளங்க வேண்டும். கட்சியில் அங்கத்துவம் வகிப்பவர்கள் சிறு கூட்டத்தினராய் இருந்தபோதிலும் ஒரே நோக்கம் உடையவர்களாகவும் இருந்தால் அதுவே பெரும் பலம்பொருந்தியதாக விளங்கும். கட்சியை விசாலிப்பதற்காகவேற்று நோக்கம் கொண்டோரையெல்லாம் ஒன்று சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயம் ஆபத்தானது. அதனால் பலம் ஏற்படுவதற்குப் பதிலாக பங்கமே ஏற்படும்.

ஐந்தாவதாக, மேற்கண்டபடி கட்சியை அமைத்தபின் கட்சியை வளம் பெறச் செய்வதற்கான வேலைகளில் ஈடுபட வேண்டும். இதற்கு உடல் பொருள் ஆகிய சகலவற்றையும் தியாகம் செய்யக்கூடிய தேசபக்தர்களும், சேவையாளர்களும் தேவை. இவர்கள் கிளைகள் அமைப்பதன்மூலம் கட்சியை விஸ்தரிக்கவும், கட்சியின் கொள்கைகளைப் பரப்பவும் தொண்டு புரிய வேண்டும். உழைக்கவல்லோர் உழைக்க வேண்டும், பேசவல்லோர் பேச வேண்டும், எழுதவல்லோர் எழுத வேண்டும், பொருள் படைத்தோர் தாராளமாகப் பொருளுதவி புரிய வேண்டும். இந்த நிலைமையைக் கட்சியடைந்து விட்டால் பின்பு கட்சி பல துறைகளிலும் இனத்திற்கு சேவை செய்யும் தகைமையைப் பெற்றுவிடும்.

ஆறாவதாக, இனத்திற்காக பூரணபலத்துடன் உழைக்கும் அந்தஸ்தைப் பெற்ற கட்சி பலதுறைகளிலும் இனநன்மைக்காக வேலை செய்யலாம். சமூகம், அரசியல், பொருளாதாரம், கலை கலாச்சாரம், மொழி முதலிய எல்லாத்துறைகளிலும் கட்சி ஈடுபட்டு உழைக்கும்போது இனத்தின் உயர்வு, இனத்தின் விமோசனம் தானாகவே ஏற்படும். இனத்தின் நல்வாழ்வு இயற்கையாகவே மலர்ச்சியடையும்.

மேற்கூறிய துறைகளில் சமூகமும் அரசியலும் பிரதான துறைகளாய் விளங்குகின்றன. இந்த இரண்டு துறைகளும் சீர்செய்யப்பட்டால் பொருளாதாரத் துறையை விருத்தி செய்வது சுலபமாகிவிடும்.

தமிழ்ப் பேசும் இனத்தின் இன்றைய நிலையை எடுத்துக் கொண்டால் சமூகத்துறையில் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்யப்படவிருக்கின்றன. மக்களிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வேண்டியிருக்கிறது. தீண்டாமையென்கின்ற ஒரு கொடிய நோய் தமிழ் இனத்தையே பல கூறுக்கிப் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கிறது. பாரத நாடு அடிமைப்பட்டதற்கும் இதுவே பெருங்காரணமாய் இருந்தது. இந்தக் குறையைப் போக்கினால் ஒழிய இந்தியாவிற்கு விடுதலை இல்லை என்பதை உணர்ந்த மகாத்மா காந்தி இதை எவ்வளவு தூரம் எதிர்த்துப் போராடினார் என்பது யாவரும் அறிந்ததே. அடுத்தபடியாக மக்களிடையே நிலவும் மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்கவழக்கங்களையும், அறியாமையையும், அஞ்ஞானத்தையும் அகற்ற வேண்டும்.

அரசியல் துறையில் கட்சி வேலை செய்யும்போது இரண்டுவிதமான திட்டங்களை அமைத்து வேலை செய்வது அவசியம். நீண்டகாலத் திட்டத்தின்கீழ் இனத்தின் இறுதி இலட்சியத்தையும் கொள்கையையும் அடைய வேலை செய்ய வேண்டும். அடுத்தது நடைமுறையில் தோன்றும் தற்காலக் குறைகளைத் தீர்க்க எதிர்த்து நின்று போராட வேண்டும்.

பொதுத் தேர்தலில் ஈடுபடுவதுதான் ஒரு அரசியல் கட்சியின் பிரதான நோக்கமாயிருக்கக் கூடாது என்பதை நாம் ஒப்புக்கொண்டபோதிலும், மேலே சொன்னபடி தற்காலக் குறைகளை எதிர்த்து நின்று போராடித் தீர்ப்பதற்கு கட்சியின் அங்கத்தவர்கள் பாராளுமன்றத்துள் பிரவேசிப்பது அவசியமாகிறது. மேலும் பொதுத் தேர்தல்கள் அந்தந்தக் காலத்தின் போக்கை நிர்ணயிக்கும் காலக் கண்ணாடியாக அமைந்துள்ளதால் அவற்றை ஒரு அரசியல் கட்சி முற்றுகப் புறக்கணித்து விடவும் முடியாது.

பணத்தை வாரியிறைத்து விரயம் செய்யக் கூடியவர்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற கீழ்த்தரமான நிலைமை இன்று நிலவி வருகிறது. தேர்தல் போட்டியில் தலைகாட்டியவர்களின் பொருளாதார முதுகெலும்பு முறிந்துபோய்விடுகிறது. இதனால் தகுதிவாய்ந்தவர்கள் அரசியல் அரங்கிற்குவர அஞ்சுகிறார்கள். இந்த இழி நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். பதில் உபகாரம், கார் சவாரி, சாராய சம்ரக்ஷணை, இவற்றை எதிர்பாராமல் தங்கள் வாக்குரிமைகளைச் சரியான வகையில் பிரயோகிக்க மக்கள் முன்வரவேண்டும். ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பது அந்தப் பிரதிநிதியின் சொந்த விஷயம் என்று எண்ணாமல், அது மக்கள் பொறுப்பு, தங்களுக்குத் தாங்களே செய்யும் ஒரு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசிய நிதிகளுக்கு இலங்கை மொத்தம் ரூபா 96 லட்சம் கொடுத்துள்ளது

நிபுணர்கள் ஆலோசனையும்-கடன் உதவியுமே பிரதிப்பலனுகக் கிடைத்தவை

இந்த உதவித்திட்டங்கள் பிரமாதமாக எதையும் சாதிக்கவில்லை என்று அபிப்பிராயம்

(நமது நிருபர்)

கீழத்தேயத்தில் பின்தங்கியுள்ள நாடுகளுக்கு உதவுவது என்று பல திட்டங்களையும், உதவி நிதிகளையும் மேற்கத்தைய வல்லரசுகள், மற்றும் ஸ்தாபனங்கள் ஆரம்பித்துள்ளன. இத்தகைய பலதரப்பட்ட திட்டங்களுக்கு சென்ற ஐந்து வருடங்களில் இலங்கை மொத்தம் ரூபா 96667519 சதம் 11 அளித்திருக்கிறது.

இலங்கை கொடுத்துள்ள மேற்படி நிதியின் விபரம் பின்வருமாறு: விசேஷ ஏஜென்ஸிகளுக்கு ரூபா 2030438 சதம் 86, சர்வதேசிய மொனட்ரி நிதிக்கு ரூபா 71428571 சதம் 52, கொழும்புத் திட்டத்திற்கு ரூபா 70080 உலக வங்கிக்கு ரூபா 142957 மற்றும் செலவினங்களுக்கு ரூபா 1914808 சதம் 73.

இலங்கை பல்வேறு உலக நிதிகளுக்கு அளித்த பெருந் தொகைக்குப் பதிலாக நமக்குக் கிடைத்துள்ளவை என்ன தெரியுமா? இலங்கை நிதி மந்திரி திரு எம். டி. எச். ஜெயவர்த்தனு வெளியிடும் விபரத்தைப் பாருங்கள்.

(1) இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிபுணர்கள் ஆலோசனை.

(2) இலங்கையர்களுக்கு வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவ பயிற்சி அளிக்க நிபுணர்களின் சேவை.

(3) பொருளாதார வளர்ச்சி சம்பந்தப்பட்ட துறைகளில் பயில இலங்கையர்களுக்கு மேற்கத்தைய நாடுகளில் உபகாரப்படிப்பு.

கொழும்பு திட்டத்தின் கீழ் இலங்கை கணிசமான அளவுக்கு யந்திர உதவி பெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது. 1954லிருந்து இலங்கைக்கு 149 நிபுணர்களின் ஆலோசனைகள் கிடைத்திருக்கிறது. மொத்தம் 449 இலங்கையர்கள் பிற நாடுகளில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

உலக வங்கியிலிருந்து இலங்கைக்கு கிடைத்துள்ள நன்மை, தொழில் நுணுக்க நிபுணர்களின் ஆலோசனையும், கடனும். இலங்கையின் பொருளாதார நிலை பற்றி சமீபத்தில் இலங்கை அரசாங்கம் நடத்திய கணக்கெடுப்பில் உலக வங்கியிலிருந்து ஒரு நிபுணர்கள் கோஷ்டியின் உதவி கிடைத்திருக்கிறது. வெவ்வேறு திட்டங்களுக்கு இலங்கை ரூபா 96 லட்சத்தை கொட்டி அளந்திருந்தபோதிலும், கொழும்புத் திட்டம் மற்றும் உதவித் திட்டங்களால் இலங்கை அடைந்த நன்மை ஒன்றும் பிரமாதம் இல்லை என்று சில வட்டாரங்களில் கருதப்படுகிறது, இலங்கை வங்கிமூலம் இலங்கைக்கு கிடைத்துள்ள கடன் உதவி, நம் நாட்டை மேற்கத்தைய வல்லரசுகளின் பொருளாதார—அரசியல் தொங்கு தசையாக இருப்பதில்தான் கொண்டு சென்றுள்ளது என்று மேலும் இந்த வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13

சரியான விடை

இடமிருந்து வலம்	மேலிருந்துகீழ்
1. சித்திரை	1. சிந்தனையாளர்
3. அம்புயம்	2. திங்கள்
5. தங்கல்	3. அட்டமி
6. ம்டவ	4. புயம்
8. மிமிழ்	7. வன்மம்
9. யாழ்	8. சிரி
10. பாரி	10. பாதசரம்
12. காத	11. மிக்கோர்
13. தயக்கம்	14. கல்
15. கோல்	16. அந்தி
17. கயர்	17. கங்கை
19. மந்தம்	18. பழைமை
20. துதி	19. மது
21. நேர்மை	

பிஜைகளாகப்,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அரசாங்கம் திரும்பவும் எடுத்துவரும் நடவடிக்கைகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீறுவதுடன் மட்டுமல்ல, உலக அபிப்பிராயத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட சகல தார்மீக உடன்பாடுகளையும் இது ஒதுக்கித் தள்ளுவதாகும் என்று கருதப்படுகிறது.

சுதந்திரன் செய்தியால் 'சிங்களம்' இலங்கையாகிறது

தேசப் படப் புத்தகத்தில் திருத்தம்

எடின்பரோவிலுள்ள ஜோன் பார்த்தலோமியோ அன்ட் சன்ஸால் அச்சிடப் பெற்று சென்னை ஒக்ஸ்போர்ட் யூனிவேர்ஸிட்டி பிரஸால் வெளியிடப் பெற்ற ''ஆக்ஸ்பர்ட் பள்ளிக்கூட தேசப் படப் புத்தகம்'' என்ற ஏட்டில் காணப்படும் சகல இலங்கைப் படங்களுக்கும் சிங்களம் என்று பெயரிடப் பட்டதாக ஒரு செய்தியை 27. 3. 55 சுதந்திரன் இதழில் வெளியிட்டிருந்தோம். இந்தக் குறைபாட்டை முதன் முதலாக சுட்டிக்காட்ட முன் வந்த ஒரே பத்திரிகை சுதந்திரன்தான்.

மேற்படி செய்தியைக்கண்ணுற்றதும் சென்னை ஒக்ஸ்போர்ட் யூனிவேர்ஸிட்டி ஸ்தாபனத்தார் சுதந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அக்கடிதத்தின் புகைப்பட நகல் இங்கு பிரசுரமாகிறது. அதன் தமிழாக்கம் பின்வருமாறு:-

6—4—1955

ஆசிரியர்
''சுதந்திரன்''
194 ஏ தட்டாரத்தெரு
கொழும்பு 12

தேசப்படப் புத்தகம்

அன்புள்ள ஐயா,

தங்களது 27-3-55 இதழில் மேற்படி விஷயம் சம்பந்தமாகதாங்கள்பிரசுரித்த செய்தி எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஸிலோனுக்கு இலங்கை என்ற பெயருக்குப் பதிலாக சிங்களம் என்ற பதத்தை உபயோகித்திருந்ததற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தீர்கள். இந்தப் பிழையை பாராளுமன்ற அங்கத்தவர் திரு சுந்தரலிங்கம் சமீபத்தில் எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தார். சென்ற இருபது வருடங்களாக இந்த தேசப்படப் புத்தகம் இலங்கையில் விற்பனையாகி வருவதாகவும், ஆயினும் எதுவித ஆட்சேபனையும் இதுவரை யாராலும் தெரிவிக்கப்படவில்லை என்றும்அவருக்குநாம் அறிவித்தோம். என்றாலும் இந்தப் பதப்பிரயோகம் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் மனதைப் புண்படுத்தலாம் என்று உணர்கிறோம் எனவே இந்த வருடம் வெளியிடுவதற்காக நாம் தயாரித்துவரும் இந்த தேசப்படப் புத்தகத்தின் ஐந்தாவது பதிப்பில் இந்தத் தவறை திருத்தியிருக்கிறோம். எமது தேசப்படப் புத்தகம் இலங்கையிலுள்ள யாரையும் புண்படுத்தாது என்ற உத்தரவாதத்தை உங்களுக்குத் தருகிறோம்.

இலங்கையின்இடப்பெயர்கள்பற்றி நீங்கள் குறிப்பிட்ட தவறுகள் எமது ஆறுவது பதிப்பில் திருத்தப்படும் என்று கூற விரும்புகிறோம். காலம் கடந்துவிட்டதால் இந்த திருத்தங்களை எமது ஐந்தாவது பதிப்பில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

இப்படிக்கு
உங்கள் உண்மையுள்ள
ஒக்ஸ்போர்ட் யுனிவர்ஸ்டி பிரஸ்
அதிபர்

மேற்படி கடிதத்திலிருந்து சுதந்திரன் சுட்டிக்காட்டிய குறைகள் நீக்கப்படுவதாகவும் ஆறுவதுபதிப்பில் இடப் பெயர்களும் சுதந்திரன் காட்டியபடி திருத்தம் செய்யப்பட விருப்பதாகவும் அறிய வாசக நேயர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகிறோம். நமது அபிப்பிராயத்தை அனுசரித்து ஏற்ற திருத்தங்களைச் செய்ய முன்வந்த இந்த பிரசுரகர்த்தாக்களுக்கு தமிழ்ப் பேசும் மக்கள் சார்பாக எமது பாராட்டல்கள்உரியதாகுக.

OXFORD UNIVERSITY PRESS
BHARAT INSURANCE BUILDING MOUNT ROAD MADRAS 2.

London
Geoffrey Cumberlege
Oxford
The Clarendon Press

Post Box 340
Telephone 86456
Cables
OXONIAN MADRAS

452/71-A/V.

6.4.1955

The Editor
Sutantiran
194A Silversmith Street
Colombo 12

Dear Sir

OXFORD SCHOOL ATLAS (Tamil)

It has been brought to our notice that an article was printed in the columns of your journal on 27.3.55 concerning the above publication. In this article objection was taken to the use of the name Singalam instead of Ilangai for Ceylon. This error was recently brought to our notice by Mr Suntheralingam, M.P. We pointed out to him in our reply that this atlas has been on sale in Ceylon for more than 20 years, and that no objection has been raised to the use of the name Singalam during this time. Since, however, we realized that the name could cause some offence among the Tamil population of Ceylon, we have altered it to Ilangai in all places in the fifth revised edition which is in preparation and which will be published this year. We can therefore assure you that in future our atlas will give no grounds for offence in Ceylon.

As regards the other amended spellings of place names in Ceylon which are suggested in your article, these shall have our attention when the sixth revised edition of the atlas is published. It is unfortunately too late to incorporate them in the fifth edition.

Yours faithfully
OXFORD UNIVERSITY PRESS
Manager

AGENTS IN INDIA BURMA AND CEYLON FOR GEORGE G. HARRAP & CO LTD AND THE UNIVERSITY TUTORIAL PRESS LTD

எப்பொழுதும் நெஸ்கபே அருந்தலாம்

நெஸ்கபே

100% சுத்தமான காப்பி

நெஸ்கபே முழுக்க முழுக்க காபியே - உயர்ந்த ரக, புத்தம் புதிய காபி கொட்டைகளை வறுத்து பதம் செய்யப்பட்டது. அதன் ரம்யமான மணமும் - ருசியும் நிகரற்றது. இதுடன் சுடுதண்ணீர், பால், சீனியை, கலந்ததும் - உங்களுக்கு தேவாமிர்தம போன்ற காப்பி கிடைக்கிறது.

RICH ROASTER FRESH GOODNESS



உலகிலுள்ள ஏனைய காப்பி வகைகளிலும் பார்க்க அதிகமான விற்பனையுள்ளது நெஸ்கபே

100% சுத்தமான காப்பி - ஒரே கணத்தில் கரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

நீதி எங்கே?

வை. மு. அழகேசன்

"மலையை உடைத்து மட்டமாக்கி தேயிலையும் ரப்பரும் நட்டு வளர்த்து இந்நாட்டைப் பொன்னாடாக்கியவர் இந்தியத் தமிழரே! காடுகளைத் திருத்திக் களனியாக்கிப் பொன் விளையும் நாடாக்கியவர்கள் இந்தியத் தமிழரே! இந்நாட்டின் நகரங்கள் அனைத்தையும் அனுதினமும் துப்பரவாக்கிப் புனித நகராக்கிக்கொண்டிருப்பவர் இந்தியத் தமிழர்களே. மழையையும், வெயிலையும், குளிரையும் பொருட்படுத்தாது இரத்தத்தைச் சிந்தி இந்நாட்டை வளப்படுத்தினவர் யாவர்? அவரெல்லாம் இந்நேரம் எலியாகவும், முயலாகவும் இந்த ஆட்சிப்பீடத்தினரால் கருதப்படுகின்றனர்.

தியாகமே வாழ்வாகக் கொண்ட அந்தப் புண்ணிய பரம்பரையில் வந்தவர்களில் நானும் ஒருவனே. என் தாயை அறியேன். தந்தையை அறியேன். தேயிலைத்தோட்டத்தில் வியர்வை சிந்தி வளர்ந்தேன். தொழிலாளர் போராட்டங்களில் ஈடுபட்டதற்காக வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டேன். இன்று நானும் ஓர் கள்ளத்தோணி நிலையில் ஆக்கப்பட்டுள்ளேன். இந்தியாவில் என் தாய்தந்தையர் பிறந்த ஊரையே அறியேன். நான் மட்டுமா? இப்படியான இலட்சக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நிலையென்ன? சட்டம் சட்டமென்று புதியவற்றையெல்லாம் தினந்தினம் ஆக்கி எம்மையெல்லாம் கடலுக்குள்ளே தள்ளிவிடப் பார்க்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் என்றே ஓர்நாள் முடிவு தேடித்தான் ஆக வேண்டும்" என்று அந்தக் கூட்டத்திலே மலையாண்டி முழக்கினான். யாவரும் கைகொட்டினர். கூட்டம் முடிந்ததும் வெளியேறினர். மலையாண்டிக்கு உணர்ச்சி சிறிது அடங்கியபோது அந்த ஒரு சிலர் மட்டுந்தான் இருந்தனர். வெறும் தண்ணீரை அருந்திவிட்டு வெளியேறினான். மனம்போனபடி நடந்தான். அவனுக்குக் கொழும்பிலே இருக்க இடமில்லை. தங்கவும் இடமில்லை. மாற்றிக் கட்டவும் துணியில்லை. ஒரே உடையோடுதான் சுற்றித் திரிந்தான்.

உள்ள வேலையும் போய்விட்டது. கொழும்பிற்கு வந்தபோது கொண்டுவந்த சில ரூபாய்களும் கரைந்துவிட்டன. பிச்சை எடுக்க வேண்டிய நிலை. சிந்தித்தவாறே கோல்பேஸ்வரை வந்துவிட்டான். கடற்கரையில் உட்கார்ந்தவாறே குமுறும் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தான். தூரத்தே கடலோடு போராடி மீன்பிடிக்கும் வள்ளங்களிலுள்ள விளக்குகள் விண்மீன்களைப்போல அடிவானத்தில் மின்னிக்கொண்டிருந்தன. அவனது எதிர்காலம் சூன்யமாகவே தோன்றியது.

நல்ல உடல் இருந்தது. உள்ளத்தில் உரமிருந்தது. எங்கே சென்றாலும் உழைத்துவிடலாம். ஆனால் பிறந்து தவழ்ந்து வளர்ந்த இந்நாட்டை விட்டுப்போவதா? என்ற எண்ணம் தோன்றிய போதெல்லாம் அவன் உள்ளம் கொதித்தது. முடியாது போராடித்தான் தீர வேண்டும். இந்த அக்கிரமத்திற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று இடையிடையே அந்தக் கடல்போலவே அவன் உள்ளமும் பொங்கிப் பொங்கி எழுந்தது. அந்தத் தோட்டத்தில் சிலகாலம் வேலை செய்ததைத் தவிர வேறு எவ்வித அத்தாட்சியும் அவனிடம் இல்லை.

இலங்கையில் பிறந்ததாக அவனுக்கு மனஉறுதியிருந்தது. அவனை வளர்த்த கிழவியின் ஞாபகம் மட்டும் சிறிது இருந்தது. பிறந்த திகதியோ, பிறந்த இடமோ எதையும் அவன் அறியமாட்டான். வேலையை இழந்த பின்னர்தான அவனுக்குச் சிறிது அச்சம் ஏற்பட்டது. கள்ளத்தோணி என்று பலரைக் கைது செய்து அனுப்பப்பட்டதைப்பற்றியெல்லாம் அவன் கேள்விப்பட்டுள்ளான். உண்மையாக இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர் பலர்கூட அத்தாட்சிகள் இல்லாததினால் கள்ளத்தோணியாகியதைக் கண்டுள்ளான்.

இவற்றைப்பற்றியெல்லாம் எண்ணி எண்ணி அவன் மனம் அலுத்துவிட்டது. ஒரு சிமிந்திச் சீட்டில் படுத்துக் கொண்டான்.

ஃ

காலையில் வெளியான கொழும்புப் பத்திரிகைகளிலெல்லாம் கள்ளத்தோணியில் வந்த மலையாண்டி என்பவன் கோல்பேஸில் கைது செய்யப்பட்டான் என்றோர் செய்தி வெளிவந்தது.

பாவம்! மலையாண்டிக்கு யாருமில்லை. கைதிக்கூண்டில் அவன் தள்ளப்பட்டபோது அவன் உள்ளம் எரிமலைகளாகக் குமுறியது. இளமை துடித்தது. ஆயினும் சட்டம் என்ற இரும்புப் பிடியின் முன்னர் இந்தத் துடிப்பெல்லாம் என்ன செய்ய முடியும்?

அவன் கள்ளத்தோணியில் வந்தவன் என்பதற்குரிய சாட்சிகள் அனைத்தையும் பொலிசார் சேகரித்தனர்.

மலையாண்டி முதல் நாள் தலைமைவகித்த அன்பருக்கு மட்டும்தான் கைது செய்யப்பட்டதை அறிவித்தான்.

மறுநாள் நீதிபதியின் முன்னர் அவன் நிறுத்தப்பட்டான். பொலீசார் சான்றுகளை வாசித்தனர். இவற்றிற்கெல்லாம் என்ன சொல்கிறாய்? என்று நீதிபதி மலையாண்டியை ஆங்கிலத்தில் கேட்டார்? முதலியார் மொழிபெயர்த்தார். அது வரையும் உள்ளக் கொதிப்பை அடக்கிக் கொண்டிருந்த மலையாண்டி வீறுகொண்டெழுந்தான்.

"இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே வளர்ந்து வியர்வை சிந்தி உழைத்து வாழ்ந்து வரும் நான் கள்ளத்தோணியில் வந்தேன் என்று சட்டம் நிரூபிக்கிறதென்றால் பொய்களை நிரூபிக்கும் சட்டமா இந்நாட்டில் நிலவுகிறது.

"நிறுத்து, சட்டத்தை இழிவுபடுத்த முனைகிறாய். சட்டத்தை அவமதித்த குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று நீதிபதி அவன் உணர்ச்சிகளை அடக்கினார்.

அவன் இலங்கைப் பிரஜை என்று காட்டுவதற்குரிய சான்றுகளைத் தேடுவதற்குக் காலம் கொடுக்கும்படி ஒரு புரக்டர் எழுந்து சொன்னார். நீதிபதி அப்படியே அனுமதித்தார்.

ஃ

நீதிபதி சில்வாவும் மனைவியும் காலை உணவு உண்டுகொண்டிருந்தனர். காளியம்மாவின் ஒரே துடுக்குத்தனமான பேச்சுக்களை அவர்கள் ரசித்தவண்ணமிருந்தனர். காளியம்மாவிற்கு வயது பதினாறு. நீதிபதி சில்வாவின் வீட்டிலே வேலைக்காரி. அவளை வீட்டிலே வேலைக்கு வைத்தது முதல் நீதிபதி சில்வாவின் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராகவே அவள் மாறிவிட்டாள். அவளுக்கு அவர்கள் செல்லம் கொடுத்து வைத்திருந்தனர். அவளும் அவர்களிடம் தன் மனதிலுள்ளதை மறைக்காது கூறிவிடுவாள்.

"மலையாண்டி என்றொருவன் கோட்டிலே சினிமாப் படங்களில் வருவதுபோலக் கோட்டை அவமதித்துப் பிரசங்கம் நடத்தினான். கோட்டை அவமதித்ததாக அவனை ஆறு மாதம் அனுப்ப இருந்தேன். ஏதோ ஒரு உணர்ச்சி என்னைத் தடுத்துவிட்டது. இன்று அவன் மீண்டும் விசாரணைக்கு வருகிறான் அவன் முகத்தைப் பார்க்கும்போது கள்ளத்தோணியிலே வந்தவனைத் தெரியவில்லை. பதுளையிலே ஒரு தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தவனும். அதற்குரிய சான்றுகளைக் கொண்டுவந்து நிரூபிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்குக் கிடையாது" என்றார்.

காளியம்மாவின் முகத்தில் மாறிய திகைப்பை அவர்கள் காணவில்லை. அவளுடலில் ஏதோ ஒருவித துடிப்பு ஏற்பட்டது.

நீதிபதி உணவு முடிந்ததும் காரில் ஏறி நீதிஸ்தலத்திற்குப் போய்விட்டார். காளியம்மா கடைத்தெருவிற்குப் போவதாக வெளியேறினாள். அவளும் நேரே நீதிஸ்தலத்திற்கே சென்றாள். கூட்டிலே மலையாண்டி நின்றான்.

அவள் கண்ணிலே நீர் சொரிந்தது. சந்தேகமேயில்லை. "அவன்தான் அவன்தான்" என்று அவள் உள்ளம் குறுகுறுத்தது. பதுளையில் இருபது வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் அவள் கண்முன்னே ஓடின. அப்போது சில்வா ஒரு அப்புக்காத்தாக இருந்தார். திருமணம் செய்துகொள்ளவில்லை. காளியம்மா அவர் வீட்டிலே வேலைக்காரி. எஜமானனின் சேஷ்டைகளுக்கு அவள் பயபக்தியோடு விட்டுக்கொடுத்தாள். ஒருமுறை கர்ப்பம் ஏற்பட்டது. அவர் ஏதோ மருந்துகள் கொடுத்துச் சிதைத்துவிட்டார். காளியம்மாவிற்கு அது சிறிதும் பிடிக்கவில்லை. என்ன செய்வது? அவர் தானே அவள் கடவுள். ஆகவே அவர் எண்ணங்களுக்கு அவள் ஒருபோதும் எதிர்ப்புக் கூறுவதில்லை. அடுத்த முறையும் கர்ப்பம் ஏற்பட்டது. அவள் அவருக்குத் தெரியாது மறைத்து வந்தாள். 4, 5 மாதங்களின் பின்னர்தான் தெரிவித்தாள். அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஒரு தேயிலைத் தோட்டத்திற்கு தமக்குத் தெரிந்தவர்மூலம் அவளை அனுப்பினர். பிள்ளை பிறந்ததும் அங்கே உள்ள ஒரு கிழவியிடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் எஜமானரின் அறிவித்தலின்படி அவரிடம் வந்தாள். அதன்பின்னர் சில்வா அங்கு இருக்கவில்லை. கொழும்பிற்கு வந்துவிட்டார். திருமணம் செய்து மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகியும்விட்டார். அதோடு இன்றோர் நீதிபதி! காளியம்மாவின் முன்னிலையிலே விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்.

"தந்தையைப்போல அப்படியே உரித்து வைத்தபடி வளர்ந்திருக்கிறான்" என்று காளியம்மா சொல்லிக்கொண்டாள்.

'அவன் உங்கள் மகன்தான்' என்று அவள் எப்படிச் சொல்லமுடியும். வேண்டுமானால் வீட்டிலே தனிமையாக எவரும் இல்லாதபோது சொல்லலாம். அதன் முன்னரே தீர்ப்புக் கூறிவிட்டால்.....? அவள் உள்ளம் பதைபதைத்துக்கொண்டிருந்தது. தனது மகனை அணைத்து மகிழ வேண்டும் என்று துடிதுடித்துக்கொண்டிருந்தது.

"மலையாண்டி கள்ளத்தோணியில் வந்தவனெனக் குரு வாகியிருப்பதால் நாடு கடத்த உத்தரவிடுகிறேன்" நீதிபதி சில்வா தீர்ப்பளித்துவிட்டு, அடுத்த வழக்கைக் கூப்பிட்டார்.

காளியம்மாவின் உள்ளம் பதைத்தது. முகம் வியர்த்தது. கண்கள் இருண்டன. நிலத்திலே வீழ்ந்தாள்.

மொழிவழி ஆட்சி கோரி மக்கள் கிளர்ச்சி

"இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, இந்தியா ஒரே இயல்பான, மொழிவழி மாநிலங்களாகப் பிரித்து அமைக்கப்படும் என்று இந்தியப் பேரரசு அறிவித்தாக வேண்டும்.

இதன் பின்னரும், இந்தியாவில் மொழிவழியாக மாநிலங்கள் அமைவதைத் தவிர்க்கவோ, தாமதிக்கவோ அரசாங்கம் முயற்சிக்குமானால், அந்த முயற்சியை முறியடிக்க, நாடு முழுவதும் மக்கள் கிளர்ச்சி செய்வார்கள்" என்ற தீரமானம் ஒன்றை, அம்பாலாவில் நடைபெற்ற மூன்றுவது அகில இந்திய மொழிவழி மாநில அமைப்பு மாநாடு நிறைவேற்றியுள்ளது.

'சுதந்திரன்'

சந்தா விபரம்

வருட சந்தா ரூபா 7-50

ஆறு மாத சந்தா ரூபா 4-00

விபரங்களுக்கு எழுதவும்:-

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

இன்ஷூரன்ஸ் சம்பந்தமானதா .....

கலந்தாலோசியுங்கள்!

வான் காட்

குறைந்த சிலவில் நிகரற்றசேவை

★ மோட்டார். ★ ஆயுள்.

★ தொழிலாளர் நஷ்டஈடு.

கே. கிருஷ்ணசாமி

பிரதம ஏஜன்ட்

வான்காட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

மன்சூர் கட்டடம்

மெயின் வீதி, கொழும்பு—11.

போன்: 5054 தந்தி: கார்டியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையின் சந்நிதியான ஆலயத்திலே

ஆபாச ஆட்டங்களுக்-நளினக் கூத்துக்களுமா?

அருள் மழை பொழியவேண்டிய இடத்தில் அபச்சாரம்

தலைவிரி கோலம் போடுவது அக்கிரமம்

கோயில்களில் காணப்படும் இந்த மிலேச்சத் தனத்தை ஒழிக்க

மதபக்தர்களும்-சீர்திருத்த செம்மல்களும் முன்வர வேண்டும்

வ. மகாலிங்கம்

அங்கே ஆற்றின் விளிம்பிலே அநேக ஆண்டுகளுக்கு முன் கட்டியெழுப்பப்பட்ட முருகனின் கோவில். அன்பொழுக, பக்திப் பிரவாகம் அணைகடந்தோட, யாழ்ப்பாண மக்கள் அனைவரும் அந்தக் கோவிலை தரிசிப்பர். கூன் குருடுகள், சமுதாயத்தினால் சாக்கடைக்குள் வீசப்பட்ட நடைப்பிணங்கள், திருவடி அலம்பிய தீர்த்தத்தைக் கொண்டே தீராத நோய்களைத் தீர்த்துக்கட்ட முடியுமென்ற திடநெஞ்சர்கள், ஏமாற்றும் சுரண்டலும் நிறைந்த இரக்கமற்ற உலக வாழ்வை உதறித்தள்ளிய உத்தமர்கள். இன்னல் செறிந்த இல்லற வாழ்வின் இரும்புக் கரங்களினின்றும் தப்பிவந்தவர்கள், வறுமையின் கொடுமையால் வாழும் உரிமையை பறிகொடுத்தவர்கள், இத்தனை பேரையும் இந்தப் புனித ஆலயத்தில் காணலாம். தினம் நூற்றுக் கணக்கான பக்தகோடிகள் தங்கள் கவலைகளைச் சமர்ப்பித்து உள்ள அமைதியைத் தேடிக்கொள்ளும் இந்தப் புனித ஆலயத்தில் ஓர் அலங்கோல ஆபாசம் வேர்விட்டு, துளிர்த்து, கிளைகளைப் பரப்பி, தனது கரிய, வெறுக்கத்தக்க நிழலைப் பரப்பி வரும் காட்சியைக் காண வேண்டிய துர்ப்பாக்கியம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

விபசாரம் சமுதாய அமைப்பின் ஒரு வெடிப்பு. வறுமையின் கர்ப்பத்தில் உதித்த குழந்தை. கோடி சீமானின் மாடமாளிகையின் பக்கத்திலே, ஏழை மனிதனின் குடிசையும் இருக்கவேண்டுமென்ற முதலாளித்துவ நியதியின் சின்னம். இல்லாமை என்னும் பொல்லாமை அழித்துக் கட்டப்படும்வரை விபசாரம் சமுதாயத்துடன் அட்டைபோல ஒட்டிக்கொண்டேயிருக்கும். ஆனால் வியாபாரச் சந்தையிலே நடக்கும் விபசாரம் வேறு. வேலவன் சந்நிதியில் இந்த அபசாரம் நிகழ்வது வேறு. ஆண்டவனின் அருள்மழை பொழியும் புனித தலத்திலே ஆயிரக்கணக்கான உள்ளங்கள் திரிகரணசுத்தியுடன், புலனடக்கி வணக்கம் செலுத்தும் புண்ணிய மன்றத்திலே நடமாடும் நாசகாரிகளை, வலைவீசும் வனிதையரை, தேகாரோக்கியத்தைத் தினந்தினம் அரிக்கும் தீய கறையான்களை விட்டுவைப்பது சாதாரண தவறு மட்டுமல்ல பெரிய பாபமும்கூட.

வெள்ளைக் கலை; கழுத்திலே உருத்திராக்கம்; நெற்றியிலே திரிபுண்டரம். ஆனால், வேல் விழிகளிலே தாங்காத காமத் தீ. இதய பாண்டத்திலே நஞ்சு. இது ஒருவகைக் கும்பல். உள்ளூரில் விலை குறைந்து ஊதியம் குறுகி மூட்டை முடிச்சுகளுடன் குடியேறி "வியாபாரம்" நடாத்தும் கும்பல் இன்னொரு வகை. "கருவாக்காட்டு" சீமாட்டிகளைப் போல் உடுத்திக்கொண்டு அலட்சியப் பார்வையுடன் அன்னநடை போட்டுக் கொண்டு அகப்பட்டதைச் சுருட்ட கோவில் வீதிகளில் பவனிவரும் சிங்காரிகள் ஒருவகை. கற்பூரம் விற்பதாகப் பாசாங்கு செய்து கடவுள் பக்தர்களின் உள்ளங்களில் கன்னக்கோல் வைக்கும் காரிகையர் ஒரு புறம். இவர்கள் மட்டுமல்ல. காமாந்தகாரத்தின் கடைசிப்படி — கள்ளச் சாராய விற்பனை கூட மடங்களில் நடக்கிறது. விற்பனையாளர் வேறு யாருமல்ல. தழுக்கு மினுக்கினால் தட்டிப் பறிப்பதையே வாழ்வின் தலை சிறந்த இலட்சியமாகக் கொண்ட தளிர்மேனியர். இந்த மதிமுக வதனிகள் மருண்ட பார்வையுடன், கொஞ்சு மொழி பேசிக் கொடுக்கும் மதுவின் போதை சொர்க்கத்துக்கே கொண்டுபோய் விடுமாம். இத்தனை காட்சியும் மடங்களிலே. இந்தக் கனிகையர் கும்பல் நாளுக்கு நாள் பெருகி வருவதும், அதனால் ஏற்படும் கேடுகளும் பொது மக்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

விபசாரம் மன்னிக்க முடியாதது. அதுவும் கோவிலிலே, புண்ணியதலத்திலே நடப்பது மன்னிக்கவே முடியாது. பயிருக்கு நீரூற்றி வளர்ப்பதுபோல, எரியும் தீயினுக்கு நெய் ஊற்றிக் கொழுந்து விட்டெரியச் செய்வதுபோல காமாந்தகாரத்துக்கு ஜீவசக்தி கொடுக்க சாராயம் கோவில் மடங்களில் விற்பனைசெய்வது ஒருக்காலும் மன்னிக்க முடியாது.

கணவன் உயிருடன் பக்கத்திலிருக்க அவனைத் தன்கணக்கப் பிள்ளையாக்கிவிபசாரவியாபாரம் நடத்துகிறார்கள் சிலபத்தினிமார். இது சந்நிதி மடங்களில் ஒரு பொழுதுபோக்கு. கேவலம் —வயிற்றை நிரப்ப வேண்டுமென்ற எண்ணத்தினால், மானத்தைக் காற்றிலே பறக்கவிட்டு மனைவியின் கற்பைப் பணத்துக்குப் பலியிட்டு வாழும் இந்தச் சோதாக் கும்பல் - புல்லுருவிகள் தங்கள் புனித கைங்கரியத்தை அனுராதபுரிக் காடுகளில், குரங்குக் கூட்டங்களின் மத்தியிலே நடத்தினால் எவ்வளவு பொருத்தம்! மக்கள் சமுதாயத்திலே தங்களுக்குப் பிறக்காத பிள்ளைகளைக்கூட "என் மகனே! கண்ணே, கட்டிக் கரும்பே" என்று வாரியணைத்து முத்தமிடுகிறார்கள் வெட்கமில்லாமல்.

சில மடங்களில் சுவாமிகள் கஞ்சாக் குடித்து கடவுளைக் காணும் காட்சி சிரிப்புக்குரியதல்ல; சிந்தனைக்குரியது. வெட்கமானது மட்டுமல்ல; வேதனைக்குரியது. "கஞ்சாவே கடவுள்; கன்னியரே சொர்க்கம்" என்ற தாரகமந்திரத்தையே அங்குக் காணலாம். சில மடங்களில் சாமி வேடந்தரித்த ஆடவர்-மகளிர் நிகழ்த்தும் ஆடலும் பாடலும் அருவருப்புக்குரியன. இதைக் கண்டுதான்போலும் பாரதிதாசன்:

"குடிக்கவும் நீரற்றிருக்கும் —ஏழைக்
கூட்டத்தை எண்ணுமல்
கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே —தம்பி!
வசங்கெட்டுப் போனது
நமது நன்னாடு"

என்று பாடினார்.

கோவில்களில் ஆபாசத்திற்கு உயிர்ப்பிச்சை அளிக்கும் இந்த நிலைமையை வேருடன் சாய்க்க மதவாதிகள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல்வாதிகள் அனைவரும் முயற்சிக்கவேண்டும்.

மனிதனின் இச்சைகளே

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்மொழியைச் சற்று கவனிப்பார்களாக!

காலை, மத்தியானம் ஆகிய இருவேளைகளில் நீ உண்பவற்றைச் சேர்த்து ஒரேவேளை உண்பாயெனில் நீ நோன்பிருப்பதற்கும் விடுவதற்குமிடையில் ஒரு வித்தியாசமுமில்லையே! உன் நோன்பினால் கோரப்படுவது நீ இறைவனையஞ்சியொழுகுவான் வேண்டி உன் இச்சையை அடக்குலதும், உன் சக்தியை நிதானப்படுத்துவதுமேயாம். ஆகவே நீ காலையில் சாப்பிட வேண்டியதையும் சேர்த்து மாலையில் உண்பாயெனில் உன் நோன்பில் பயனில்லை! அம்மட்டல்ல உன் வயிறு உனக்கே ஒரு பாரமாய்விடும்! உன் ஜீரண சக்தியும் கெட்டுவிடும்!"

நோன்பின் பொருளுணர் நோன்பிருந்து நற்பேறு பெறுவோமாக!

இலாப வேட்டை கொண்ட...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுதான்" என்று அந்த இளைஞன் அடிக்கடி கூறுவான். உண்மையானஉழைப்பின் சிகரம் அவன். மாலையில் வீட்டிற்குவந்து, வீட்டிற்கு வந்திருக்கும் மாணவர்களுடனும் பழகுவான், அறிவு புகட்டுவான், அன்பு, அறம் போதிப்பான். நன்கு கவாசிக்கிறான், நல்லவர்களை நாடி அறிவு பெருக்குகிறான். உழைத்தவைகளை வேண்டிய வற்றிக்காகச் செலவு செய்கிறான். அவனைக் கண்டவர்கள் புன்சிரிப்புடன் வணங்குகிறார்கள். மாணவர்கள் மதிக்கிறார்கள். பெரியவர்களின் மனதிலும் அவன் வாழ்கிறான். பல இதயங்களிலே அவன் ஒளிர்கிறான்.

அவன் இரும்புக் கதவுகளை நாடவில்லை. இருபத்தி மூன்று அறைகொண்ட 'பங்களா'வில் வாழவில்லை, விரும்பவில்லை. ஆடம்பரமாகவாழும் எண்ணமே அவனுக்கு இல்லை. அவசியமற்ற வைகளைச் செய்ய முயன்றதில்லை! செல்வத்தில் புரண்டு அறிவில் வறியவனாகவில்லை!

அவனும் அமைதியாகவாழ்கிறான். பிறர் பின்பற்றக் கூடியதொரு புது வழியை வகுத்து வாழ்கிறான். உழைப்பால் உயர்ந்த அவன் உண்மையாக வாழ்கிறான். ஆனால் குறுக்கு வழிகளில் அளவுக்கு மீறிய பொருளைத் தேடிக் கொண்ட அவர்களாற்கூட அவனைப்போன்று அமைதியாக, இன்பமாக, மகிழ்ச்சியாக, கவலையற்றுவாழமுடியவில்லை. உண்மையான உழைப்பு அவனுடைய வாழ்க்கையை வளமாக்கியிருக்கிறது. பிறரைவாட்டி, வதைத்து சரிவான வழிகளில் தேடிய பொருள் செல்வந்தனை, அமைதியற்ற, வாழும் வகையற்ற, நிம்மதியற்ற வறியவனாக்கிவிட்டது! இதுதான் இன்று நாம் காணும் நிலை!! பலர் இல்லாது இருக்கிறார்கள். சிலரிடம் வேண்டிய அளவு இருக்கிறது. ஆனாலும் இருப்பதாலும் பயனில்லை!!

உலகிலே நாம் அமைதியாக வாழவேண்டுமானால், நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பொருள் வேண்டும். இந்த உண்மையை வள்ளுவர் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என அழகாகக் கூறுகிறார். "சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டுவந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்" என்று தீமையற்ற வழிகளில் தேடும் பொருளினால் உண்டாகும் நன்மைகளை மேலும் வள்ளுவர் கூறுகிறார்!

இன்று நமது நாட்டிலே, அடிக்கடி கிழம்பும் பூசல்களுக்கும், ஒற்றுமையின்மைக்கும், பிறர்மேல் நம்பிக்கையின்மைக்கும், கலகத்திற்கும் காரணமாக, அடிப்படைக் காரணமாக இருப்பது பொருளின்மேல் மக்கள் கொண்டிருக்கும் ஆசைதான் என்றே கூறவேண்டும். இந்த ஆசை வாழ்க்கையின் வளத்திற்கு அவசியமானதுதான். ஆனால் இந்த ஆசையைத் தீமையான வழிகளில் தணிக்க முயலுவதுதான் மிகவும் பிழையான காரியம்! பலர் இதே முயற்சியில் ஈடுபட்டு, பொருள் சேர்த்து, அவர்களுக்கோ, மற்றவர்க்கோ எதுவித பயனுமில்லாமல் அந்தப் பொருள் அழிந்து போவதையும் நாம் கண்டிருக்கிறோம்.

பாடுபட்டு உழைப்பவனுக்கு வேண்டிய ஊதியத்தைக் கொடுக்காமல், அவன் உழைப்பிலே, அவன் சிந்தும் வியர்வையிலே பொருள் தேடும் பலர் இப்போது மலிந்திருக்கிறார்கள். உற்பத்தி செய்பவன் ஒருபுறம் இருக்க, தேவையாளன் ஒருபுறம் இருக்க, இவர்களிருவரிடையேயும் புகுந்து பொருள்களைப் பெற்று, அதிக விலைக்குவிற்று அறமற்றுப் பொருள்தேடும் பலர் இருக்கிறார்கள். ஆடாமல் அசையாமல் இருக்க ஆயிரக்கணக்கில் பணம் ஏழைகளின் கண்ணீரிலே, ஏழைகளின்உழைப்பிலே, அவர்களின் வியர்வையிலே, ஏழைகளின் வயிற்றிலே அடித்துக்கொண்டு வந்து தங்கள் பணப்பெட்டியைநிரப்பவேண்டுமென்று விரும்பிச் செயலாற்றுகின்றவர்களும் அதிகம் இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட "மனிதர்கள்" தொலைந்தாற்றான் நமது நாட்டின் பொருளாதாரம் உருப்பெற முடியும், நமது நாடு வளர்ச்சியடைய முடியும். உழைப்பவனுக்கு, அவனுக்குப் போதிய ஊதியம் கொடுக்கப்பட்டால் அவன் வறுமையில் வாட வேண்டிய அவசியமில்லை. சுரண்டுபவர்கள் ஒழிந்தால், உழைப்பவர்கள் எதுவித சிரமமுமின்றித் தங்கள் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறமுடியும்! அமைதியாக வாழவும் முடியும்!!

சோம்பலைக் கொன்று, குறுக்கு வழிகளில் பணம் சேர்க்கும் எண்ணத்தை ஒழித்து, உண்மையான உழைப்பினால் பொருள்தேட முயலுபவர்கள் நிச்சயம் வாழ்க்கையிலே வெற்றியடைவார்கள், மகிழ்ச்சியுமடைவார்கள். ஒவ்வொருவரும் இதே நோக்கத்தோடு உழைக்க முயன்றால் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற நிலைமைமாறி "பொருளில்லாதார் இவ்வுலகில் இல்லை" என்ற நிலைமை நிச்சயம் நாட்டில் ஏற்படும்! நாமும் அமைதியாக வாழலாம்.

நமது பொருளாதாரம் சீர்பெற்றால்தான் நமது நாட்டின் பொருளாதாரம் சீரடைய முடியும்! நாட்டின் பொருளாதாரம் சீர்பெற்றால்தான் நாம் சுயமரியாதையுடனும், அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும், சுதந்திரத்துடனும் வாழமுடியும்.

கல்வியே கருந்தனம்

சத்தியமே ஜெயம்

A. S. D. அமிர்தானந்த லேகியம்

பிரதி தினமும் அனுபவத்தில் — முதன்மையானது — பத்தியமில்லாதது — ருசிகரமானது.

43 — வருஷ வைத்திய அனுபவத்தில் ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது.



எமது நண்பர்கள் கவனிப்பு:

அமிர்தானந்த லேகியத்தால் (1000) வியாதிகள் சுகப்படுமென தற்புகழ் கூறவும், வர்ணிக்கவும் முன்வரவில்லை—எங்கள் வைத்திய முறைக்கு விகடம் அவசியமே இல்லை. வைத்திய அனுபவமுறை அனுபவத்தில் தெரிந்துகொள்ளுங்கள்.

விபரம்:

சரீர உஷ்ணங்களுக்கும், ஜீரண சக்திக்கும், மூல வியாதியஸ்தர்களுக்கும், கணைசூட்டிற்கும், சொறி, சிரங்கு, ஊரல், தடிப்பு இவைகளுக்கும், இரத்த சுத்திக்கும் அனுபவமானது. பிரதி தினமும் மல ஜலங்களைக் கிரமப்படி கழிப்பித்து சரீர சுகம் கொடுப்பதில்நிகரற்றது.

புட்டி ஒன்றிற்கு விலை ரூ. 2-50.

முன்பணமனுப்பவும் தபால் செலவு இலவம்.

A. S. D. மருந்துகள் கிடைக்குமிடம்:

மலையாள மெடிக்கல் ஹால்,

179, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விமர்சனம்

பீ. ஏ. படித்துவிட்டு வேலை இல்லாமல் திண்டாடும் ஒரு வாலிபன். பீ. ஏ. படித்துவிட்டு வேலை கிடைக்காமல் தவிக்கும் ஒரு இளநங்கை. ஒரு வீட்டில் பாட டியூஷனும், சங்கீத டியூஷனும் கொடுக்கப் போன இடத்தில் இருவரும் சந்திக்கிறார்கள். ஆனால் பாவம் டியூஷனுக்கு இவர்களை அமர்த்தியிருந்த வீட்டுச் சொந்தக்காரருக்கு உத்தியோகம் வேற்றூருக்கு மாற்றப்பட்டு விடுகிறது. அதனால் இருவரும் வேலையை இழக்கிறார்கள். இந்த நிலையில் பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியாகிறது "ஒரு பாடசாலைக்கு பீ. ஏ படித்த ஆசிரியரும் ஆசிரியையும் தேவை. ஆனால் அவர்கள் தம்பதிகளாய் இருக்கவேண்டும்" என்று அதில் கண்டிருக்கிறது. இந்த நிலைமையில் மேற்படி இருவரும் என்ன செய்வார்கள்? கலியாணம் பண்ணிக் கொண்டு உத்தியோகத்தைக் கையேற்பார்கள் என்று தானே எண்ணுகிறீர்கள்? அதுதான் இல்லை. அவர்கள் கலியாணம் பண்ணிக் கொள்ளவில்லை. ஆயினும் உத்தியோகத்தைக் கையேற்கிறார்கள். எப்படி? அதுதான் கதை. குலுங்கக் குலுங்க சிரிப்பூட்டும் கதை. வேடிக்கையான, விந்தையான, தமாஷான கதை. இருவரும் கலியாணம் பண்ணிய தம்பதிகளாக நடிப்பதென்று திட்டம் போட்டுக்கொண்டு உத்தியோகத்தில் அமர்கிறார்கள். பிறகு நடப்பதை நாம் இங்கு விவரித்துக் கொண்டே போனால் நீங்கள் படத்தை நேரில் பார்த்து ரசிக்கும் கட்டங்களைப் பாழாக்கிவிடுவோம். எனவே கதைவேண்டாம் படத்தின் தரத்தைப் பார்ப்போம்.

விஜயா புரொடக்ஷன் வெளியீடாக வந்திருக்கும் "மிஸ்ஸியம்மா" என்ற இந்த உயர்தர ஹாஸ்யப்படத்தை பிரபல படாதிபதிகளான நாகிரெட்டியும் சக்ரபாணியும் சேர்ந்து தயாரித்திருக்கிறார்கள். ஜெமினி கணேஷனும் சாவித்திரியும் கதாநாயகனும் கதாநாயகியுமாகத் தோன்றி இப்படத்தில் சக்கைப்போடு போட்டிருக்கிறார்கள். போதாக்குறைக்கு விகடரத்னங்களான சாரங்கபாணியும், தங்கவேலும் ஏழுமலையும் கருணாநிதியும் சேர்ந்து கொண்டால் வயிறு புண்ணாவதற்கு கேட்கவா வேண்டும்? நம்பியார் அசட்டு வில்லனாக நடிக்கிறார். ஜமுனாவும், ரங்காராவும் பாராட்டுமளவிற்குத் திறமையைக் காட்டியிருக்கிறார்கள்.

ஜோரான இசையமைப்பு, இனிமையும் கருத்தும் செறிவும் வாய்ந்த கீதங்கள். "நந்தகுமாரும் பிருந்தாவனமும் யாவர்க்கும் சொந்த மன்றே" என்ற பாடலில் படம் முடிந்து வெளியே வரும்போதும் காதில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது. நவீன கதையாக அமைந்த போதிலும் பிரமாத செட்டிங்ஸ் ஆபாடபூரிதர்கள் வாஹினியார்: படப்பிடிப்பு கண்ணுக்கு இதமாக இருக்கிறது.

மொத்தத்தில் "மிஸ்ஸியம்மா" ஒரு நல்ல முழுநீள ஹாஸ்யப்படம். மூன்று மணித்தியாலம் கவலையை மறந்து களித்திருக்க விரும்புபவர்கள் அவசியம் பார்க்க வேண்டியபடம் என்பதே நமது தீர்ப்பாகும்.

—ஸ்.

'கண்ணிலே மையல் உளக்களத்திலே காதல்'லுடன்காட்சிதரும் ஆந்திரத்தின் அழகுத் தேவதை சாவித்திரி ஆணழகன் ஜெமினி கணேசனுக்கு 'காதல் பொறி' வைக்கத் திட்டமிடுகிறாளா? ஒரே புதிர்தான். விடையைக் காண வேண்டுமானால் மினிமாஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தார் வெளியிடும் "மிஸியம்மா"வில் தெரிந்துகொள்ளுங்கள்.

தமிழரசுக் கட்சி மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலிருந்து சைக்கிள் பவனியும் மோட்டார் வண்டிகளும் குச்சவெளிக்குப் புறப்படும். பிற்பகல் 3 மணிக்கு மகாநாட்டின் தொடர்ச்சி குச்சவெளி அரசினர் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை மாலை 6 மணிக்கு குச்சவெளியில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல பிரபல பேச்சாளர்கள் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள். இரவு 8 மணிக்கு மாலுமி நாடக சபையாரின் "வாழவிடு" என்ற நாடகம் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஏப்ரல் 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அனைவரும் குச்சவெளியிலிருந்து திருகோணமலை நோக்கிப் புறப்படுவார்கள். காலை 8 மணிக்கு நிலாவெளியிலும் 9 மணிக்கு சாம்பல் தீவிலும் கட்சித் தலைவர்களுக்கு வரவேற்புகள் அளிக்கப்படும்.

பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலை மடத்தடிச் சந்தியிலிருந்து தலைவர் ஊர்வலம் ஆரம்பித்து பிற்பகல் 4-30 மணிக்கு பெரிய மைதானத்தை அடையும். கட்சித் தலைமைப் பொறுப்பைக் கையேற்கும் புதிய தலைவர் திரு வி. வன்னியசிங்கம் இந்த ஊர்வலத்தில் விமரிசையாக அழைத்துச் செல்லப்படுவார். அங்கு வரவேற்புச் சபைத் தலைவர் வி. சிவானந்தன் (நகர சபை அங்கத்தவர்) திரு என். ஆர். இராஜவரோதயம் எம். பி. திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், ஜனப் பி. பதுறுதீன், திரு எஸ். செபமாலை (நகர சபை அங்கத்தவர்) மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள் இத்துடன் மூன்றாவது தேசிய மகாநாடு முடிவடையும்.

ஏப்ரல் 18ந் திகதி மாலை 6 மணிக்கு நிலாவெளி பிள்ளையார் கோவிலடியிலும் 19ந் திகதி மாலை 6 மணிக்கு சாம்பல் தீவு வத்தாளையடி பிள்ளையார் கோவிலடியிலும் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இக்கூட்டங்களில் தலை சிறந்த பேச்சாளர்கள் சிலர் பேசுவார்கள்.

கட்சி அபிவிருத்தி

திருகோணமலையில் தமிழரசுக் கட்சி பலவகையில் வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்று வருகிறது. இதுகாலவரை யு. என். பி. அனுதாபிகளாக விளங்கிய பலர் தமிழரசுக் கட்சியின் போராட்டத்தில் நேர்மையையும் நியாயத்தையும் கண்டு அதன் மீது அனுதாபம் காட்டி வருகிறார்கள். யு. என். பி. கட்சியில் தமிழும் தமிழினமும் ஒதுக்கப்பட்டு வரும் நிகழ்ச்சிகள் பலருடைய கண்களைத் திறந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த மகாநாட்டின் பின் பல மாஜி யு. என். பி. அனுதாபிகளின் உள மொத்த ஆதரவு தமிழரசுக் கட்சிக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி விதிகள்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக வினியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

2 விடைகள் தெளிவாக மையினால் எழுதப்படவேண்டும். எழுத்துக்கள் அழித்தெழுதப்படலாகாது. மாற்றங்கள் செய்யப்படலாகாது. எல்லாக் கட்டங்களும் பூரணமாக நிரப்பப்பட்டிருக்கவேண்டும்.

3 ஒவ்வொரு கூப்பனிலும் போட்டியில் கலந்து கொள்பவரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்படவேண்டும்.

4 (அ) ஒரே கவரினுள் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படுவதானால் அவை அனைத்தும் ஒரு போட்டியையுடைய கூப்பன்களாகவே இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படும்போது எல்லாக் கூப்பன்களுக்குமுரிய கட்டணமும் ஒன்றுக அனுப்பப்படவேண்டும். அத்தோடு கூப்பன்கள் அனுப்பப்படும் எல்லாக் கவர்களின் பின்புறத்திலும் போட்டியில் கலந்துகொள்ளும் நபருடைய பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(ஆ) இப்போட்டிக்குரிய பிரவேசக் கட்டணம் விடை ஒன்றிற்கு சதம் 50. மூன்று விடைகளுக்கு ரூபா 1-00.

5 எல்லாக் கட்டணமும் இலங்கைப் போஸ்டல் ஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். போஸ்டல் ஆடர்கள் "குரோஸ்" செய்யப்படுதல் அவசியம். சுதந்திரன் போட்டி வவுச்சர் சுதந்திரன் காரியாலயத்தில் கிடைக்கும். மணி ஆடர்கள், தபால் பில்லைகள், செக்குகள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6 தபால் மூலம் அனுப்பப்படும் எல்லா விடைகளும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 194 ஏ, தட்டாதெரு கொழும்பு—12 என்ற விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும். விடைகளை சுதந்திரன் காரியாலயத்தில் நேரில் கொண்டுவந்து சேர்ப்பிக்க விரும்புபவர்கள் அப்படிச் செய்யலாம். உரிய பிரவேசக் கட்டணத்தை காரியாலயத்தில் செலுத்தி அதற்குரிய போட்டி வவுச்சரைப் பெற்று, அதை விடைக் கூப்பன்களுடன் இணைத்து காரியாலயத்தில் இதற்கென வைத்திருக்கும் கூப்பன் பெட்டியில் போடவேண்டும். காரியாலயத்தில் வேலை செய்யும் எந்த சிப்பந்திகளிடமும் விடைகளைக் கையளிக்கலாகாது. கைபிழையாகத் தவறிவிடும் அல்லது காணாமற் போய்விடும் விடைகளுக்கு போட்டிக் காரியாலயத்தார் பொறுப்பேற்க முடியாது. முடிவு தேதிக்கு முன விடைகள் கிடைக்கவேண்டும். விடைகளைத் தபாலில் சேர்த்த அத்தாட்சி, தபால் உரிய காலத்தில் அதாவது முடிவு தேதிக்குமுன் வினியோகம் செய்யப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7 போட்டி ஆசிரியரின் விடைக்கு சரியான விடை அல்லது குறைந்தபட்ச பிழைகளுடன் விடை அனுப்பியவருக்கு முதற் பரிசும், முதற் பரிசு பெறும் விடைக்கு அடுத்தபடியாயுள்ள விடை அனுப்பியவருக்கு இரண்டாவது பரிசும் வழங்கப்படும். பரிசுக்குரியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோராயிருப்பின் அவர்களிடையே பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒருவர் ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெற முடியாது.

(அ) உரிய கட்டணங்கள் அவ்வளவும் செலுத்தியார் ஒருவர் அதிகப்படியான விடைகள் அனுப்பிருந்தாலும் அவருக்கு ரூ 100 விசேஷப் பரிசாக வழங்கப்படும். ஒரே பெயரில் ஒரு கவரினுள் ஒரே சமயத்தில் அதிகப்படியான விடைகளை உரிய கட்டணத்துடன் அனுப்புவரே இப்பரிசுக்கு உரியவராவர். வெவ்வேறு கவருக்குள் வெவ்வேறு காலங்களில் அனுப்பப்படும் விடைகள் இப்பரிசுக்கு உரிமையுடையவையாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே தொகையான விடைகள் அனுப்பினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும் 7ம் விதியில் காட்டப்பட்ட குறிப்புக்கு மாறுக முதல் அல்லது இரண்டாவது பரிசு பெறும் நபரும் இந்த விசேஷ பரிசைப்பெற உரிமையுடையவராவர்.

8 இங்கு தரப்பட்டிருக்கும் போட்டி விதிகளுக்கு உட்படாத எந்த ஒரு கூப்பனும் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியற்றதாகவே கணிக்கப்படும். இத்தகைய தகுதியற்ற கூப்பன்களோடு அனுப்பப்படும் கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

9 இப்போட்டி சம்பந்தமாக ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்கம்பனியாரின் தீர்ப்பே முடிவானதும் சட்டபூர்வமாகக் கருதப்படுவதுமாகும்.

10 இப்போட்டி விதிகள் இப்போட்டியை நடத்தும் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியாருக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்குமிடையே தனித்தனி ஒப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த ஒப்பந்தம் கொழும்பில் செய்யப்பட்டதாகவும் கொழும்பிலேயேமுற்றுக நிறைவேற்றப்படுவதாகவும் கருதப்படவேண்டும்.

11 சம்பந்தப்பட்ட போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூ. 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்கவேண்டும். அத்தோடு போஸ்டல் ஆடர், அல்லது போட்டி வவுச்சர் இலக்கத்தையும், விடைகளைத் தபாலில் அல்லது நேரில் சேர்த்த தேதியையும் எழுதி அனுப்ப வேண்டும். தகுதியும் உரிமையும் நிரூபிக்கப்படாதபட்சத்தில் பிரஸ்தாப பிணைப் பணத்தை அவர்கள் இழந்து விடுவார்கள்.

12 இப்போட்டி சம்பந்தமாக வேறு எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் நேர்முகமான பேட்டியும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியில் வேலை பார்க்கும் சிப்பந்திகளும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

போட்டிக் கூப்பன்கள் அனுமதிக்கப்படும் கவரின்மேல் சம்பந்தப்பட்டபோட்டி இலக்கம்தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10, பி.ப. 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்

ருக்மணிதேவி, எடிஜயமான நடிக்கும்

மதபேதயா (சிங்களப் படம்)

செல்லமஹால் ப்ளாஸா

காலை 10, பி.ப. 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்

வியாழன் முதல்

ஸ்ரீராம், குசலகுமாரி

நடித்த

போன மச்சான் திரும்பி வந்தான்

கவிகம்பனும் மில்டனும் வாழ..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

அதனால்தான் உலக இலக்கியகர்த்தாக்களின் ஒப்பரிய மாணிக்கங்களான வால்டயரும்—வள்ளுவனும், ஷேக்ஸ்பியரும்—ஷெல்லியும், டால்ஸ்டேயும்—தாந்தேயும், கம்பனும்—காளிதாசனும் அதே போல ரொமெயின் ரோனல்டும்—பெர்னட் ஷாவும், அன்டோல் பிரான்ஸும்—பார்ட்டின் அன்டர்ஸனும், ஹென்ரி பர்பூஸும்—தியோட்ரோ ட்ரெயிஸரும் தம் ஒவ்வொரு மூச்சையும் சமாதான அபிலாஷைக்காக அர்ப்பணித்தார்கள். மகத்தான மானிதக் கருத்துக்கள் மூலம் சாந்தியின் அத்தியாவசியத்தை மனிதகுலத்திற்கு எடுத்துரைத்தார்கள்.

அதேபோலத்தான் உலகம் உச்சிமீது வைத்துக் கொண்டாடும் உன்னத இலக்கியங்கள்—இதிகாசங்கள் எல்லாம் மனிதனின் சமாதானத் துடிப்புக்கே கோபுர மகுடம் அமைத்தன. காதலுக்கு இலக்கியம் சமைத்த ஷேக்ஸ்பியர் ரோமியோ ஜூலியட்டில் இரு கோஷ்டிகளின் சண்டையால் சாவின் முகட்டில் சாய்ந்த காதலர்களே நெஞ்சு நெக்குருக சித்தரிக்கிறார். டால்ஸ்டாயின் 'யுத்தமும் சமாதானமும்' ஒரு சமாதான காவியம். அதே போலத்தான் பாரதக்கதை, இராமர் கதை, 'ஹோமர்' கதை. இவை இரு கோஷ்டிகளின் சண்டைகள் சாவின் வாடைபரப்பும் நிஷ்டூரத்தை நெஞ்சு வெடிக்க சித்தரிக்கின்றன. போர்ப்பரணி கொட்டும் கலிங்கத்துப் பரணியில் போர் தடுக்கும் புலவர் பெருமக்களைப் பார்க்கிறோம். போர் மூள்வதைத் தடுக்க மூவேந்தர்களிடம் தூது செல்கிறார் தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டி. கவிதா விலாசமான கம்பனுட்டாழ்வான் தன் இலட்சிய நாட்டை: கற்பனை பண்ணும் பாணியிலே சமாதான நிர்மாணத்திற்கு கோபுரம் சமைக்கிறான். இலக்கியமும் கலையும் மக்கள் நலனுக்கு ஊசலாட்டமின்றி சேவை செய்ய வேண்டும் என்று இடிமுழங்கிய புதுமை இலக்கியத்தின் கர்த்தா மாக்ஸிம் கார்க்கி அது உலக ஒற்றுமைக்கும், சர்வதேசிய சமாதானத்திற்கு முதலில் சேவை செய்ய வேண்டும் என்று கூறினர். தாகூரும்—பாரதியும் சமாதான கீதம் முழங்கினர்கள்.

இன்று சமாதானத்திற்கான போராட்டமே கலாச்சாரத்திற்கான போராட்டமாகியுள்ளது. அதுவே தேசிய இனங்களின்—நாடுகளின் சுயாதீனத்திற்கான, வளர்ச்சிக்கான போராட்டமாகியுள்ளது. மொத்தத்தில் மனிதவர்க்கத்தின் வளர்ச்சி—வாழ்வுக்கான போராட்டமெல்லாம் சமாதானத்திற்கான போராட்டத்துடன் ஐக்கியமாகி—சங்கமமாகி நிற்கிறது. ஏனென்றால் சமாதானப் போராட்டம் மனிதவர்க்கத்தின் விரோதிகளை எதிர்த்து பெருவாரியான—கோடானுகோடி உலக மக்களை ஒரு அணியில் திரட்டுகிறதல்லவா?

எனவேதான் இன்று கலை—கலாச்சாரம் வளர வேண்டும்—பாதுகாக்கப்படவேண்டுமானால், கம்பனும்—கவி மில்டனும் வாழ வேண்டுமானால் வையகத்தில் சாந்தி நிலவ வேண்டும். இதற்கான போராட்டத்தில், வாழ்வுக்காக பிச்சை ஏந்தியல்ல, ஒன்று திரண்டு உலகரீதியில் நடக்கும் நவயுகப் போரில் இலகியகர்த்தாக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் சகலரும் ஓரணிவகுக்க வேண்டும். இதற்கு எழுத்தாளர்கள் ஸ்தாபன ரீதியாக திரள்வது அத்தியாவசியம்.

மகத்தான 2வது வாரம்!

முருகன் டாக்கீஸ் [கொழும்பு]

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணி, சனி, ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கும் ஞாயிறு காலை 10 மணிக்கும் காட்சிகள்

கழுத்தளவு கஷ்டம் வந்தாலும் கடமையில் தவறக்கூடாது என்பதே ரகுவின் தாரக மந்திரம். ரகு ஜமீந்தார் குலசேகரனின் ஒரே மகன்—கடமையின் முன்னில் தந்தையின் வாக்கைத் தட்டுகிறான் — மனைவியுடன் வீட்டில் நின்று வெளியேற்றப்படுகிறான். ஜமீன்தாரின் மருமகன் மூர்த்தியின் சந்தர்ப்பச் சதுரங்கத்தில் குலசேகரனின் குடும்பம் சொக்கட்டான்களாய் மாறுகிறது. உண்மைக்கு அழிவில்லையல்லவா? —மூர்த்தியின் கதி, குலசேகரனின் குடும்ப விளக்கு எரியுமா என்பதையெல்லாம் திரையில் பாருங்கள்

பல வருட திரை மறைவிற்குப் பிறகு நகைச்சுவை ஜோடிகள் கிருஷ்ணன்—மதுரம் திரை விருந்தளிக்கும் முதல் படம். பார்க்கத் தவறுதீர்கள்.

எம். கே. ராதா, கிருஷ்ணன், மதுரம், பாலையா, பண்டரிபாய், கே. வரலக்ஷ்மி முதலியோர் நடித்த

ஜெய்சக்தியின்

"நல்லகாலம்"

சிலோன் எண்டர்டெயின்மென்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் புத்தாண்டுப் பரிசு!

சென்ட்ரல் கொழும்பு

ராணி யாழ்ப்பாணம்

போகம்பரை கண்டி

ஜோதி திரிகோணமலை

குமாஸ்தா வர்க்கத்தின் அறுவடை நாள் மாதத்தின் முதல் திகதி. முப்பது நாட்கள் கண்ட கனவுகளில் ஒரு சிலதெல்லாம் நனவாகும் நாள் முதல் திகதி.

குமாஸ்தாக்களுக்குக் கதிமோட்சம் கிடையவே கிடையாது. சுரண்டப்படும் வர்க்கமது. இதே வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் சிவஞானம் — அவன் ஒரு வங்கி குமாஸ்தா. மூன்று குழந்தைகள்—ஒரு மனைவி. லாபம் குறைந்ததால் வங்கி மூடப்பட்டுவிட்டது. வேலை தேடும் வேலையில்இறங்கிய சிவஞானத்திற்கு கிடைத்த வரவேற்புகள் "நோ வேக்கன்ஸி" போர்டுகள்தான். வாழ்வு வெறுத்தவனுக்கு சாந்தி - தற்கொலை.

பேனை தள்ளிப் பிழைக்கும் ஜீவன்களுக்கும் இந்த உலகில் நிரந்தர சுகவாழ்வு வேண்டும். இல்லையேல் போராடி மாளவேண்டும்.

கணவன் பிரிந்த குடும்பத்தின் கதி, குழந்தைகளின் கதி இவைகளை வெள்ளித் திரையில் காணுங்கள்.



பத்மினி பிக்சர்ஸாரின்

முதல் திகதி

சிவாஜிகணேசன், அஞ்சலிதேவி, கிருஷ்ணன், மதுரம், பந்துலு, பாலசுப்ரமணியம், சுசீலா முதலியோர் நடித்தது.

திரைக்கதை வசனம்: ப. நீலகண்டன்

டைரக்ஷன்: ப. நீலகண்டன்

இலங்கை முழுவதும் வெளியிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் சுற்றுவோம்!

துரகிழக்கு நாடுகள்:

ஜப்பான்

நாளுக்கொரு பண்டிகை கொண்டாடி மகிழும் அற்புத நாடு!

(எம். எம். மக்கீன்)

ஒரு காலத்தில் ஜப்பான் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் — பிற தேசங்களோடு சிநேக மனப்பான்மை இல்லாமல்—ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தது என்னவோ உண்மை. ஆனல் இன்று உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் ஜப்பான் போய் குழுமி அங்கு ஐந்து மாதம் ஆறு மாதம் என்று இருப்பதொன்றே அதன் பிரசித்தத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஜப்பானில் எது எப்படி இருந்தாலும் போக்குவரத்து வசதி ரொம்பவும் ஒழுங்கு. முழுக்க முழுக்க சுகப் பிரயாணம்; நல்ல வசதி; குறித்த நேரத்தில் நினைத்த இடம் அடைதல்—இத்தனையும் ஒரு பிரயாணி அங்கு இலகுவாக அடைய முடியும்.

இன்று ஜப்பான் மேலைய நாகரிகத்தில் போய்க்கொண்டிருந்தாலும்கூட அதன் பழம் பெருமை, பழங்குடிகளின் வாழ்க்கை, — 'பழைய உலகம்' — எதுவும் மறைந்துவிடவில்லை. மக்கள் எவ்வளவு வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தாலும் தங்கள் பழம்பெருமைகளை விட்டு விடத் தயாராக இல்லை. அதனல்தான் இன்று ஜப்பான் நாளுக்கொரு பண்டிகையும், விழாக்களுமாக, பழைய சம்பிரதாயங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டாடுகிறது. பண்டைக் காலத்திலேயே இருந்த உயர்தரமான சித்திர விசித்திரங்களும், ஸில்க் துணி உற்பத்தியும் இன்றும் இருக்கிறது. ஆனல் பிரபலமாக, விஸ்தீரமான முறையிலே!

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஜப்பானின் வடபகுதியில் பனிசறுக்கு விளையாட்டு வெகு மும்முரமாக இருக்கும். மழைகாலம் வந்து ஓய்ந்த சமயத்தில் ஆற்றுப் படுக்கையிலே நீச்சலும், படகு வலிப்பும் இன்னும் பல நானவித விளையாட்டுகளும் பிரமாதப்படும்.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோ. ஜப்பான் சென்று வந்தவர்கள் டோக்கியோவையே பிரமாதமாகப் பேசுவர். ஏனென்றல் அங்குதான் பல ருசிகரமான தகவல்களையும், ஜப்பானின் அந்தஸ்தையும், பெருமையையும் அறிய முடிகிறதாம்!

டோக்கியோவிற்கு ஈடோ என்று ஒரு பெயர் முன்னர் வழங்கிவந்தது. டோக்கியோ என்பதன் அர்த்தம் 'கிழக்கின் தலைநகர்' என்பதாம்.

இம்பீரியல் மாளிகை ('லோகூன் கோட்டை' முன்னர் வழங்கிய பெயர்) என்றேரு இடம். 250 ஏக்கர் சுற்றளவு கொண்டது. லோகூன் என்ற அரச வம்சத்தினர் ஆண்ட சமயத்தில் கட்டப்பட்டதாம். வருஷத்தில் இரண்டே இரண்டு முறை மட்டும் பொதுஜனங்கள் இதைப் பார்வையிட முடியும். ஒன்று புது வருட தினத்தன்று. மற்றது சக்கரவர்த்தி பிறந்த நாள் ஏப்ரல் 29ந் திகதியன்று. மற்ற சமயங்களில் அனுமதில்லை.

கடைசியாக—ஜப்பானில் உள்ள ஒரு புதுமை: 'எத் தேசத்திலுமில்லாத முறையில் இருக்கும் அளவுக்கு மிஞ் சிய பண்டிகைகள்!'

(அடுத்த வாரம் தூரகிழக்கு நாடுகளில் பிரபலமான மலாயாவைச் சேர்ந்த சிங்கப்பூர்பற்றி ஒரு சித்திரம்.)

மக்கள் கவிஞன் டென்னிஸன்

விக்டோரியா மகாராணி காலத்தில் வாழ்ந்த கவிஞர்களில் பிரசித்தி பெற்றவராகவும் இணையற்றவராகவும் மக்களின் மதிப்பை பெற்றவராகவும் வாழ்ந்தவர் டென்னிஸன். இவர் தேச பக்தியும், அன்பும் நம்பிக்கையும், அறிவும், உள்ளவராக வாழ்ந்தார். இதை நாம் அவரது 'ஓர் அரசனைப் பற்றிய வர்ணனை' என்ற நூலில் அறியலாம். இந்நூலில் தனது நாட்டை மக்களை அழகாக வர்ணித்துக் காட்டுகின்றார்.

இவர் பாடிய அநேக கவிகள் நாட்டுப் பற்றுடையதாகவே இருக்கின்றன. "நாட்டின் உணர்வை தட்டி எழுப்புவதே தேச தொண்டாகும்" என்ற பாரதியாரின் கொள்கையின்படி இவரும் தன் நாட்டுப் பற்றை யூட்டும் பல கவிதைகளை இயற்றியிருக்கிறார்.

இத்தகைய பெரும் கவிஞரான டென்னிஸன் இங்கிலாந்திலுள்ள சாமர்ஸ்பரி என்னும் நகரில் 1809-ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் ஓர் படாதிபதி. இவருக்கு நாலாவது மகனாக டென்னிஸன் பிறந்தார். இவரது தந்தையின் மடத்தை "கலைக்கோயில்" என்று அவரது கவிதையில் கூறியிருக்கிறார்.

டென்னிஸன் முதலில் வீட்டில் பாடம் பயின்றார். பின்னர் அவ்வூர் இலக்கண பள்ளியில் சேர்ந்தார். இவருடைய நுண்ணறிவு பெருகவே 1828-ம் ஆண்டு கேம்பிரிட்ஜிலுள்ள டிரினிடி கல்

பே. அ. முத்தையா

லூரியில் பயின்றார். அங்கு அவருக்கு, ஆர்தர் ஆலம் என்ற நல்ல துணைவனை சிநேகிதராகப் பெற்றார். இன்னும் டென்னிஸனுக்கு நல்ல மனாக்கங்கொண்ட நண்பர்களும் கிடைத்தனர்.

1829-ம் ஆண்டு, இவரும் இவரது சகோதரரும் சேர்ந்தியற்றிய இரண்டு சகோதரர்களின் கவிதைகள் என்ற நூலை வெளியிட்டார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 'டிம் பக்கு' என்னும் கவிதை இயற்றினர். இந்த இயற்றியதற்காக டிரினிடி காலேஜ் உபஅத்யட்சகரிடமிருந்து பரிசு பெற்றார். பின்னர், 1830-ம் ஆண்டு பாடற்குரிய கவிதைகள் வெளிவந்தது. 1832-ல் 'ஓயினன்' 'தாமரை கன்னிகள்' போன்ற கிறேக்க கதைகளை மொழிப் பெயர்த்து வெளியிட்டார். இந்நூற்களில் இயற்கை எழிலைத் திறமையாக தீட்டியிருக்கின்றார். இதனல் இவரது புகழ் பரவ முற்பட்டது. இக்காலத்தில இவர் இயற்றிய கவிதைகளைபற்றிய பல அபிப்பிராயங்கள் வெளிவந்தன. சிலர் இவரை பாராட்டினர். வேறு சிலர் பொறுமைக் கொண்டு தூற்றினர். இன்னும் சிலர் இவருடைய கவிதைகள் பிழை என எதிர்க்கவும் முற்பட்டனர். எதிர்ப்பினல் டெனிஸன் பத்தாண்டுகள்வரை கவிதைகள் இயற்றாமல் வாழ்ந்தார். இக்காலத்தில் அரசியல், விஞ்ஞானம் போன்ற கார்லைலின் தூண்டுதலினல் சமூகம் தத்துவ ஞானம் போன்றவைகளை ஆய்ந்து வந்தார்.

1842-ல் 'ஆர்தரின் மரணம்' என்ற கவிதைகள் வெளிவந்தது. இவருடைய திறமையை அறிந்த வோர்ட்ஸ் வொர்த் என்ற கவிஞரால்புகழப்பட்டார். 1850ல் எமிலி செல்வுட் என்ற மங்கையை திருமணம் செய்து கொண்டார்.

பின்னர் இவர், ஞாபகின்னம்ஓடே, மாட் விளக்கின் ஒளிபழங்காலத்துறவி, அக்பரின்கவு, உலிஸஸ் முதலிய கவிதை நூற்களும், மேரி அரசி, ஒரோல்டு, பெக்கட், முதலியநாடகங்களும் இயற்றினர். ஆனல் இவர் எழுதிய நாடகங்களை அக்கால மக்கள் விரும்பவில்லை, இதனல் நாடகத்துறையில் தோல்வியடைந்தார்.

ஈற்றில் 1892-ம் ஆண்டு அமைதியுடன் இயற்கை எய்தினர். ஆனல் அவருடைய புகழ் அழியவில்லை. இன்று அவரை உலகமே போற்றுகின்றது.

இந்த நிலை ஏன்?

வீடுகட்டித் தருபவருக்கு
வீடு இல்லை; சோறு தரும்
விற்பன்னர்க்கு உணவுமில்லை; ஏன்?
மாடு மேய்த்துப் பால் கறக்கும்
மாதவர்க்குப் பாலும் இல்லை
பாடுபடு தொழிலாளர்க்கு

"தனி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்கம்:

வெற்றிலையும் தீமைகளும்

நம் நாட்டில் வெற்றிலை உண்ணும் பழக்கம் சர்வசாதாரண வழக்கமாகி விட்டது. மங்கல சுமங்கல காரியங்களுக்கு வெற்றிலை முதலிடம் வகிக்கிறது. சிலர் ஏதாவது கொண்டாட்டங்களில் மாத்திரம் வெற்றிலை மெல்லுவார்கள். சிலர் இரவு -பகல் முழுவதும் பாவிக்கப் பழகிவிடுகின்றனர். சிலருக்கு வெற்றிலை இல்லாவிடில் நித்திரை கூட வராது. இந்த நிலையில் வெற்றிலை பாவிக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. வெற்றிலை பாவிப்பதால் பல நன்மைகள் உண்டு எனச் சிலர் மற்றவர்களைப் பார்த்துக்கூடப் பாவிப்பார்கள் வெற்றிலையால் ஏற்படும் தீமைகளை மக்கள்-ஏன் மாணவர்கள் கூட உணருவதாகத் தெரியவில்லை. வெற்றிலை உண்ணுவதால் மனிதனுக்கு தீமையேயன்றி நன்மைகள் இல்லையென்பது திடமான உறுதியாகும். வெற்றிலையில் "பிக்குரின்" (Piqerne) என்ற நச்சுப் பொருளும் பாக்கில் 'அறக்கைடின் ஆக்கொலின், (Arecaidine Arcoline) என்ற நச்சுப் பொருளும் உண்டு.

என். பி. கனகலிங்கம்

வெற்றிலைக் குதப்பல் பற்களின் மேற் சருமத்தைப் பாதித்து பற்களின் உற்குழியிலிருக்கும் உயிரணுக்களைச் சாகடித்துவிடுகிறது. அதனல் நோய் தோன்றுகிறது. புண்கள் ஏற்படுகின்றன. பற்களின் உட்குழியிலும், இடை வெளிகளிலும் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணும்பு படிந்து உறுத்துவதோடு அழிக்கவும் செய்கின்றன. பற்களின், ஈறுகள் தடித்து, பற்களைச் சுற்றி இரத்தம் கசிவதோடு பற்களுக்கும், ஈறுகளுக்கும் நடுவிலிருந்து சீழ் (Serum) வடியத் தொடங்கும்.

அடிக்கடி வெற்றிலைபோடு பவர்களுக்கு வாய் உட்புறம் சிவந்தும் தடித்தும் காணப்படுகிறது. நாவும் உள்ளாயும் அதிகம் பாதிக்கப்பட்டு புற்றுநோய் ஏற்படுத்தும் நிலைக்கு வந்துவிடுகிறது. புற்றுநோய் அதிகமாக வாயில்தான் தோன்றுகிறது. வாயில் புற்றுநோய் தோன்றுவதற்குப் பிரதம காரணமாக, பாக்கும், சுண்ணும்பும் வெற்றிலையும் சேர்ந்த கலவையே சாதகமாகிறது எனப் பல் வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

வெற்றிலை உபயோகித்தால் பசித் தீபனம் இல்லாமல் போகிறது. சில வேளைகளில் அஜீரணம், வயிற்றோட்டம், பேதி முதலிய நோய்களும் வெற்றிலையால் ஏற்படுகின்றன. வெற்றிலை கிளர்ச்சியையும், மகிழ்சிகரத்தையும் ஏற்படுத்துகின்றது. உடலில் உட்கொள்ளும் வெற்றிலை மனிதன் ஆயுளைக் குறைக்கின்றது. அத்துடன் புத்திக் கூர்மையைக் கெடுத்து, நரை உண்டாக்கும் என எனடாக்டர். வி. எல். மாம் (Dr. V. L. Mam) தமது ஆராய்ச்சியின் முடிவுரையில் கூறியுள்ளார்.

சுண்ணும்பும், புகையிலையும் சேர்ந்த கலவை வெற்றிலைக் குதப்பலை (Mixture) அதிகம் வாயில் அடக்கி வைத்திருப்பது, வாயின் உட்சருமங்கள் தடிப்பது, இவற்றைப் பொறுத்து புற்றுநோய் ஏற்படுகின்றது. மெல்லும் பொருட்களின் சாரத்தை (Essence)க் காட்டிலும் அவை பற்களின் ஈறுகளை உறுத்துவதுதான் அதிக அபாயத்தை ஏற்படுத்துகின்றது என வைத்திய நிபுணர்கள் கூறியுள்ளனர். புற்றுநோய் வாயில் மட்டுமல்ல குடல் முதலிய உட்பாகங்களிலும் ஏற்பட்டு, முடிவில் மனிதனுக்கு ஆபத்தை தருகின்றது.

நம் நாட்டில் மாணவர்கள் கூட வெற்றிலை போடும் பழக்கத்தைக் கற்றுவிட்டார்கள். இப்பழக்கம் அவர்கள் இளமை சுகவாழ்வுக்கு முடிவு வைக்கிறது. ஆகவே நாம் இப்பழக்கத்தை உடன் கைவிட்டு, ஏனையவர்களுக்கும் தீமைகளைக் கூறித் திருத்த முயல வேண்டும்.



இவர் யார் தெரியுமா? எனன பொக்கை வாய் தாத்தா என்றுதானே கூறுகிறீர்கள்: இந்த நூற்றுண்டு கண்ட அரசியல் மேதைகளில் ஒருவரான சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் இவர் சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். காந்தி அண்ணலை அரை நிர்வான பக்கிரி என்று வர்ணித்து மேன்மை தங்கிய மன்னர் பிரானின் சாம்ராஜ்யத்தை நான் கலைக்கப் போவதில்லை என்று கூறிய இவரை நாமெல்லாம் மறந்துவிட முடியாதல்லவா?



இலங்கை அழகு ராணியாகி, உலக எழில் ராணிப் போட்டியில் பங்குபற்றிப் புகழ் பெற வேண்டுமாயின், குளிக்கும் உடையுடன் அல்லது மேலங்கியுடன் அல்லது சேலை கட்டிக் கொண்டு எடுக்கப்பட்ட உங்கள் முழு உருவப் படத்தைக் கிழக்கு கானும் முகவரிக்கு உடனே அனுப்புங்கள்.

—ஒரு பத்திரிகைச் செய்தி

தமிழ்ப் பெண்களே! மானங்காக்கும் மறக்குலப் பெண்களே! கவரிமான் கன்றுகளே! உங்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்படைகளையும் வீசி எறியுங்கள். உலகத்தின் முன்னர் உங்கள் இயற்கை அழகைக் காட்டுங்கள். புகழ் பெறுங்கள். ஹோலிவூட் நடிகையாகுங்கள். பணம்சேருங்கள்'' என்றெல்லாம் மேலும் விளம்பரம் செய்யத் தெரியாமல் விட்டுவிட்டார்கள். பாவம்! அந்தப் பத்திரிகைகளுக்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதுதான் பணம்! எந்தப் பெண்களின் மானம் போனால்தான் என்ன?

அவர்களுக்கென்ன? கறுவாக்காட்டிலே மானத்தை விற்கத்தக்க அவலட்சணங்கள் இருக்கின்றன. அவற்றை நிர்வாணக் கோலத்தில் படமெடுத்து, உயரநீள அகலத்தை விளம்பரப் படுத்திப் பத்திரிகையில் போட்டு விட்டால், ''சரக்கு'' விலைபேசித் திரியும் வாலிபர் கூட்டம் மட்டுமென்ன, கிழவர் கூட்டமே தினமும் பத்திரிகையை வாங்கி நாக்கொழுகப்பார்த்துச் சுவைப்பார்கள். அழகைப் பற்றியே அவர்கள் மறந்துவிடுவார்கள். பால் கவர்ச்சியில் உந்தப்பட்டவர்கள் அழகைப்பற்றி ஏன் தேடப்போகிறார்கள்? அதனால்தான் போலும் டி. எச். லோறன்ஸ் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளன் 'பால் கவர்ச்சியில்லாமல் அழகு கிடையாது' என்று எழுதினான்.

படம் வெட்டிச் சேர்க்கும் வேலையில் இளைஞர்களும், கிழவர்களும் ஆரம்பிப்பார்கள். இவளுக்கு முதல் பரிசு, அவளுக்கு முதல் பரிசென்று அலுவலகங்களிலும், தெருக்களிலும் பிய்த்துப் பிய்த்துப் பேசுவார்கள். போட்டிக்கு தமது தேர்வுகளையும் அனுப்புவார்கள். பெண்கள் மட்டும் சும்மா இருந்து விடுவார்களா? பங்குபற்றுபவர்களும், மற்றப் பெண்களில் பாதிப்பேரும் ஒவ்வொருத்தியின் அழகையும் பார்த்துப் பொறுமைப் படுவார்கள். நான் முதலாவதாக வந்தால் கொத்தலாவலையென்ற மன்மதனோடு ஆடித்திரியலாம் என்று அங்கலாய்ப்பார்கள். மற்றைய பாதிப் பெண்கள் ''மானங்கெட்ட வேசிகள்'' நிர்வாணக் கோலத்தில் ஆடப் போகிறார்களாம் என்று பாதிப் பொறுமை கலந்த போக்கில் பேசுவர். ஆண் பெண்களின் கவனம் நேரமெல்லாம் இந்தப் பால் கவர்ச்சியான நிர்வாணக் கோலங்களை ஏலங் கூறும் கசாப்புக்கடைத் தொழிலில் ஈர்க்கப்படுகிறது. பத்திரிகைகளுக்குப் போதிய பணம் சேருவதுதான் மிச்சம்.

''மக்களின் கவனம் அரசியலில் அதிகம் ஈடுபட்டால் மூட நம்பிக்கைகளிலும், மதத்திலும் அவர்கள் மனப்போக்கை இழுத்துவிடும். வெற்றி பெறுவாய்'' என்றான் மறவழியில் அரசியல் வகுத்த சாணக்கியனும், மக்கியாவலியும். ''பத்திரிகைகளிலே போதியவிஷயமில்லை என்ற கவனம் மக்களுக்கு ஏற்பட்டால் மக்களுக்குப் பால் கவர்ச்சி ஏற்படத்தக்க வழிகளிலே மனப்போக்கைத் திருப்பவல்ல அழகுராணிப் போட்டிகளை ஏற்படுத்துங்கள். வெற்றிபெறுவீர்கள்'' என்கிறான் 'சந்தேகி'

ஃஃ

சினிமாத் தியேட்டர்களிலிருந்துமூட்டைப் பூச்சிகளை வெளியேற்றுங்கள்—யாழ்ப்பாணம் மாநகர சபையில் திரு எம். கார்த்திகேசன்.

மூட்டைப் பூச்சி வர்க்கத்தைப்பற்றியே நன்கு உணரவல்லவர்கள் கம்யூனிஸ்டுகள்தான். இன்று மூட்டைப் பூச்சிகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. அவற்றிற்கு இந்த மூட்டைப் பூச்சி அரசாங்கமும் உதவி செய்கிறது. அல்லது தொழிலாளர்களை மட்டந்தட்ட அரசாங்கம் முதலாளிமூட்டைப் பூச்சிகளோடு சேர்ந்து பொலீசையும், பட்டாளத்தையும் காட்டிப் பயமுறுத்தி மட்டந்தட்ட முடியுமா?

தொழிலாளர் கோரிக்கைகளை ஒடுக்குவதற்கு மற்றோர் பெயர் 'ஹிட்லரிஸம்' இரண்டாவது உலகயுத்தத்தின் முன்னர் 'ஹிட்லர்' தொழிற் சங்க உரிமைகளையெல்லாம் பறித்தானும். இங்கேயும் ஒருவர் அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன் என்று கொக்கரிக்கிறார். ஆனால் உள்ளுக்குத் தமது பதவி போய்விடுமோ என்று அச்சமும் உண்டாம். அவர் ஒரு புத்த மதத்தவராம். புத்த பிக்குகளின் முன்னர் அடிபணிவாராம்.

தியேட்டர் மூட்டைப் பூச்சிகளைப்பற்றிக் கவனம் எடுத்தமைக்குத் திருகாத்திகேசனுக்கு நன்றி கூறுகிறான் 'சந்தேகி' தியேட்டர் முதலாளிகட்கும் மூட்டைப் பூச்சிச் சுபாவந்தான் இன்று தலையெடுத்துள்ளது. அல்லது இரண்டு மூன்று மணிநேரமாவது இந்த 'ஹிட்லரிச' ஆட்சியை மறந்திருப்பேன் என்று தியேட்டருக்குச் செல்லும் ஏழைகளின் இரத்தத்தை மற்றெருவழியாக உறுஞ்சுவதற்கு வழி செய்வார்களா? ஒருவேளை தாம் தேர்ந்தெடுக்கும் குப்பைப் படங்களையும் நித்திரை தூங்காது மக்கள் பார்ப்பதற்காக இவற்றை வளர்க்கிறார்களோ?

இலங்கையிலுள்ள இருநூறுக்கு மேற்பட்ட தியேட்டர்களில், கொழும்பிலுள்ள ஒரிரு தியேட்டரை உயிர் நண்பனுகிய மூட்டைப் பூச்சி ஆண்டவன் நீக்கமற நிறைந்திருப்பதைக் காணலாம். ஒரு தியேட்டரில் ஒரு லட்சம் மூட்டைப் பூச்சிகள்படி பார்த்தாலும் இரண்டுகோடி மூட்டைப் பூச்சிகள் தினம் சராசரியாக ஏழு மணிநேரம் எத்தனை இருத்தல் இரத்தத்தை உறுஞ்சவல்லன என்பதை உங்கள் சுகாதார மந்திரியிடம் எழுதி கேளுங்கள்.

பணக்கார மூட்டைப் பூச்சிகள் இருக்கும் இடங்களை மட்டும், இந்தத் தியேட்டர் முதலாளி மூட்டைப் பூச்சிகள் சிறிது கவனமாகப் பார்த்துக் கொள்ளுகிறார்கள். இதுதானுக்கும் வர்க்கம் என்பது!

யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள தியேட்டர்கள் யாவையும் 'சந்தேகி' அறிவான்

இந்த இடங்களிலுள்ள மூட்டைப் பூச்சிகளுக்கெல்லாம் 'சந்தேகி' இரத்தானம் செய்துள்ளான். அதனால் நோயாகி டாக்டர் மூட்டைப் பூச்சிகளுக்கும் செலவழித்துள்ளான்.

திருகோணமலையிலே ஒரு தியேட்டரில் பல பிரிவுகள் பிரிக்கப்பட்டு, கொழும்பிலும் பார்க்க அதிக விலை ஆசனங்களுக்கு அளவிடப்படுகிறது. கோடிக் கணக்கில் திருகோணமலை மக்களின் பணத்தைக் குடித்த அந்தத் தியேட்டர், கட்டப்பட்ட அன்று தொடக்கம் அதே நிலையில், அதே சீட்டுக்களில் அதே மூட்டைப் பூச்சிகளின் பரம்பரைகள் வளர்ந்து வருவதை அங்குள்ள அனைவரும் அறிவர்.

நகரசபை, மாநகரசபைகளில் 'சனிட்டரி' இன்ஸ்பெக்டர்கள் உள்ளார்களாம். இந்த மூட்டைப் பூச்சிகளைப் பற்றியெல்லாம் கவனமெடுப்பதில்லையாம். அவர்களையும், அவர் மனைவி குடும்பத்தவர்களையும் இந்தத் தியேட்டர் மூட்டைப் பூச்சிகள் கைக்குள் வைத்துக்கொள்வதற்காக 'ஒசிலே' படம் பார்க்க அனுமதிப்பார்களாம். இந்த மூட்டைப் பூச்சிகளையெல்லாம் அகற்றவல்லவழியை இந்த நகரசபைகள் செய்யாவிட்டால் 'சந்தேகி' வேறோர் வழியை நேயர்கட்கெல்லாம் மற்றெருமுறை சொல்லித் தருவான்.

—'சந்தேகி'

கழகச் செய்திகள்

கணக்கப்பிள்ளைக்கு பிரிவுபசாரம்

ஹொப்டன் பழைய ஸ்டோர் டிவிஷன் தோட்டத் தொழிலாளர்கள் மேற்படி தோட்டத்தில் கணக்கப் பிள்ளையாக பணியாற்றி வந்த திரு இராசையாவுக்கு சென்ற 6-3-55ல் ஓர் பிரிவுபசாரக் கூட்டம் நடத்தினர்.

இ. ஜ. கா. தோட்டக் கமிட்டியின் சார்பாகவும் தொழிலாளர்கள் சார்பாகவும் திரு. இராசையாவுக்கு வெள்ளிக் கிண்ணமும் இரு வெள்ளிக் கூசாக்களும் பரிசாக அளித்தனர். திரு இராசையா தொழிலாளர்களின் நல்வாழ்வில் விசேஷ அக்கறையுடையவராய் இருந்து தொழிலாளர் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டு வந்ததை பலர் பாராட்டிப் பேசினர். மாதர் சங்கத் தலைவி திருமதி மாரியாய் மாதர்களின் சார்பாக நன்றி கூறி மாலை அணிவித்தார்.

———

அங்குலானை தமிழர் நலவளர்ச்சிக் கழகம்

அங்குலானைத் தமிழர் நலவளர்ச்சிக் கழக செயற்குழுவின் நான்காவது கூட்டம் சென்ற 27-3-55-ல் தூணைத் தலைவர் திரு ந. விசயசிங்கம் தலைமையின் கீழ் தொடங்கியது. கழகச் செயலாளரால் கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆட்சிக் கருமமொழிக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க பகுதிகள் உத்தியோக பதவிப் பெயர்கள் நாமாவலி (தமிழ்) (ஆட்சிச் சொல் அகர வரிசை)யில் திருத்தம் செய்ய அதிகம் இடமிருக்கிறதென்றும் அத்திருத்தத்தைக் கழகத்தின்மூலம் செய்து அரசகருமமொழிக் குழுவினருக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சியம்பளாகஸ்கொட்டுவ விளையாட்டுப் போட்டி

குருணகல் பகுதியிலுள்ள சியம்பளாகஸ்கொட்டுவ அரசினர் தமிழ்ப் பாடசாலையில் மேற்படி பாடசாலைப் பெற்றோர் - ஆசிரியர் சங்க ஆதரவில் 31-3-55ல் தலைமை ஆசிரியர் திரு நா. தங்கதுரை தலைமையில் பச்சை சிகப்பு மஞ்சள் விடுதி மாணவ மாணவிகளின் உடற் பயிற்சி ஆரம்பமாயது. அவ்வமயம் தலைமை ஆசிரியரால் உடற்பயிற்சியின் அவசியம்பற்றி ஓர் விடயம் பேசப்பட்டபின் முறையே நீள உயரப் பாய்தல், தடை ஓட்டம், சாக்கோட்டம், குரங்கோட்டம், மூன்றுகால் ஓட்டம், பழம் சேர்த்தல், ஊசிநூல் கோர்த்தல், நங்கூரம் தக்கதிரை, பனிஸ் கடித்தல் நீந்துதல் முதலியவற்றில் திறமைகாட்டிய மாணவர்கட்கு கிராமாதிகாரி ஜனாப் ஐ. எல். எம். ஹனிபா அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது. உரமான உடலில் தான் உறுதியான உள்ள முண்டு என்னும் விடயம் பற்றி ஆசிரியர் எம். ஐ. அமீர்தீனின் உபன்னியாசத்துடன் கூட்டம் முடிவுற்றது.

———

மாணவ மன்றம்

அட்டாளச்சேனைச் சாதனை பாடசாலை மாணவ மன்றத்தின் இரண்டாவது பொதுக் கூட்டம் சென்ற 25-3-55ல் பாடசாலை மண்டபத்தில் ஏ. எம். பழுலான் தலைமையின்கீழ் எஸ். வை. எம். அப்துல் ஹக்கின் கிராஅத்துடன் ஆரம்பமானது.

அவ்வமயம் அங்கத்தவர்களனைவரும் சமுகமளித்திருந்தனர். காரியதரிசி பி. எம். கபூரின் கூட்டக்குறிப்பு வாசிக்கப்பட்டது. பின் இம்மன்றத்தாரால் ''சாதனை தீபம'' என்னும் மாத வெளியீட்டுப் பத்திரிகை வெளியாக்கப்பட்டது.

மாணவர் கலாவிருத்திச் சங்கம்

கண்டி தலாத்தோய அரசினர் மத்திய கல்லூரியின் 'ஆரம்ப தமிழ்ப் பிரிவு' பாடசாலையில் முதலாம் தவணை இறுதிக் கூட்டம் 31-3-55ல் மத்திய பாடசாலை அதிபர் திரு சி. டி. ஆ. பீ. ஜயவீரபண்டார தலைமையின்கீழ் செல்வன் சிதம்பரம் என்பரால்ஓதப்பட்ட தேவாரத்துடன் ஆரம்பமாயது.

முதலில் சென்ற கூட்ட அறிக்கையை கௌரவ காரியதரிசி செல்வி எம். சரஸ்வதி என்பவரால் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அதன்பின் செல்வி சரோஜினிதேவி தேவதாஸ் என்பவரால் குறத்தி நடனமும், 4ம், 5ம் வகுப்புப் பெண்பிள்ளைகளால் கும்மியும், 5ம் வகுப்பு ஆண் பிள்ளைகளால் 'கண்ணபிரான் தூது' என்னும் விஷயம் சம்பாஷணையும், 4ம் வகுப்பு ஆண்பிள்ளைகளால் 'சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு' நடித்தலும் முறையே நிகழ்த்தினர். ஆசிரியைகள் திருமதி ரி. குருசாமி, திருமதி பி. நடராசா என்பவர்களால் தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டது. திருமதி ரி. தம்பையா ஆசிரியை 'மாணவர் சுகாதாரம்' என்னும் விஷயம்பற்றியும் திரு. வி. எஸ். குருசாமி (தமிழ் பாடசாலைத் தலைமை ஆசிரியர்) 'விடுதலை காலத்தை மாணவர் கழிக்கும் விதம்' என்னும் விஷயம்பற்றியும், திருமதி பி. நடராசா ஆசிரியை 'பரீட்சையும் மாணவர் வேலையும்' என்னும் விஷயம் பற்றியும், செல்வி மாரியாபிள்ளை சரஸ்வதி சுப்பிரமணியபாரதியாரின் சரித்திரத்தைப்பற்றியும் அதி விமரிசையாகப் பேசி முடித்தனர். செல்வன் வேலாயுதம் என்பவரும், செல்வன் செல்வராசா என்பவரும் சங்கீத விருந்தளித்தனர். ஈற்றில் ஆசிரியர் திரு. இராமலிங்கம் 'பரீட்சையும் மாணவர் வேலையும்' என முன்பேசிய விஷயத்தையிட்டுக் குறிப்புரை கூறினர். கடைசியாகப் பாடசாலைக் கீதத்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்

இந்த எழுத்துக்கள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும்சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் மனமுவந்து ரசிகர்களுக்களிக்கும்
புத்தாண்டுப் பரிசு !
ஏககாலத்தில் இத்தீவகத்தே ஒன்பது திரைகளில் வெளிவருகிறுள் விஜயாவின் மிஸ்ஸியம்மா !!

கிங்ஸ்லி — கொழும்பு — வெம்பிளி — கண்டி
சபாயர் — வெள்ளவத்தை — மோடர்ன் — பதுளை
குயின்ஸ்லன் — நுகேகொடை — வெலிங்டன் — யாழ்ப்பாணம் & திருகோணமலை
விஜயா — மட்டக்களப்பு — தீவொளி — நுவரெலியா

தினசரி மாலை 6-00, இரவு 9-30, சனி பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கும்,
ஞாயிறு காலை 10-00 மணிக்கும் காட்சிகள்



உண்மைக் காதல் வஞ்சகமற்றது. எவ்விடத்தும் சமத்துவம் பாராட்டக்கூடியது. உயர்வு தாழ்வு அதனிடமில்லை. வீரத்திற்கும் தியாகத்திற்கும் காதலே பிறப்பிடம். உங்கள் உள்ளத்திற்கு உண்மையான உணர்ச்சியூட்டும் உன்னத சித்திரம்.

ஜெமினி கணேசன்,
சாவித்திரி, ஜமுனா,
தங்கவேலு, நம்பியார், சாரங்கபாணி நடித்த



மிஸ்ஸியம்மா

கதை வசனம்: தஞ்சை ராமையாதாஸ் சங்கீதம்: ராஜேஸ்வரராவ் பின்னணி: லீலா, ராஜா, சுசிலா
டைரக்ஷன்: பிரசாத்

காமினி (கொழும்பு)

இதுவே கடைசி வாரம்!
இன்றைய சிங்கள சமூகத்தின் ஒப்பரிய ஓர் கதையான

அசோகா

மிஸ் புஷ்பாஜனட், சுமதிபிபிலே,
முலியோர் நடித்தது.





காமினி கொழும்பு

22 உ வெள்ளிமுதல் குதூகல ஆரம்பம்!

மதுபாலா, திலிப்குமார், நிம்மி
முதலியோர் நடிக்கும்
மெஹ்பூப்ஸ்

அமார் [ஹிந்தி]

மைலன் [கொழும்பு]

பத்மினி, சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி நடிக்கும்

இலங்கை ஜோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1955 ஏப்ரல் 17ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது